# ‘நான்கு ஆத்ம ஞானிகள்’

இஃது

(1) மலபார் கண்ணனூர்

ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது .புகாரீ தங்கள் வொலிய்யுல்லாஹ் நாயகம் அவர்கள்,

(2) காயல்பட்டணம்

ஹஸ்ரத் உமறுவலிய்யுல்லாஹ் நாயகம் அவர்கள்,

(3) ..............................

ஹஸ்ரத் செய்கு அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு வொலிய்யுல்லாஹ் நாயகம் அவர்கள்,

(4) ..............................

ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலிய்யுல்லாஹ் நாயகம் அவர்கள் ஆகிய இந்நால்வர்களின் ஜீவிய வரலாற்றுச் சுருக்கம்.

—0—0—0—


● ஆக்கியோன்: ●

**எம். ஐ. நூஹு.**

காயல்பட்டணம்.

முதற்பதிப்பு: (ஈஸவீ 1962)
(ஹிஜ்ரா 1382)

உரிமை ஆசிரியருக்கே.

விலை: பிரதி ஒன்றின் விலை, ரூபாய் 2-50

கிடைக்குமிடங்கள்:

(1) அல்-ஹாஜ் பா. சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் [ஸாஹிபு தைக்கா மானேஜர்], தைக்காத் தெரு, காயல்பட்டணம், நெல்லை மாவட்டம், தமிழ் நாடு.

0-0-0-

(2) பி. எஸ். கே. வி. பல்லாக்கு லெப்பை அன் கம்பனி, நிர், 163, இரண்டாம் குறுக்குத்தெரு [தைக்கா கிட்டங்கி] கொழும்பு-11, சிலோன்.

0-0-0-

(3) எச். எம். பி. ஸ்டோர்ஸ்
நிர், 24, ஆண்டர்ஸன் தெரு, மதறாஸ்-1.

# என்னுரை

பரிசுத்த இஸ்லாமியத்தின் பொற்கதிர் பாரெங்கினும் பரந்து அதனால் மக்கள் நலம் பெற தீர்க்கதரிசிகளை அனுப்பிய பின்னர், சிறப்பு மிக்க அவ்லியாக்களை அன்னவர்களினது பிரதிநிதிகளாகத் தோற்றுவித்த எம்மிறைவனுக்கே சகல புகழும் உண்டாக!

கருணையும் சாந்தியும் சாந்த சற்குண சீலர், சர்வரே சர்தார் நபிகள் பெருமான் முதற் கொண்டு இனமித்திர சகாக்கள், சமஸ்த சமூகத்தினர் யாவர் மீதும் சார்க!!

அவ்லியாக்கள் நேர்வழிக்குரிய சுடர் தீபங்களாகவும், இறைவனின் கருணைக்கடல் பெருகக் காரண கர்த்தர்களாகவும் இருக்கின்றனர். அம் மகான்களை நினைவு கூறுமிடத்து, கருணை வெள்ளம் சரமாரி பொழியும். கோரிக்கைகள் நிறைவேறும்.

இறைவன்பால் பரி பூரண பக்தி கொண்டு தூய மனத்தைப் பெற்ற அன்னவர்களைத் துக்கம் துயரம் எதுவும் அணுகா. அவர்கள் எல்லோரையும் போன்று சாதாரண மனிதர்களல்லர். சீர்பெருகி, சீலமொழுகி, சுத்த தெய்வாமிர்த அன்புப் பால் பருகி, ஆனந்தமாய் அவனியில் நடமாடும் நல்லடியார்களாவர். அவர்களுடைய எண்ணிக்கையை வரையறுத்துக் கூற முடியாதிருப்பதே போன்று, அவர்களினது அற்புதானந்த அதி வினோத திருஷ்டாந்தங்களையும் வரையறுத்துக் கூறி விட முடியாது.

'மனிதவர்க்கம் ஒன்றே. அதில் ஏற்ற தாழ்வு எதுவும் கிடையாது' என்று நாம் பொதுவாகச் சொன்னாலும், இறைவன்மீது பரிபூரண விசுவாசமும் பரம பக்தியும் உள்ளத்து நட்பும் கொண்டு அவனை அண்டி வாழும்

உத்தமர்களைச் சிரேஷ்டர்கள் எனக் கூறுதிருக்க எங்ஙனம் முடியும்? சங்கைக்குரிய நபிகள் பெருமானதும் இதர தூதர்ப் பெரு மக்கள் அனைவரினதும் அடிச்சுவட்டின்மீது வாழ்க்கைத் தரத்தை அஸ்திவாரமிட்டவர்களான அவ்வுத்தமர்களின் அந்தஸ்து மகத்துவ மிக்கது. சிறப்பால் உயர்வு பெற்றது.

ஜெகமனைத்துக்கும் இறுதித் தூதராய், வாழ்க்கையின் வழிகாட்டியாய்ப் பார்ப்புகழ அவதரித்த எம் பெருமானார் நபிகள் திலகம் அவர்களோடு நபித்துவம் முடிவுற்றமைக்காகவும், இறுதி நாள் பரியந்தம் நபிகள் இல்லாமைக்காகவும் வருந்தித் துயரடைந்து வந்த பார்தனிலே அவ்லியாக்களென்னும் மகிபர்கள் தோன்றியதனால் அதன் வருத்தமும் துயரமும் நீங்கி மனச்சாந்தி அடைந்தது. பார் முழுவதும் படர்ந்திருந்த அஞ்ஞான இருள் நீங்கி மெஞ்ஞான ஒளிச்சுடர் சுழன்று வீசிற்று. அதில் அரக்கர்களாகவும் கொடுங்கோலாட்சி புரிந்த மதிகெட்ட மன்னர்களாகவும் வாழ்ந்தோரினதும் திமிர் கொண்ட அதிகார புயங்கள் அன்னார்கட்காகத் தாழ்டைந்தன. அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானம் பிறக்கவே, அறியாமை, அவிவேகம், மௌடீகம் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து மாண்டொழிந்தன. ஏகத்துவக் கொள்கையை உலகறிய பரப்ப அன்னவர்கள் பிரதம ஆயுதமாகக் கொண்டுள்ள அருள் உபதேசமும் அரும் பெரும் அற்புதானந்த அதி வினோத திருஷ்டாந்தமும் உண்மையே உருவமானவை யாயும் தெய்வ சம்மதம் பெற்றவை யாயும் இருந்தன.

இறைவனின் மெய்யன்பர்களான அவ்லியாக்களைக் குறித்து அவ்விறைவன் தனது திவ்விய திருமறையில் ''அல்லாஹ்வின் அவ்லியாக்கள், தங்கள் மீது அச்சமில்லை; அன்னவர்கள் கவலை கொள்ளவுமாட்டார்கள்'' (அல்—குர்ஆன்; 10–62) என்று கூறியிருப்பதிலிருந்து, அன்னோரின் சிறப்புக்கோர் எல்லை வகுக்கப்படவில்லையென்பது நன்கு புலனாகும்.

இம்மை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மறுமை வாழ்க்கையைச் சுவீகரித்துக் கொண்ட அவ்லியாக்கள் மரணப் படகிலேறி கல்லறைக் கரை சேர்ந்து விட்டாலும், இறையருளும் கருணை மழையும் விண்ணுலகிலிருந்து இம் மண்ணுலகுக்கு வர அவ்விறைவனை வேண்டிய வண்ணமிருப்பர். அவர்கள் ஆற்றிய அரும் பணிக்காக நானிலத்தின் கண் அவர்களது பூதவுடல் மறைந்திட்ட போதினும் புகழுடல் மறையவில்லை. என்றென்றும் அது அவர்களுக்கு அழியாப் புகழைச் சேர்த்த வண்ணமிருக்கின்றது எனக் கூறின் மிகைப்படா.

மக்கள் நினைவிற் கொள்ளத் தக்க அறவழி நின்று அகத்தூய்மைப் பெற்ற அம் மகான்களின் திருப் பணிகள் ஒவ்வொன்றும் பாராட்டுதலுக் குரியன வென்றும் மாத்திரம் சொல்லி விட்டால் போதாது, யாவரும் சத்தொழுக்கம் பேணி சாசுவதமாக இறையன்பில் லயித்து நிற்கக் கூடிய உயர்தரப் படிப்பினைகளும் அவற்றில் காணக் கிடக்கின்றன வென்றும் சொல்ல வேண்டும்.

நாம் எளிதில் நினைவிற் கொண்டு நலமொடு நல்வழியொழுகி நம் வாழ்க்கையில் நலன் காண நம்மிறைவன் நம்மீது கருணை கூர்ந்து நம் மூதாதையர்களிலே எண்ணில் அடங்காத அவ்லியாக்களை ஈட்டித் தந்தது அவனது கருணையின் எடுத்துக் காட்டாகும் என்பதில் எள்ளளவும் சந்தேக மன்று.

'நான்கு ஆத்ம ஞானிகள்' எனும் எனது இச் சின்னஞ்சிறு ஏட்டிலே, (1) மலபார் கண்ணனூர் ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது புகாரீ தங்கள் வொலி நாயகம், (2) தமிழகத்தே நெல்லை மா வட்டம் காயல்பட்டணம் ஹஸ்ரத் உமறொலி நாயகம், (3) . . . . . . . . . . . . . . . ஹஸ்ரத் செய்கு அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் (4) . . . . . . . . . . . . ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹ் வொலி நாயகம் ஆகிய நான்கு ஆத்ம ஞானிகளின் ஜீவிய வரலாற்றுச் சுருக்கம் இடம் பெற்றுள்ளது. எனவே, மறைந்த மகான்களின் மங்காப்

புகழ் யாவருக்கும் தெரிந்து, அன்னவர்கள் நோக்கிச் சென்ற திசையறிந்து, நம் வாழ்க்கைப் பாதையை அத்திசையினூடே செலுத்தி, இகபரமிரண்டிலும் இன்புற்று வாழ வேண்டுமெனும் அடிப்படையில் தீட்டப்பட்ட ரசமான வசனக் கோவையில், அம் மகான்களைப்பற்றிய கரை புரண்டோடும் கருணை வெள்ளம் எவருடைய உள்ளத்தையும் தொடாதிருக்க மாட்டாதென்பது என் கருத்து.

● ஆக்கியோன் ●

நன்றி

இந்நூல் உருவாகுவதற்கு என்னைப் பல வருடங்கள் தொடர்ந்து ஊக்குவித்த எனது ஆப்த நண்பர் கனம் அல்—ஹாஜ் தை. மு. சு. செய்கு முஹம்மது ஸாலிஹ் அவர்களுக்கும், இதற்குத் தெளிவான ஆதாரங்கள் திரட்டித் தந்துதவிய பெரியார் மகா கனம் அல்—ஹாஜ் பா. சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் காதிரீ அவர்கள், அல்—ஹாபிள் கண்ணுப்பிள்ளை முஹம்மது ஸதக்கத்துல்லாஹ் ஆலிம் அவர்கள், கனம் பா. மு. மஹ்மூது ஸுலைமான் லெப்பை ஆலிம் அவர்கள், கனம் அல்-ஹாஜ் பி. எஸ். முஹம்மது ஸுலைமான் அவர்கள், கனம் அல்—ஹாஜ் எஸ். ஓ. ஹபீபு அவர்கள், கனம் அல்—ஹாஜ் பி. எஸ். அப்துல் காதிர் அவர்கள், கனம் அல்—ஹாஜ் க. வி. செ. முஹ்யித்தீன் அப்துல் காதிர் அவர்கள் ஆகிய நண்பர்களுக்கும் எனது மனமுவந்த நன்றி உரித்தாகுக!

● ஆக்கியோன் ●

காயல்பட்டணம்

10 4 62.

★

## முகப்பு அட்டை விளக்கம்

தென்னக நெல்லை மாவட்டம், காயல்பட்டணத்தில் தைக்காத் தெருவில் அமைந்திருக்கும் ஸாஹிபு தைக்காவின் அழகியதோர் தோற்றம் இது. இங்குதான் அல்—ஆரிபு பில்லாஹ் கௌரவ ஹஸ்ரத் உமரொலி நாயகம் அவர்களும், அன்னவரின் அன்பு மைந்தர் காருண்ய மேதை கௌரவ ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் அவர்களும் அடங்கியுள்ளனர்.

(1)

பிறப்பு: [A. H.] 1163, கி. பி. 1751
மறைவு: [A. H.] 1216, கி. பி. 1804

(2)

பிறப்பு: [A. H.] 1191, கி. பி. 1775
மறைவு: [A. H.] 1272, கி. பி. 1856

★



மலபார் கண்ணனூர் ஜாமிஆ மஸ்ஜிதின் வலது பக்கத்திலுள்ள, மாட்சிமைமிக்க கௌரவ ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது புகாரீ தங்கள் வொலி நாயகத்தின் புனிதப் பொன்னுடலைத் தாங்கி நிற்கும் பொற் பூங்காவின் தோற்றம் இது.

பிறப்பு:- A. H. 1144

மறைவு.- A. H. 1207

உள்ளே


| பக்கங்கள்: | பாடங்கள்: |
|---|---|
| | முதல் ஆத்ம ஞானி |
| 1–16 | ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது புகாரீ தங்கள் வொலி நாயகம். |
| | இரண்டாம் ஆத்ம ஞானி |
| 17–26 | ஹஸ்ரத் உமறொலி நாயகம். |
| | மூன்றாம் ஆத்ம ஞானி |
| 26–84 | ஹஸ்ரத் ஸெய்கு அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம். |
| | நான்காம் ஆத்ம ஞானி |
| 85–97 | ஹஸ்ரத் ஸெய்கு முஹம்மது ஸாலிஹ் வொலி நாயகம். |
| 1–38 | மெஞ்ஞான புலம்பல் எனும் திருப்பாடல்கள். |
| 1–6 | காரணமாலை. |
| 1–2 | கல்பைக் கழுகினாலே எனும் பேரின்பக்கவி. |

கண்டு மனம் உடைந்தார். தம் வருகையைக்கண்டு மகிழ வேண்டிய அன்னவர்கள் மாறாகத் தம்மை இகழ முற்பட்டார்கள். மன்னன் தன் படை பட்டாளங்களுடன் புடைசூழ்ந்திருக்கையில், நபி பெருமானின் இல்லத்துடையவர்கள் எனப் பொருட்படும். 'அஹ்லுல் பைத்' களுள் ஒருவர் தம் நாட்டுக்கு விஜயஞ் செய்திருக்கிறார் என்று கேள்விப்பட்டபோது, தன் சைனியத்தோடு அப்பெரியாரையணுகி, 'நீர் யார், உமது நாமம் என்ன' என்று வினவினார். 'நான் நபி பெருமானின் வீட்டையுடையவன், ஸெய்யிது மஹ்மூது என்பது எனது நாமம்' என்று மன்னனுடைய வினாவுக்கு விடை யளித்தார் அப்பெரியார். 'எனது இல்லத்துடையவர்களை நரக நெருப்புத் தீண்டாது' என்று நபி பெருமான் கூறியதற்கேற்ப நீர் கூறுவது உண்மையாக இருப்பின், உம்மை இவ்வுலக நெருப்பிலிட்டுப் பரீட்சை பார்த்தறிவோம்; நெருப்பு உம்மைக் கரித்திடாதிருக்குமானால் சத்தியவானாகஉம்மை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்றார். மன்னனுடைய குறுகிய எண்ணத்துக்கிணங்கிய பெரியார், ஏது நேரிடினும் உண்மையை ஒருக்காலும் மறைத்துவிடமுடியாதென்ற அசையாத நம்பிக்கையில் ஸ்தரமாக நின்றார். சுண்ணாம்புக் காளவாய் போன்ற இடையறாது நெருப்பை உட்கொண்டிருக்கும் மன்னனுடைய பென்னம்பெரிய ரொட்டிப் பரணியின் வாயினூடே திணிக்கப்பட்டும், நெருப்பு அறவே வெளியிற் செல்லாதவாறு சுற்றுமுற்றும் பாதுகாக்கப்பட்டும் வந்த பெரியார் மூன்று தினங்கள் வரை அந்த அக்கினிக்குண்டத்தில் சிறைப்படுத்தப் பட்டிருந்தார். மன்னனின் ஆக்ஞைக்கேற்ப மூன்று தினங்களுக்குப் பிறகு அவரை விடுவிப்பதற்காக ரொட்டிப்பரணியின் வாயில் திறக்கப்பட்டபோது, நறுமணத் தூபவாடை உள்ளிருந்து வெளிவருவதை எல்லோரும் கண்டு பெருமிதங் கொள்ளலானார்கள். உள்ளிருப்பவரின் கதி என்ன வென்பதை உற்றுநோக்குமிடத்து, திருகஃபா திசையை நோக்கி பக்திப் பிரவாகத்



தோடு இறைவனை வேண்டிய வண்ணம் தொழுது கொண்டிருந்த அப்பெரியாரது பரிசுத்த உடம்பிலோ அல்லது ஆடையிலோ எத்தகைய நெருப்பும் படியாதிருப்பதைப் பார்த்து மன்னனும் குடிகளும் மிகமிக அதிசயத்திலாழ்ந்தனர். யாவரும் தத்தம் தவறுகளை உணர்ந்து அவர்பால் மன்னிப்புக்கோரி மிக கௌரவமாக மதித்து நடக்கலானார்கள். அன்றுதொட்டு புகாரீ எனும் கௌரவ நாமம் அவருக்குச் சூட்டப்பட்டது. புகாரீ எனும் அறபுப்பதத்துக்கு 'நறுமணப் புகை' என்று தமிழில் அர்த்தங் கொள்ளப்படும். ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது புகாரீதங்களுடைய மூதாதையர்களுள் ஒருவரான ஹஸ்ரத் ஸெய்யிது மஹ்மூது அவர்களுக்கு அன்று நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியின் காரணத்தால் அன்னாரது சந்ததியில் தோன்றிய தம் பேரர்ப் பெருமகன் மதிப்புக்குரிய எம் ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது வொலி நாயகத்துக்கும் விசேடமாக புகாரீதங்கள் எனும்இந்தப்பெயர் புகழ்ப்பட விளங்கிற்று என்க.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே ஹிஜ்ரா 1144வது வருடத்திலே மலபார் இராச்சியத்தின் மேல் பகுதியிலுள்ள அர்த்ரூத் எனும் அந்த்ரோ தீவைச் சேர்ந்த கவரதீவில் பிறந்த நம் ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம் தமது அன்புத்தாயின் மடியில் நல்லொழுக்கப் பயிற்சிபெற்று வளர்ந்தார். பெற்றமனம் நோவாமல் பண்புடன் தாய்ப்பாசம் பேணிப் பணிவுடன் நடந்து வந்தார். காலம் மாறியதும் தம் தந்தையினதும் உற்றாருறவினதும் வாசஸ்தலமான பலபட்டினம் எனும் நகருக்குச் சென்றார். தம் சிரேஷ்ட சகோதரரான ஹஸ்ரத் ஸெய்யிது இபுறாஹீம் வொலி நாயகத்தோடு சிறிது காலம் வசித்தார்.

தமது இராச்சியத்தில் கலைபயின்று கலைச் சமுத்திரம் என்று அவர் தம் கால மக்களிடையே பெயர் வாங்கினார். சட்ட மேதையாகவும், சன்மார்க்கத் தீர்ப்பளிப்

பவராகவும் இருள்படிந்துபோன நெஞ்சத்தில் ஒளி மிளிரச் செய்யும் விசேட சொற்பொழிவாளராகவும் அமைந்தார். கல்வித்துறையில் அவர் அடைந்திருந்த அறிவின் விவேகம் காட்டுத் தீ போல பல நாடுகளுக்கும் பரந்து வீசிற்று. மலபார் இராச்சியத்திலும் தமிழகத்திலும் இலங்கையிலும் மற்றும் பல்வேறுமொழிகள் பேசக்கூடிய நாடுகளிலும் அவருடைய திருநாமத்தை அறியாதோர் எவருமிலர் என்று கூறுமளவுக்கு அவருடைய பெயர் ஓங்கி நின்றது. அரேபிய நாட்டு மக்கள் அவரை நன்கறிந்து அவருடைய கல்வித்திறமையைக்கண்டு மெச்சினர். தத்துவஞானி தைக்கா சாகிபு வொலி நாயகம் ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகத்தைப் பாராட்டிப் புகழும் அரபுக்கவி யொன்றில் ‘அறிவுகள் யாவும் உங்கள் வாயிலிருந்தே நாங்கள் கேட்டுத் தெரிந்தோம்; ஆதலின் ஸெய்யிது புகாரீயே! உங்கள் பாதரட்சையை நாங்கள் சுமப்போம்’ என்று பாடி மகிழ்கின்றார். தம் ஜீவிய காலத்தின் முற்பகுதியில் தாம் ஒரு கலைஞன் என்று மாத்திரம் விளங்கினாரெனினும், அதன் பிற்பகுதியில் அகம் தெளிந்த மாபெரும் ஆத்ம ஞானியாகவும் இறையருள் பெற்ற மகத்தான வொலியாகவும் குதுபாகவும் புகழ்ப்பட விளங்கினார்.

ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம் தமது மூத்த சகோதரரான ஹஸ்ரத் ஸெய்யிது இபுறாஹீம் வொலி நாயகத்தின் ஆதரவின் கீழ் பலபட்டினத்தில் சிறிதாண்டு வாழ்ந்தார். அன்புக்கோர் உறைவிடமாய், நீதிக்கோர் இருப்பிடமாய், வொலித்துவம் பெற்றுப் பொதுஜன செல்வாக்குடன் சிறந்து விளங்கிய பிரசித்தி பெற்ற அன்னவர் தம் சகோதரப் பெரியாரை நன்கு மதித்து உள்ளன்போடு நேசித்து வந்தார். அவரது ஆதரவின் கீழிருந்த சிறிதாண்டு வாழ்க்கையில் மக்களுக்கு நன்மைதீமை விளக்கி நலம் புரிந்து வர தம்



சகோதரரால் நியமிக்கப்பட்ட ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம் எவருடைய உள்ளத்தையும் கவரும் வகையில் நல் விசுவாசத்தோடும் நற் பண்புடனும் தம் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். நலம் தீது பற்றி விளக்குவதிலும் இறைவனை அடைய மக்களை ஊக்குவிப்பதிலுமான இத்தியாதி நல்ல சேவைகளை மேற்கொண்டார். இவ்வாறிருக்க, தமது இயற்கையான நிலைமாறி உள்ளத் தெளிவின் ஆரம்ப நிலை உதயமாயிற்று. படிப்படியாக இறைவனது அருள் சுரக்கவே ஐம்புலன்களையும் கடந்த அருஞ் செயற்களும் புத்திக்குப் புலப்படாத சட்டத்துக்கு முரண்பட்ட புதுப் புது விநோதங்களும் அவரால் வெளியாயின. எனவே, அவரது நிலையில் மாற்றம் கண்ட பொதுமக்கள் உண்மையை உணராமல் அன்னவரை இலேசாகக் கண்டு சகோதரப்பெரியாரின் கவனத்துக்கு எடுத்துச்சென்று முறையிட்டனர். தம் சகோதரப் பெரியாரான ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகத்தின் நிலைமையை ஆழிய நோக்குடன் அவதானித்து வந்த சகோதரர் ஹஸ்ரத் ஸெய்யிது இபுறாஹீம் வொலி நாயகம், பொதுமக்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அதுபற்றித் தீரவிசாரித்தறிந்து தக்க சிகிச்சை செய்வதென்ற முடிவில் அன்னவரை அழைத்து வருமாறு ஒரு சில பணியாளர்களை நியமித்தார். என்றாலும், அன்னவருக்கு எவ்வகையான அவமரியாதையும் உண்டு பண்ணிவிடக்கூடாதென்ற கண்டிப்பான நிபந்தனையையும் விதித்தார். பணியாளர்கள் தங்களுக்கிடப்பட்ட நிபந்தனையை ஏற்று ஹஸ்ரத் புகாரீதங்கள் பால் தூது வந்தனர். அதுசமயம் தங்கள் பெருமகன் துயில் புரிந்துகொண்டிருந்தாராதலால், துயிலெழும்வரை அன்னவருடைய வீட்டை முற்றுகையிட்டுக் கடுங்காவல் புரிந்தனர். அவர் துயிலெழுந்ததும் வெளியிற் சென்றுவிடாதபடி அவரைத் தடுத்து நிறுத்தி அழைத்து வருவதற்காக விழிப்புணர்ச்சியோடிருந்தனர் அப் பணியாளர்கள்.

சிறிது நேரத்திற்குள் ஹஸ்ரத் புகாரீதங்கள் துயிலெழுந்தார். தூது அறிவிக்கப்பட்டது. தம் சகோதர வொலி நாயகத்தின் அழைப்பை ஏற்றவராக 'இதோ நான் வருகிறேன் இன்ஷாஅல்லாஹ், நீங்கள் இங்கே இருங்கள்' எனக் கூறிவிட்டு உணர்ச்சியற்ற நிலையில் வெளியிற் சென்ருர். தூது சென்ற பணியாளர்கள் மீண்டு வராததைக் கண்ட சகோதர வொலி நாயகம் தாமே வந்து பார்க்குமிடத்து அன்னவர்கள் யாவரும் இருந்த இருப்பிலே முடமாய்க் கிடந்தனர். அவர்களிடையே தம் சகோதரர் காணப்படாமையால் நடந்தவை என்னவென்று அவர்களைக் கேட்டார். ''நாங்கள் தூதைச் சமர்ப்பிக்க வந்தோம், அப்போது தங்கள் சகோதரர் துயில் புரிந்துகொண்டிருந்தார்; நாங்கள் விழிப்புணர்ச்சி உடையவர்களாகவே இருந்து, தங்கள் சகோதரர் துயிலெழுந்ததும் தூதைச் சமர்ப்பித்தோம்; இதோ நீங்கள் இங்கே இருங்கள்; இன்ஷாஅல்லாஹ் நான் வருகிறேன் எனச் சொல்லிவிட்டு மறைந்தார்; அது சமயம் தொட்டு நாங்கள் முடமாகி நிற்கவும் சக்தியற்றவர்களாய் விட்டோம்'' என அன்னவர்கள் கூறினர். பணியாளரின் பரிதாப நிலையைக் கண்டு மனம் வருந்திய ஹஸ்ரத் ஸெய்யிது இபுருஹீம் வொலி நாயகம் அன்னவர்களின் ஒவ்வொருவரினதும் கரம் பிடித்தெழுப்பி நிறுத்தினர்; யாவரும் எழுந்து நிற்கவே, 'எனது சகோதரர் அல்லாஹ்வினதும் அவன்தன் தூதரினதும் பாதுகாப்பில் இருக்கிருர். ஆதலின், நீங்கள் யாவரும் அவரிடமிருந்து விடைபெற்றுச் செல்லுங்கள்' என்று கூறி அன்னவர்களை விடுவித்தார். இது ஹஸ்ரத் புகாரீதங்களுடைய ஆரம்பநிலையில் நிகழ்ந்த ஒரு அற்புத நிகழ்ச்சியாகும் என்பது இங்கு நோக்கற்பாலது.

தனிமையிலிருந்து இறை தியானம் செய்தல் உள்ளத்து மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்யும் என்ற அடிப்படையில், தனித்திருந்து தியானம் செய்வதில் அதிக



ஆர்வமுடையவராகவும் உள்ளன்புப் பெருகி உண்மையை உணரும் தன்மையைப் பெற்றவராகவும் விளங்கிய ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம், தமது சகோதரப் பெரியார் ஹஸ்ரத் ஸெய்யிது இபுருஹீம் வொலி நாயகம், அவர் தம் உற்ருர் உறவினர்கள் யாவரையும் விட்டுப்பிரிந்து இறுதியில் தம் தாயகத்தையும் துறக்கலானுர். பலகாலம் தேசாந்தரம் சென்று அறிவுடைய மக்களைக்கண்டு பரமானந்தமடைந்தார். பக்திப் பரவசத்தால் பரலோக வாழ்க்கைக்குப் பலன் தேடுபவர்களைச் சந்தித்து மகிழ்ச்சி பெற்ருர். ''எம்மை நோக்கி வருவோர்க்கு எமது வழிகளைத் துலக்கிக் காண்பிப்போம்'' (அல்—குர்ஆன்: 29:69) எனும் திருமறைப் போதனைக்கிசைந்து உடலாலும் உள்ளத்தாலும் இறைவனைச் நாடிச் சென்று இறுதி இலக்கை அடைந்த பேரின்ப மகாத்மாக்கள் கோடானுகோடி. அன்னவர்கள்தான் ஆத்ம வளர்ச்சி பெற்றுப் பரிபூரணத்துவம் அடைந்த அவ்லியாக்களாவர். அன்னவர்களிலே ஹஸ்ரத் புகாரீதங்களுடைய புகழ்நாமம் அன்று பூத்துக் குலுங்கியது. உள்ளத்தில் இறையருள் குடிபுகுந்துவிட்டதனுலும் அதன் பொலிவு முகத்தில் தேக்கிக் காட்டியதனுலும் தங்களது அங்க இலட்சணம் கம்பீரமான தோற்றமாகவும் எவருடை மனதிலும் அச்சத்தை உண்டு பண்ணுவதாகவும் இருந்தது. கலைமேதை அல்—இமாம் ஹஸ்ரத் மாலிக் உடைய நிலையை ஒத்திருந்தது நமது கலைஞானி ஹஸ்ரத் புகாரீதங்களின் நிலை. தம்மை ஞானுசிரியராய்க் கொண்டுள்ள சீடர்களுக்குச் சொற்பொழிவாற்றும் தோறெல்லாம் திருமறையையும் நாயக மொழிகளையும் மூலாதாரமாக வைத்து ஸூபிய்யாக்களின் அறப்போதனைகளை அறிமுகஞ் செய்து வைத்தார். இதுவும் தவிர, தம் உள்ளத்தில் உதிக்கும் தெய்வ ஞான உதிப்புகளை உருக்கமாக அன்னவர்களுக்குப் போதிக்குமிடத்து, மறுமையை மறந்திட்ட மக்கள் உணர்ச்சி வசப்பட்டு உள்ளம் கொதித்தெழுந்த

னர். வையக பாசத்தை முழுமனதோடு நீக்கி முக்தியடைந்தவர்களாகவும் மாறினர். அறிவீனமெனும் விஷம் ஏறி உயிரிழந்து போகும் தறுவாயில் இருந்த இருதயங்களெல்லாம் அறிவெனும் மகா ஔஷதத்தை உட்கொண்டு புணர் வாழ்வெய்தின சொற்பொழிவால். அவருடைய சொற்பொழிவின் பெருமளவு மறுமை உணர்ச்சிபற்றியே இருந்தது. மறுமை யுணர்ச்சியற்ற எந்த உபதேசமும் பயன்படாதெனும் காரணத்தால் அன்னவர் அவ்வாறு சொற்பொழிவாற்றினாரென்க. ஒவ்வொரு சொற்பொழிவும் ஒவ்வொரு நிகழ்ச்சியை உருவாக்கியது. காலத்துக்கும் சூழ் நிலைக்கும் ஒப்ப மக்களின் நிலையறிந்து சொற்பொழிவாற்றுவதுதான் சொற்பொழிவாளரின் குறிக்கோளாகும். ஆனால், மக்களின் உளங்களில் ஒழிந்திருக்கும் மறைவு எண்ணங்களைத் தீர அறிந்து சொற்பொழிவாற்றும் வல்லமை எல்லோருக்கும் ஏற்படா. அகத்தெளிவு பெற்று வல்லோனை அண்டி வாழும் வல்லமை பெற்றவர்கட்குத்தான் முடியும். இந்த வகையில் ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலிநாயகம் விசேடமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொச்சி நகரிலே பெரிதொரு ஜாமிஆ மசூதி கட்டப்பட்டு வந்தகாலை ஹஸ்ரத் புகாரீதங்களின் இரவு உபன்னியாசங்கள் தொடர்ந்து பல நாட்கள் நடந்தன. உபன்னியாசங்களைக் கேட்கப் பெருந்திரளான மக்கள் பிரசன்னமாயினர். 'யூதர்களும் கிறிஸ்தவர்களும் கூட அன்னவரின் சொற்பொழிவுகளைக் கேட்கத் தவறுவதில்லை. ஓரிரவு யூதர்களில் சனிச்சூர் எனும் தலைவன் உட்பட செல்வச்சீமான்கள் கொண்ட ஒரு குழு விஜயஞ்செய்தனர். 'மறைபொருட்களை மறைவில்லாது வெளியிடும் சுத்த சத்திய அவ்லியாக்களின் வரிசையில் இன்னவர் நிற்க அருகதை உடையவராக இருப்பாராயின், எங்களுடைய தீர்க்கதரிசி (ஹஸ்ரத் நபிமூஸா) உடைய சரிதைப்பற்றி நாங்கள் அச்சபைக்கு



நுழையும் போது அவர் போதித்துக் கொண்டிருக்க வேண்டும்' என அந்த யூதத் தலைவன் தன் மனதில் சங்கல்பஞ்செய்தான். ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம் அன்றிரவு அது சமயம் தொழுகையின் கடமை, நிபந்தனை(பர்ளு, ஷர்த்து)கள் பற்றித் தெளிவுற வியாக்கியானம் செய்து கொண்டிருக்கையில் அந்த யூதக்குழு சபையை அடைந்தனர். எந்த விஷயத்தில் தெளிவுற வியாக்கியானம் செய்துகொண்டிருந்தாரோ அந்த விஷயம் பூர்த்தியாவதற்கு முன்னர், ஹஸ்ரத் நபி மூஸாவுடைய (திருமறை கூறும்) சரித்திரத்தை விளக்க முற்பட்டார். உள்ளங்களைப் பரவசப்படுத்தும் உன்னத கருத்துகளடங்கிய வொலி நாயகத்தின் சொற்பொழிவு யூதர்களைத் திருப்திப்படுத்தியது. தலைவனைத் தடுமாற்றத்திலாக்கியது. முன்பின் சம்பந்தமில்லாத தொடர்ச்சியற்ற இத்தகைய சொற்பொழிவு ஏனையோர்களை அதிர்ச்சியிலாக்கியது. அன்றிரவு நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு முடிவுற்றதும் யாவரும் தத்தம் வீடு திரும்பினர். ஆனால் யூதத்தலைவன் தன் மனதில் ஒழித்துப் பதித்து வைத்துக் கொண்டிருந்த எண்ணத்தை ஒழித்துக்கட்டிவிட்டு நல்லொழுக்கம் பேணி கண்ணியத்தைக் கடைப்பிடித்து வொலி நாயகத்தில் நல்லெண்ணம் கொண்டு அன்னவரின் அருகில் சென்று தன்னையும் தன்னுள்ளத்தில் பதுக்கி வைத்ததையும் தெளிவுபடுத்தினான். தன்னுள்ளத்தில் வெள்ளப் பெருக்கெடுத்தோடும் வண்ணம் நிறைந்த அன்பினால் மிக விலை உயர்ந்த இரண்டு இரத்தினக் கற்களை அன்னவருக்கு அன்பளிப்புச் செய்து, தயவு கூர்ந்து அவைகளை ஒப்புக்கொள்ளுமாறு வேண்டினான். ஆனால், மதிப்புக்குரிய வொலி நாயகத்தின் உள்ளமோ அந்த அன்பளிப்பைப் பெற மறுத்து விட்டது. என்றாலும், தங்களால் கட்டப்பட்டு வரும் ஜாமிஆ மசூதியின் உத்தரத்துக்குப் பயன்படுத்துவதற்காகக் குறிப்பிட்ட ஒரு தேக்குமரத்தைக் கொடுத்துதவுமாறு யூதத் தலைவனை வேண்டினார். அவர் வேண்

டுதலுக்கு மனமிசைந்து, அவர் வேண்டுவது எதுவோ அந்தத் தேக்குமரத்தை நீளம் அகலம் கணக்கிட்டு அளந்து உத்தரத்துக்குப் பயன்படுத்துவதற்குத் தகுதி யான முறையில் கொடுத்துதவினுன். தச்சனை அழைத் துச் செப்பனிடும்படிச் சொல்லப்பட்டது. தச்சன் தன் வேலையில் தவறிழைத்து ஒருமுளம் குறைவாக அதை வெட்டித் தள்ளிவிட்டான். இதனுல் பல்லோருடைய மனமும் புண்பட்டது, தச்சனுடைய தவறைக்குறித்து யாவரும் வருந்திக் கொண்டிருக்கையில் தங்கள்பெரியார் ஒரு நாளன்று மஃரிபுத் தொழுத பின் தறிக்கப்பட்ட அம்மரத்திலேறி சிறிது தூரம் நடந்தார்கள். தங்கள் பெரியாருடைய திருப்பாதம் அதில் பட்டதும் அம் மரம் சிறிது சிறிதாக நீள ஆரம்பித்தது. பின்னர், அம் மரம் உத்தரமாக வைக்கப்பட்டது. நீட்டுக் குறை வில்லாமல் சரியாக இருந்ததைக் கண்ணுரக் கண்டு யாவரும் அதிசயித்தனர். கொச்சி நகரிலே தங்கள் பெரியாரால் கட்டப்பட்ட அம் மசூதி இன்று எவரும் பார்த்தறியக்கூடிய ஞாபகச் சின்னமாக இருந்து வரு கின்றது.

ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகத்தின் அருள் ஞானம் அன்று அவனி முழுவதும் பரவி இருந்தது. மக் களை நல்வழியின் பக்கம் அழைப்பதற்குச் சிறந்த ஒரு வழிகாட்டியாக அவர் அமைந்தார். இறைவனுடைய அத்வைதத்தின் இரகசியங்களை நன்கறிந்து அகத்தில் அவனைக்கண்டு மகிழும் அவ்லியாக்களுடைய, ஆத்ம ஞானிகளுடைய, பெருந்தகைமைப்படைத்த குதுபுமார் களுடைய இலட்சணங்கள் யாவும் அவரில் சம்பூரண மாகக் காணப்பட்டன. அவனை அகத்தில் காணும் ஷுஹூதுடைய பலதரப்பட்ட வகைகளை அறிவதற்கு அன்றுட அவ்ராதுகளை வழக்கத்தில் கொண்டு வருமாறு அவர்கள் தம் சிஷ்யர்களுக்குக் கற்பித்ததோடு மட்டும் நின்றுவிடாது அவை ஒவ்வொன்றுக்கும் தகுந்த விளக்



கம் கொடுத்துப் பரீட்சை பார்க்கும் விசேட ஞானுசிரிய ராகவும் விளங்கினுர். ஆத்மிக அறிவு ஞானம் அவரு டைய உள்ளத்தை ஒளியாக்கியது. ஸூபியாக்களின் புனிதவழிகளை அனுஷ்டான வாயிலாக அறிந்து எத் தனையோ நன்மைகளை உடனுக்குடன் பெற்றுவந்த அன்னவர், பிற்காலத்தில் தோன்றிய பின்னவர்களுள் ஒருவராக இருந்தாலும். அவரது அந்தஸ்து முற்காலத் தில் தோன்றிய முன்னவர்களின் அந்தஸ்தை ஒத்திருந் தது. ''உங்களிலே நாங்கள் நித்திரையிலும் விழிப்பிலும் விழிப்புடையவர்களாகவே இருக்கிறுேம். சத்தியமாக நீங்கள் (அஸ்ல் பத்தரைமாற்றுத் தங்கம்,) தங்கமுலாம் பூசப்பட்டவர்களோ, புட மிட்டுப் போலியான மினுக் கம் கொடுக்கப்பட்டவர்களோ அல்லர் நீவீர்'' என்று கௌரவமாக அன்னவரை வாழ்த்துகிறுர் காயல் மாமதி ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம்.

அன்று ஹஸ்ரத் புகாரீதங்களுடைய அருளை மனு வர்க்கத்தவர் மட்டுமின்றி ஜின் வர்க்கத்தவரும் வேண்டி நின்றனர். சிற்சில சமயங்களில் எல்லோரினதும் கண் களை விட்டு மறைந்து ஜின் வர்க்கத்தவரோடு சம்பாசிப் பதும், ஜின்கள் உருவம் மாறி பாம்புகளாய் வந்த பொழுது அந்தப் பாம்புகளோடு உரையாடுவதும் அவ ருடைய சர்வ சாதாரண வழக்கமாக இருந்தன.

'ஜலாலிய்யத்' தென்னும் அதிகார உணர்ச்சிமே லிடும்பொழுது அவருடைய பரிசுத்தஸ்தூலத்தில் பல நிறம் காணப்படும். உருமாறி அங்கங்கள் ஒவ்வொன் றும் ஆங்காங்கே தனித்தனியாகப் பிரிந்து சிதறுண்டு கிடந்ததைப் பலர் கண்டு வியப்படைந்தனர். ஏககாலத் தில் ஒருவன் தனது உறுப்புகள் அத்தனையும் செல விட்டு இறை ஞாபகம் செய்வதுபோல, ஏககாலத்தில் அவன் தன் உறுப்புகள் அத்தனையும் ஒன்றுேடொன்று சேர்ந்திடாதவாறு தனித்தனியே பிரிந்த வண்ணம்

இறை ஞாபகம் செய்தல் வேண்டற்பாலது என்று உணர்ந்தார் அன்றோ!

ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம், எமது அன்பு உள்ளத்தில் குடிகொண்ட ஹஸ்ரத் கௌதுல் அஃழம் முஹ்யித்தீன் ஆண்டகையின் வழியைத்தான் முன் மாதிரியாகக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் கௌதுல் அஃழம் எந்த வழியில் அவரை இறைவனது அன்புக்கும் பண்புக்கும் ஆளாக்கிக் கொண்டாரோ அந்த வழியினைத் தெரிந்து அவ்வழியினூடே தம் வழியையும் அமைத்தார். நான்கு மனைவியர்களுக்குப் புருடராக இருந்து இல்லறம் புகுந்தார். 'ஷைகா' என்றொரு மனைவியும் 'மதனிய்யா' என்றொரு மனைவியும் மகப்பேறுடையவர்களாயிருந்தனர். அவ்விரு மனைவியர்க்கும் இரண்டு இரண்டு பெண்மகவுகள் பிறந்தனர். ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலிநாயகத்துக்கு ஆண் சந்ததிகள் எவருமிலர். ஆதலின் அன்னவரின் வழித்தோன்றலில் வரக்கூடிய அத்தனை தங்கள்மார்களும் பெண் வாரிசுடையவர்கள்தான் என்பது இங்கு நோக்கற்பாலது.

திரு மக்கமா நகர் சென்று ஹஜ்ஜு வணக்கத்தைப் பூர்த்தி செய்து கொண்டு திரு மதீனமா நகரத்திற்கு எழுந்தருளிய ஹஸ்ரத் புகாரீதங்களை அங்கு யாவரும் அறிந்து நபி பெருமானின் வமிசத்தை உடையவர்—ஸெய்யிது—என்று அழைத்தனர், அங்கு ஏற்கனவே ஸெய்யிது என்று பிரபல்யமடைந்திருந்த ஷரீபுக்கு இதனால் மனம் உடைந்துவிட்டது, 'நான் தான் ஸெய்யிது, அவரல்ல' என்று வாதாடிய அவர், தம் மனதில் பொறுமை கொண்டார். இது புகாரீதங்கள் வொலி நாயகத்தின் புனிதத் தன்மைக்குக் களங்கம் உண்டு பண்ணுவதாக இருந்தமையால் ஷரீபுடைய வாதாட்டத்துக்கு முரணாக 'அவர் ஸெய்யிது அல்ல நான்தான் ஸெய்யிது' என்று மாற்றிக் கூறினார். இதனால் இருவருடைய விவாதம் முற்றி பல பிரச்சனைகள் எழுந்தன. முடிவில் நபிபெருமானுடைய திருச் சமாதிக்குச்சென்று



நாமிருவரும் ஸலாம் சொல்வோம், எவருடைய ஸலாமுக்கு பதில் கிடைக்கின்றதோ அவர்தான் ஸெய்யிது என்பதன் பேரில் விவாதம் முடிந்தது. பரிசுத்த சமாதியை அடைந்த இருவரில் ஷரீபு தன்னே முதலில் ஸலாம் கூறினார். ஆனால், பதில் எதுவுமில்லை. அதனால், அவருக்கு விசனம் விஷம் போல ஏறிவிட்டது. பிறகு ஹஸ்ரத் புகாரீதங்களுடைய முறை வந்த பொழுது, சற்று ச்சுணங்கிச் சொல்வதாக அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சிறிது நேரம் பின்தள்ளிவைக்கப்பட்டது. எனவே, அச்சிறிது நேரம் கழிந்ததும் உடன் எழுந்து மிகுந்த மரியாதையோடு நின்று ஸலாமுரைத்தார். அது சமயம் அந்நபி பெருமானின் திருச்சமாதியிலிருந்து பதில் கிடைத்தது. இதை நேரிற் பார்த்தவர்களாயிருந்தவர்கட்கு ஷரீபுடைய நிலைமையைக் குறித்து அதிருப்தியைக் கொடுத்தது. இதை உணர்ந்த ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலிநாயகம் ஷரீபை நோக்கி, நீர் இப்போது ஸலாம் கூறும், உமக்கும் ஜவாபு கிடைக்கும் என்று சொன்னார். தங்கள் வொலிநாயகத்தின் வேண்டுதலைப் பெற்று ஷரீபு ஸலாம் சொன்னபோது அவருக்கும் ஜவாபு கிடைத்தது. ஆனால் இதன் மர்மம் என்னவென்று அறிந்து கொள்ள ஆவல் கொண்டிருந்த அனைவரும் ஏகமனதாய் ஏற்றுக் கொள்ளும் விதம் ஹஸ்ரத் புகாரீ தங்களின் கருத்து மிக்க விவேகமுடையதாக இருந்தது:— நபிபெருமான் தம் திருச்சமாதியில் தொழுது கொண்டிருக்கையில் நீர் ஸலாம் சொன்னீர், ஆகவே, உமக்கு பதில் கிடைக்கவில்லை; அதையறிந்த யான் சற்றே தாமதித்து அவர்கள் தொழுது முடிந்த பிறகு நான் ஸலாம் சொன்னேன், எனக்கு பதில் கிடைத்தது; அதன் பின் நீரும் ஸலாம் சொன்னபோது உமக்கும் பதில் கிடைத்தது'' இதுதான் உண்மையின் இரகசியம் என எடுத்துக்காட்டிய ஹஸ்ரத் புகாரிதங்கள் வொலி நாயகம், வேற்றுமை ஏற்பட இருந்த சூழ்நிலையைமாற்றி ஒற்றுமையை ஸ்திரப்படுத்தினர் என்க.

கொச்சி நகரிலுள்ள ஜாமிஆ மஸ்ஜிதில் ஓரிரவு ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகத்தின் சொற்பொழிவு நடந்து கொண்டிருக்கையில்,' வட்டிவாங்குதல், கொடுத்தல், கணக்கு எழுதல், சாட்சி பகர்தல் யாவும் பெருங்குற்றமும் இறைவனுடைய சாபத்துக்குட்பட்டவையும் எனும் கருத்துப்பட பல அரிய உருக்கமான உபதேசம் செய்தார். உறங்கிய கண்கள் விழித்தன. உழுத்துக் கெடும் உள்ளங்கள் உணர்ச்சியடைந்தன. அன்றைய உபதேசத்தின் இறுதி நிலை இறையச் சத்தை அதிகப்படுத்தியது. அது சமயம் நகரிலே பெரிய வட்டிக்காரன் என்று மிகவும் பிரபல்பயமான ஒரு வர் சபைக்கு வந்தார் அம்மனிதனைக் கண்ணுற்ற ஹஸ்ரத் புகாரி தங்கள் தீப்பொறி பறக்கக் கோபக்குறிகாட்டிக் கோடையிடி போன்று இரண்டு தடவை உரக்க சப்தமிட்டு நீ வட்டிக்காரன் தானே! இறைவனுடைய கோபத்துக்கு ஆளாகாமல் நீ விலகிக்கொள்ள வேண்டுமே!! நீ அவனை பயந்து கொள்ள வேண்டுமே!!!' என நற்புத்திப் புகட்டிவிட்டுச் சபையை விட்டெழுந்து வெளியிற் சென்று விட்டார். அவர் ஆகாயத்தில் பறந்து விட்டாரோ அல்லது எங்கேயாயினும் மறைந்து விட்டாரோ என்ன நடந்தது என்பதை எவரும் அறிய முடியா திருந்தது. அவருடைய கோடையிடி முழக்கமும் திடீர்மறைவும் சபையினரைப் பிரமிக்கச் செய்தன. இந்நிகழ்ச்சியைக் கண்டு அன்னவருள் ஒவ்வொருவரும் உணர்ச்சியற்றுக் கிடக்கும் தறுவாயில் அவ்வொலிநாயகம் மசூதியின் தண்ணீர்த் தேக்கத்தின் (ஹவ்ளின்) மேல்மாடியிலிருந்து கீழிறங்கி விரைந்து வந்தார். பெருந்தவறு செய்துகொண்டிருக்கும் மனிதனுடைய உள்ளத்திலிருந்து வெளியாகும் துற்வாடை அவ்லியாக்களைச் சினம் கொள்ளச்செய்யும். அதனாலன்றோ அவ் வொலி நாயகம் சபையைவிட்டு வெளியேறினாரென்றும், பின்னர் அவ் வட்டிக்காரன் உண்மையான பிராயச் சித்தம் தேடி இறைவனிடம் பாவ மன்னிப்புப் பெற்று மாசற்ற மனிதனாகிவிட்ட பின்



னர்தான் அவ் வொலி நாயகம் மீண்டும் சபைக்கு வந்தாரென்றும் கூறுதல் முற்றும் பொருந்தும். நல்லோரைக் காண்பதுவும் நன்று, நல்லோர் சொல் கேட்பதுவும் நன்று, நல்லோரோடிணங்குவதும் நன்று. தீயோரைக் காண்பதுவும் தீது, தீயோர் சொல்கெட்பதுவும் தீது, தீயோரோடிணங்குவதும் தீது என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

இஸ்லாமிய சட்ட விதிகளுள் மிகப்பொறுப்பு உள்ளதும் மிக இலேசானதும், மத்திமமானதும் ஆகிய முப்பிரிவுகள் உள. ''சன்மார்க்கத்தில் கஷ்டம் எதுவுமில்லை'' (அல்–குர்ஆன்: 22–78) எனும் திருமறை வசனம் பொதுவாக சாதாரண மக்களுக்குள்ள போதனையாகவே இருக்கிறது. ஆனால், அறிவு ஞானம் படைத்த ஸூபிய்யாக்களின் நிலையில் மிகவும் பொறுப்புள்ளதான சட்ட விதிகளைத்தான் அனுசரித்து நடக்கும் பழக்கம் அன்னாரிடையே இருந்து வருகிறது. அத்தகைய அறிவு ஞானம் படைத்த ஸூபிய்யாக்களின் தன்மையிலுள்ள ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகம், சன்மார்க்கத்தில் மிகவும் பொறுப்புள்ளதான சட்ட விதிகளைத்தான் அனுசரித்து நடக்கும் பழக்கம் உடையவராக இருந்தார். ஹஸ்ரத் இமாமுல் அஃழம் அபூ ஹனீபாவின் பழக்கத்தையே ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலிநாயகத்தின் பழக்கம் ஒத்திருந்தது:– ஹஸ்ரத் இமாமுல் அஃழம் பஃதாதுமா நகரின் வீதியிலே கால் நடையாகச் செல்லும்போது நடை பாதையிலுள்ள மிகச் சிறிதளவு சகதி அன்னவரின் ஆடையில் படிந்தது. அந்த அசுத்தமான இடத்தைச் சுத்தம் செய்வதற்காக ஏறக்குறைய ஒரு மைல் தொலையிலுள்ள திஜ்லா நதிக்கரைக்குச் சென்றார்,' உங்கள் மத்ஹபில் இத்தகைய மிகச் சிறிதளவு அசுத்தம், அசுத்தம் எனக் கருதப்படாதிருக்க, தாம் எதற்காக இவ்வளவு தூரம் நடந்து செல்கின்றீர்' என்று கேட்கப்பட்டது. 'அது எனது பத்துவா. இது என் தக்வா, என்று கூறி தம்

உள்ளக்கிடக்கையை வெளியாக்கினார் இமாமுல் அஃழம்.

பொன் நிறம், ஒற்ற உயரம், விசாலமான நெஞ்சம், அழகிய வதனம், வார்ந்த கன்னங்கள், அடர்ந்து படர்ந்த நாடி, அகன்ற வாய், மெல்லிய உதடுகள். புன்னகைத் தவழும் இயல்பு, இரு புயங்களிடையே அழகு வடிவமுள்ள ஒரு மச்சம், மிகுதியான மௌனம், சிறப்பான குணம் ஆதியாம் இவை ஹஸ்ரத் புகாரீதங்களின் அங்க வடிவங்களும் சற்குணங்களுமாகும்.

ஹிஜ்ரா 1207–ம் வருடம் ஷவ்வால் மாதம் மூன்றாம் திகதி திங்கட்கிழமை இரவு 63–ம் வயதில் ஹஸ்ரத் புகாரீதங்கள் வொலி நாயகத்தின் பரிசுத்த ஆவி பிரிந்து கண்ணனூர் ஜாமிஆ மசூதியின் வலது பாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார். பிறகு, தனியே அவர்களுக்கென ஒரு தர்கா கட்டப்பட்டு அழகியதோர் பூங்காவனமாக இன்று காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. அப்புனித ரவ்ளா ஷரீபைத் தரிசிப்பதற்குள்ள நாளை வாழ்விலோர் திருநாள் என்று மக்கள் மதிக்கின்றனர்.

நவ்வரல்லாஹு ளரீஹஹு

(அல்லாஹ் அன்னவரின் சமாதியை
ஜோதிமயமாக்குவானாக.)

ஆமீன் ! !

N. B.

கலை முதலை தலைமுதலாகக் கொண்டு கல் நெசஞ்ங்களும் உருகும் வண்ணம் அறிவு நூற்கள் தொகுத்து அஞ்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானத்தை நிலை நாட்டி அகிலத்தினரின் ஆசீர் வாதம் பெற்று அகத்தில் ஆறுதல் அடைந்த அன்பழகர் அல்லாமா அல்–ஆலிமுல் அறூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களால் இயற்றப்பட்ட



'மின்ஹத் துல்பாரீ பீ மித்ஹத்தில் புகாரீ' எனும் மவ்லிது ஷரீபை முக்கியமானதொரு உறுதுணையாகக் கொண்டு இச்சரித்திரம் உருவாக்கப்பட்டது.

ஆக்கியோன்

<> <>

## இரண்டாம் ஆத்ம ஞானி

## ஹஸ்ரத் உமறுலி நாயகம்

பரிசுத்த இஸ்லாமிய குடியாட்சிக்கு முதல் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸ்ரத் ஸித்தீக்குல் அக்பரின் திருமரபில் தோன்றிய உளந்தெளிந்த உத்தமர், அல்ஹாஜ்ஜுல் ஹரமைன், அல்குதுபு, அல்–ஆரிபு பில்லாஹ், மௌலானா ஹஸ்ரத் உமறுலி நாயகம் அவர் நாம்குறிப்பிடும் நான்கு ஆத்ம ஞானிகளுள் இரண்டாவது இடம் பெற்றவர். தந்தையின் பெயர்அப்துல்காதிர் தாயின் பெயர் பாத்திமா, தமிழகத்தே நெல்லைமாவட்டத்தைச் சேர்ந்த் காயல்பட்டணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு ஹிஜ்ரா 1163–ம் வருடத்தில் கி. பி. 1751–ல் சீரும் சிறப்பும் பெற்றவராய் அவதரித்தார். மத்ஹபுல் ஷாபியாவையும், கொள்கையில் அஷ்அரீயையும், தரீக்கில் காதிரிய்யாவையும் அவர் பின் பற்றியே தம் வாழ்க்கையை நடத்தி வந்தார்.

தந்தையும் தந்தைக்கு முன்னெழுந்த தம் குடியிற் பிறந்த மூதாதைகளான அவ்லியாக்களைப் போன்று பிரக்கியாதி பெற்ற ஒரு வொலியாகவும் காலத்தின் குது பாகவும் தோன்றி, மக்களின் அகவிருளை நீக்கி மெய்யொளி துலங்க அன்னவர்கட்கு நல்லுப தேசங்களைப் புகட்டி நன்மைக்கு வழி வகுத்துக்காட்டினார்.

ஹஸ்ரத் அல்குதுபு அஷ்ஷைகு அப்துல் காதிர் தைக்காஸாஹிபு வொலிநாயகம் ஹஸ்ரத் அஸ்ஸெய்யிது அஹ்மது வொலிநாயகம், ஹஸ்ரத் அஸ்ஸெய்யிதுமுஹம்மது வொலிநாயகம், ஹஸ்ரத் அஹ்மது கண்டு வொலி நாயகம், ஹஸ்ரத் அஷ்ஷைகு மஹ்மூது வொலிநாயகம், ஹஸ்ரத் அஷ்ஷைகு முஹ்யித்தீன் வொலிநாயகம், ஹஸ்ரத் ஸெய்யிது பாத்திமா வொலிய்யா நாயகி ஆகியாம் இவ்வேழு வொலிமார்களும் ஹஸ்ரத் உமறுலி நாயகத்தின் மகவுகளாவர். இன்னவர்கள் யாவரையும் ஈன்றெடுத்த அன்னையின்—ஹஸ்ரத் உமறுலி நாயகத்தின் மனைவியின் பெயர் ஸெய்யிது மீரா உம்மாள். ஹஸ்ரத் அஷ்ஷைகு முஹம்மது ஸாலிஹ் வொலியுல்லாஹ் வெனும் புகழ் மிக்க நாமம் பெற்ற உலகப் பிரசித்தி பெற்ற இவ்வொலி நாயகம், ஹஸ்ரத் உமறுலி நாயகத்தின் திருப்பேரராவார்.

உடலமைப்பில் அழகும் புன்னகைப் பூத்த ஜோதி வதனமும் பெற்றுக் குணத்திற் சிறந்தும் விளங்கிய ஹஸ்ரத் உமறுலி நாயகம், இள வயதில் அறிவுக் கலையில் ஆர்வம் கொண்டு எண்ணறக்கற்று எழுத்தறப்படித்தார்கள். அறிவு வளர்ச்சி அடைந்ததும் மக்களுக்கு அறிவூட்டும் புண்ணிய சேவையில் ஈடுபட்டார்.

அரபியக் கலையில் எவ்வண்ணம் பாண்டித்துவம் பெற்றுப் புகழொடு விளங்கினரோ அவ்வண்ணம் செந்தமிழ்க் கலையிலும் சிறப்புற விளங்கினர். அரபு மொழியைத் தாய் மொழியாய்க் கொண்ட அரேபியர்களைப் போலவே நளினமாக அரபு மொழிபேசுவதில் வல்லமைப் பெற்றவர். அம்மொழியிற் கொண்ட அபிலாசை தம் உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்டது. அதனாலன்றோ தம் ஆத்துமா சாந்தி பெற்றேகும் தறுவாயிலும்கூட மூன்று தினங்கள்வரை தம் குடும்பத்தவருடன் அரபு மொழியில் உரையாடினர். அரபுக் கவிகள், காவியங்கள், அருட்



பாக்கள் முதலியன எத்தனையோ நூற்கள் அன்னவரால் தொகுக்கப்பட்டுள்ளன. ஆன்ம சுத்தியை விரும்பும் எவர்க்கும் அன்னவரது 'அல்லபல் அலிபு', 'இலாஹீ கம் துபக்கினீ' எனும் அரபுக்கவிகளும், 'திருமெஞ்ஞான புலம்பல்' எனும் செந்தமிழ்க் கவியும் இன்றும் பொன்னூற்களாக மக்கள் முன்னே காட்சிதருகின்றன.

''இலாஹீ கம் துபக்கினீ'' எனும் பிரஸ்தாப அரபுக் கவி ஈரடி உடையது. எல்லோராலும் போற்றிப் புகழப் படுவது. பிரபல்யமுடையது. அதில் மொத்தம் 8 செய்யுட்கள் உள. அதன் பொருட்கள் யாவும் அகமிய ஆழிய கருத்தை உடையது. ''பஅய்ன—அன—இதா—அந்த'' முடிய அதன் ஐந்தாம் செய்யுள் முற்றமுற்ற தத்துவ ஞானத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. ஆதலின், தத்துவ ஞானிகள்தான் அதன் உட்கருத்தை விளங்கி அறிவர். காதிரிய்யா ராத்திபில் இக்கவி இணைக்கப்பட்டுத் தொன்று தொட்டு வழக்கமாக ராத்திபு மஜ்லிஸ்களில் ஓதப்படுகின்றது. இங்ஙனமிருக்க, ஒரு நாள் அன்று ஸாகிபு தைக்காவில் ராத்திபு மஜ்லிஸை நடத்தி வந்த ஹஸ்ரத் உமறுலி நாயககத்தின் அருந்தவப் புதல்வரான ஸெய்யிது முஹம்மது வொலி நாயகம், அதோ அந்த ஐந்தாம் செய்யுளை மறதியாக விட்டு விட்டு ஓதியமைக்காக தந்தை தம்தமையனை தம் சமாதிக்கருகே அழைத்து அந்த ஐந்தாம் செய்யுளைப் படித்துக் காட்டி ஞாபகமூட்டினர். கவியில் அந்தச் செய்யுளும் இணைத்து ஓதுதல் அத்தியாவசியமாகும் எனவும் சுட்டிக் காட்டினர். இதற்கு ஆதாரமாக ,ஹஸ்ரத் உமறுலி நாயகத்தின் கனிஷ்ட குமாரர் அல்லாமா ஹஸ்ரத் முஹ்யித்தீன் லெப்பை ஆலிம் வொலி நாயகம் தாம் பாடியுள்ள காரணமாலையில், ''வெள்ளி இரா ராத்திபோதும், அந்த வேளையில் பைத்தொன்று மறக்கவும் பீர்பேர், உள்ள பிள்ளையை தர்காவுள்ளிருந்தொரு, சத்தம் விழித்தழைத்துரைத்தவர் நீரே'' என்று இவ்வாறு பாடி

யுள்ளார். இந்த நிகழ்ச்சி ஹஸ்ரத் உமறுௌலி நாயகம் சமாதியடைந்து பதினன்கு வருடங்களுக்குப்பின் நிகழ்ந்த அதிசயமான நிகழ்ச்சியாகும்.

இலக்கண இலக்கிய வழுக்கள் இன்றித் தமிழ்மொழியில் கவி புனைவதில் அன்று அவர் தம் காலத்தவரிடையே நற்புகழ் வாங்கினர். தமிழ் மொழியை ஆசையோடு அள்ளியணைத்துத் தமிழகத்துக்குச் சேவை செய்த அவ்வொலி நாயகப் பெருமகன் தமிழ்ப்பற்று நிறைந்தவராகவும் காணப்பட்டார் என்று கூறினல் அது புத்திக்குப் புறம்பானதல்ல,

''கற்றபடி நில்'' எனும் கொள்கை அவரிடம் மிளிர்ந்து காணப்பட்டது. இறைவனை ஞாபகம் செய்யப் பட்டால் இதயம் அச்சத்தால் அதிர்ச்சியுறும். கண்கள் நீரையோட்டும். திருமறையைத் தினமும் தவருதோதி அனுஷ்டானம் புரியும் வழக்கம் அவரிடம் நிரந்தரமாக இருந்தது. பாரமார்த்திகத்துறையில் தம்மிதயம் பக்குவப்பட்டு முற்போக்கடைந்து அமர ஜோதியைப் பெற்றிருந்தமையால் மட்டிலடங்காத அதிவினேத அற்புத நிகழ்ச்சிகள் அவரிடமிருந்து வெளியாயின. அவற்றிற் பெருமளவு புலனறிவுக்கு ஒவ்வாத அதிசய திருஷ்டாந்தங்களாகவே இருந்தன.

ஹஸ்ரத் உமறுௌலி நாயகம் சமயாசார சரியை (ஸரீஅத்) சம்பந்தப்பட்ட கலையில் மாத்திரமல்லாது ஆத்மிக வழியிலும் ஸ்தரமாக நின்று சாதிக்கத் திடஉறுதி கொண்டு, இதர மூன்று வழிகளான சரியைக்கேற்ப, சமய வழிபாடான கிரியை (தரீக்கத்,) அதையடுத்த யோக (ஹக்கீக்கத்,) இறுதி இலட்சியமான ஞானம் (மஃரிபத்) ஆகிய இம்மூன்றும் சம்பந்தப்பட்ட கலைகளிலும் அவர் நுண்ணறிவு பெற்றிருந்தார்.



ஆத்ம வளர்ச்சிக்காக காயல்பட்டணத்திலெழுந்த பாலப்பா அல்லது பால்குடி அப்பா என்ற கருத்துப் படும் ''ஷாரிபுல்லபன்'' என்றழைக்கப்பட்டு வந்த மகாகனம் ஹஸ்ரத் செய்கு முஹம்மதுந்நுஸ்க்கிய்யி அவர்களையும், ஹளர மௌத்தைச் சேர்ந்த மாமேதை ஹஸ்ரத் செய்குல் ஜிப்ரியி அவர்களையும் ஞானபிதாக்களாய்க் கொண்டு தீட்சை பெற்றார். பிறகு மதீனு முனவ்வராவிலே மக்கள் புகழேந்தி மதிப்புடன் வாழ்ந்து வந்த ஹஸ்ரத் அஸ்ஸெய்யிது முஹ்ஸினுல் முகைபலீ எனும் மாமகத்துவப் பெரியாரை நாடிச் சென்றபோது, அங்ஙனம் அப்பெரியார் இம்மை வாழ்க்கையை நீத்து மறுமை வாழ்க்கையை நாடும் அஃதோர் சந்தர்ப்பமாக இருந்தமையால், எழில்மிக்க மதிவதன சிகாமணி ஹஸ்ரத் உமறுௌலி நாயகத்தைக்கண்டு அன்னவர் உளங் கனிந்து உறவாடி இன்சொல் பகர்ந்து நல்வரவு நவின்று, தம் விருப்பத்துக்கு இணங்க அவருக்குத் தீட்சை வழங்கினர். ஆயினும், வாழ்க்கையில் தாமும் நலம் பெற்றுப் பிறரையும் நல்வழி நடத்துவதற்காக அந்த ஞானபிதா நாயகப் பெரியாரிடமிருந்து பூரண உரிமையையும் சாசுவதமாக நிலைத்திருக்கத்தக்கப் பிரதிநிதித்துவமெனும் தத்துவாட்சியையும், தௌதியமாட்சியையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென ஹஸ்ரத் உமறுௌலி நாயகம் ஆசைப்பட்டார். தம் ஆசை எதுவோ அதை வெளியிடும்முன்னர், தம்மிதயத்தில் ஒழிந்துள்ள அவ்வாசையை உற்று நோக்கி அறிந்த நாயக ஞானபிதா, சொல் எனும் நாவன்றி நிலைமை எனும் நாவினுல் அதனை அவர் உணரத்தக்கவிதம் அதோ உரிமை, பிரதிநிதித்துவம் ஆதியென கொடுத்து அனேக அருள் உபதேசங்களையும் பெறச் செய்தார். ஆயினும் ஹஸ்ரத் உமறுௌலி நாயகத்தின் ஆன்ம வளர்ச்சி அம்மூன்று ஞானபிதாக்களைத் துணைகொள்வதால் மட்டும் பூரணமடைந்து விடாதென்பதைத் தீர்க்க அறிந்த அவர் இன்னுமொரு விசேடமான

ஞானபிதா தேவை என்பதையும் தெளிவுபடுத்தினார். பிறகு, திரு மதீனா முனவ்வராவிலே அவருடைய கல்விச் சாலைக்கு பிரதம குருவாக இருந்து கடமையாற்றும்படி வேண்டிய அப்பெரியாரது விருப்பத்துக்கிணங்க, ஹஸ்ரத் உமறொலி நாயகம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு பேணி மாணவர்கட்கு அறிவூட்டும் புண்ணிய சேவையில் ஈடுபட்டார். அதுகாலை தம் ஞானபிதா இறைவனடி சேர்ந்து விட்டார். என்றாலும், அவர் தம் ஞான பிதாவின் வேண்டுகோளைச் சிரமேற்றாங்கி சுமார் ஐந்தாண்டுகள்வரை அங்கு அப்புண்ணிய சேவையிலிருந்து பின்னர் தாய்நாடுதிரும்பினார்.

காலம் சில கழிந்ததற்கப்பால், தம் ஆன்ம வளர்ச்சி பூரணமடைவதற்கு இன்னுமொரு விசேடமான ஞான பிதாவைத் துணை கொள்ள வேண்டுமே எனும் பேரவா உள்ளத்தை வாட்டி வதைத்தது. ஒரு நாளன்று காயல் பட்டிணத்திலுள்ள புராதன மசூதியான மக்தூம் பள்ளியில் தாம் இமாமாக நின்று கூட்டு (ஜமா அத்து) தொழுகை நடத்திக் கொண்டிருக்கையில், மலபாரில் கொச்சி நகரத்தில் தவயோகி எனப் பிரபல்யமடைந்து மக்களுக்கு ஞானம் போதித்து வந்த மாண்புமிக்கப் பெரியாரான ஹஸ்ரத் செய்யிது முஹம்மது புகாரீ தங்கள் வொலி நாயகம், தம்மை அழைப்பது போன்ற அசரீர தொனியொன்று கேட்டது. அது சமயம் தாம் எதில் நின்று தொழுது கொண்டிருந்தாரோ அந்த மிஹ்ராபு தன்னை ஒரு வாயிலைப்போல் பிளக்க, தமக்குப் பின்னணியில் தொழுதுகொண்டிருப்பவர்களுள் ஒருவரை தமது ஸ்தானத்தில் நிறுத்திவிட்டு அதனூடே சென்று மறைந்தார். அந்தச்சணமே கொச்சியில் மகான் ஹஸ்ரத் புகாரீ தங்களைச்சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தம் வருகையை ஏலவே எதிர் நோக்கியிருந்த தங்கள் பெரியார் தம்மைக் கண்டதும் மாருடன் அள்ளியணைத்து முத்தம் சொரிந்து அண்மையில் அமரவைத்தார். தம்மு



டைய ஆன்ம வளர்ச்சிபரிபூரணமடைவதற்கறிகுறியாக இன்று உங்களுக்கு உங்கள் மார்க்கத்தைப் பரிபூரணமாக்கினேன்; எனது பேரருளை உங்கள் பால் நிரப்பினேன்: இஸ்லாமியத்தை மதமாக உங்களுக்கு ஏற்றுக்கொள்ளச் செய்தேன்..,'' (அல் குர்ஆன்:... 5:3) எனும் திருமறை வசனத்தை மேற்கோளாக ஓதிக்காட்டிய தங்கள், அன்னவருக்குப் பரிபூரண பிரதிநிதித்துவமெனும் ஆடையை உடுத்தி அதிகாரபூர்வமான தீட்சையையும் ஈந்தார்கள். இதனால், ஹஸ்ரத் உமறொலி நாயகத்துக்கு முறையே நான்கு ஞானாசிரியர்கள் இருந்தனர் என்பது தெளிவாகின்றது.

ஹஸ்ரத் புகாரி தங்கள் பெரியாரை நான்காவது ஞானாசிரியராகப் பெற்று உள்ளம் பூரிப்படைந்த ஹஸ்ரத் உமறொலி நாயகம் தங்கள் பெருமகானின் அனுமதியுடன் மலாயாவை யணுகிய அச்சக்கரையிலுள்ள ''ஸாலிஹ்'' எனும் மலையில் கடுந்தவம் புரிந்து வந்த நல்லோர்களைத் தரிசிக்கலானார். வனங்களையும் பருவதங்களையும் ஆச்சிரமங்களாக ஏற்று ஆத்மிக ஆனந்தப் பரவசத்துடன் ஆண்டவனை அல்லும் பகலும் அநவரதமும் ஸ்தோத்தரித்த வண்ணம் மோட்ச உலகுக்குப் புண்ணியங்கள் சேகரித்துக் கொண்டிருந்த பெருமேதைகளையும் தவ சிரேஷ்டர்களையும் கண்டு களிக்கக் கானகங்கட்கும் பருவதங்கட்கும் சென்றார். இறைவனது தனிமையாக சாமீப சாயுச்சியத்தை அடையும் பொருட்டு ஊண், உறக்கம், மனைவி, மக்கள், உற்றார், மற்றார் சகலரையும் விட்டுப்பிரிந்து முற்றாகத் துறவறங் கொண்டு சுமார் பதினான்கு வருடக் காலமாகத் தம்மூரை விட்டு வனவாசம் செய்யவும் நேர்ந்தது. ''ஜலாலிய்யத்''தென்னும் அதிகாரத்து உணர்ச்சியின் உத்வேகத்தால் உந்தப்பட்டுச் சிறிதாண்டு அவர் சூட்சமமாயும் மறைமுக மனிதனாயும் வாழ்ந்தார். இறைவனைப் பயந்து இரவு முற்றாக நல்

வணக்கம் புரிவதும், பகல் முற்றாக உபவாசம் இருப்பதும் அவரது சாதாரண வழக்கமாக இருந்தது. இறைவனை ஞாபகம் செய்வதில் ஒரு பொழுதும் அவருக்கு மறதி ஏற்பட்டதல்ல. இறைவனின் கடமை, மக்களின் கடமை ஏதேதுண்டோ அவற்றினைப்பேணிப் பாதுகாப்பதில் பெரும் சிரத்தை எடுத்தார். மக்கள் ஈருலகிலும் பயனடைய பக்தி நிலையை மேற்கொண்டு நல்லுபதேசங்கள் செய்வதில் ஓங்கி நின்றார். அவர்களுடைய சொற்பொழிவால் மக்கள் நலம் பெற்றனர். எத்தனையோ இஸ்லாமியரல்லாதோர் இஸ்லாமிய வழியினைப் பின்பற்றி வாழ்க்கைநடத்த முன்வந்தனர். ஆதலால், அவருடைய புகழ் நாமம் நாளாவட்டத்தில் பிற மதஸ்தர்களிடையேயும் ஓங்கி வளர்ந்தது. அல்லென்ன, பகலென்ன என்றும் எப்பொழுதும் அவருடைய திவ்விய சமுகம் மக்கள் திரண்டு வந்து அவரது அருள் உபதேசங்களையும் ஞான மொழிகளையும் கேட்டு வரப்பிரசாதமாக அவர் கொடுக்கும் ஆசீர்வாதத்தையும் பெற்றேகினர். தம்மை இறைவனின் பாதையில் ஈடுபடுத்துவான் வேண்டி ஐம்புலன்களையும் அடக்கியதனால் நெருப்பிலிட்ட பொன், மாசு மறுவற்றுப் பத்தரை மாற்றுத் தங்கமாக மாறுவது போல, தனியோனின் தனி மகிமையைப்பெற உள்ளம் அடைந்த இன்னல்களால் அவரது குணமும் நிலையும் பத்தரை மாற்றுத் தங்கம் போன்று சுத்திகரிக்கப்பட்டு விட்டன என்று கூறினால் மிகையாகாது.

எவருடைய உள்ளத்தில் இறையச்சம் பரிபூரணமாக இடம் பெற்று விடுகின்றதோ அவர் அவ்விறைவனையன்றி வேறு எப்பொருளுக்கும் அஞ்சாதவராகவே இருப்பார். எப்பொருளும் அவருக்குத் தலை சாய்த்து அஞ்சி நடந்து கொள்ளும். இவ்வகையில் ஹஸ்ரத் உமறொலி நாயகத்துடைய நெஞ்சத்தில் இறையச்சத்தைத் தவிர வேறு எப்பொருளுக்கும் இடமில்லாதிருந்த



தனால் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட எத்தனையோ மகத்தான காரியங்களைத் திடச்சித்தம் கொண்டு சாதித்திருக்கின்றார். அவர் வனவாசத்தை மேற்கொண்டிருந்த காலத்தில் தமக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியில் உயிருக்கு உலையாக வந்த யானையை மிரட்டி அதைத் தம் வசப்படுத்திக் கொண்டதும் ஒன்று. வனத்தில் பல்லுயிர்களும் கண்டு பயப்படும் யானை ஹஸ்ரத் உமறொலி நாயகத்தைக் கண்டதும் மண்டியிட்டுச் சிரம் சாய்த்துத் தன் துதிக்கையினால் அவர் செல்லும் வழியைச் சுட்டிக் காட்டியது என்றால் ஹஸ்ரத் உமறொலி நாயகத்தின் மகத்துவத்தை என்னென்று கூறுவது? ''இறைவனைப் பயந்து நடப்பவர் எவரோ அவருக்கு சகலமும் பயப்படும்; இறைவனன்றி வேறு எப்பொருளுக்காயினும் பயப்படுவோர் எவரோ அவருக்கு இறைவன் சகலத்தையும் பயமாக்கி வைப்பான்'' எனும் நாயக மொழி இதற்கோர் எடுத்துக்காட்டு.

''நான் எனது இறைவனிடமிருந்து எத்தகைய பதவிகள் பெற ஆசைப்பட்டேனோ அத்தகைய பதவிகள் அனைத்தையும் அதற்கு மேலானதையும் பெற்றேன்; அவ்வாறு பெறுவதற்கு மூன்று விஷயங்கள்தான் பெரிதும் மூல காரணங்களாக இருந்தன - (1) இறைவனது அடியார்களில் எவரையும் எனக்குச் சத்துருவாக ஆக்கிக்கொள்ள வில்லை, (2) ஞானாசிரியர்கள், அறிஞர்ப் பெருமக்கள், திருநபியின் வமிசத்தவர்கள் யாவரையும் கண்ணியப் படுத்தியுள்ளேன், (3) எனது ஞானாசிரியரின் போதனையை ஒரு கணப் பொழுதும் நான் மறந்திடவில்லை'' என்று ஹஸ்ரத் உமறொலி நாயகம் திருவாய் மலர்ந்தருளியிருப்பதிலிருந்து, எந்த இலட்சியத்தைப் பெற அவர் முயற்சித்தாரோ அந்த இலட்சியமும் அதற்கு மேலாகவும் பெற்று உலக வாழ்வினில் நிம்மதியைக் கண்டார் என்பது தெளிவாகின்றது.

ஹிஜ்ரா 1216—ம் வருடம் (கி.பி. 1801) துல்கஃதா

மாதம் 14—ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இஷாஉ நேரத்தில் தம் 51—வது வயதில் அவரது பரிசுத்த ஆவி பிரிந்து இறைவனடி சேர்ந்தார். காயல்பட்டணத்திலே அன்னவரின் தவநிலையமான தைக்காவிலே அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

நவ்வரஹலாஹீ ளரீஹஹூ

(இறைவன் அன்னவரின் சமாதியை ஜோதி மயமாக்குவானாக! ஆமீன்!!)

N. B.

பெருமதிப்பிற்குரிய கலைச் செல்வம் மகான் அல்லாமா ஸெய்யிது முஹம்மது அப்துல் காதிர் ஆலிம் (என்ற மரிக்கார் ஆலிம் ஸாஹிபு) அவர்களால் தொகுக்கப்பட்ட 'தல் அத்துல் கமர் பீ மவ்லிதி ஷ்ஷைகி உமற்' எனும் மௌலிது ஷரீபை முக்கியமான தொடு உறுதுணையாகக் கொண்டு இச்சரித்திரம் உருவாக்கப்பட்டது.

ஆக்கியோன்.

<> <>

## மூன்றாம் ஆத்ம ஞானி ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம்:-

வம்மிச வழி;—

மணிமகுடம் தரித்த மாண்புக்குரிய காரண குருவும், கல்விக்கடலும், காருண்ய சீலரும், மகா தவப்பொருளும், அல்—ஆரிபு பில்லாஹ் எனப்பட்டவருமான ஞானச் சுடர், அல்குதுபு ஹஸ்ரத் அஷ்ஷைகு அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம், நாம் குறிப்பிடும் நான்கு ஆத்ம ஞானிகளுள் மூன்றாவது இடம் பெற்றவர். நந்தமிழகத்தே காயல்பட்டணத்தில் வாழ்ந்த மாபெரும் அவ்லியாக்களில் அவரும் ஒருவர்.

இஸ்லாமிய குடியரசுக்கு முதல் கலீபாவான ஹஸ்ரத் அபூபக்ருஸ்ஸித்தீக் நாயகத்தின் திரு மரபில்



உதித்த, காயல்பட்டணத்திலெழுந்தருளிய ஹஸ்ரத் அஷ்ஷைகு ஸுலைமான் வொலி நாயகத்தின் அருமை மைந்தர்களில் ஒருவரான கௌரவ மாதிஹுர் ரஸூல், அல்குதுபு ஹஸ்ரத் அஷ்ஷைகு ஸதக்கத்துல்லாஹ் வொலி நாயகத்தின் திருவம்மிசத்தில் தோன்றிய அல்ஹாஜ்ஜுல் ஹரமைன், ஹஸ்ரத் அஷ்ஷைகு உமறொலி நாயகம், நமது மூன்றாவது ஆத்ம ஞானி ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் தந்தையாவார். அன்னையின் நாமம் ஸெய்யிது மீரா உம்மாள்.

(1) ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது, (2) ஹஸ்ரத் மஹ்மூது, (3) ஹஸ்ரத் ஸெய்யிது அஹ்மது, (4) ஹஸ்ரத் அஹ்மது கண்டு, (5) ஹஸ்ரத் முஹ்யித்தீன், (6) ஹஸ்ரத் ஸெய்யிது பாத்திமா * ஆகிய இன்னவர்கள் அனைவர்க்கும் மகுடத்துக்குரிய தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் தான் சிரேஷ்ட சகோதரராவார், அபூ முஹம்மது ஸாலிஹ் எனும் புனைப் பெயரும், செய்கு அப்துல் காதிர் என்னும் சொந்தப் பெயரும் அவருக்கு உண்டெனினும் தைக்கா, ஸாஹிபு வொலி நாயகம்' எனும் காரணப் பெயராலேயே அன்று தொட்டு இன்றும் அழைக்கப்படுகின்றார்.

ஹிஜ்ரா 1191—ம் வருடம் (கி.பி. 1775) சபர் மாதம் 5—ம் திகதி யன்று தென்னாட்டின் தென்கோடியிலுள்ள காயல்பட்டணத்தில் மக்தூம் தெருவில் அவதரித்த இம் மகான், காலம் மாறியதும் தென்னகம், மலபார், இலங்கை முதற்கொண்டு அரபு நாடுகள் ஈறாக முஸ்லிம்

* இந்த ஆறு சகோதரர்களும் அடங்கிய அடக்கஸ்தலங்கள் வருமாறு:— (1) திருவிதாங்கோட்டில். (2) ஸாஹிபு தைக்காவில். மாமுனா லெப்பை ஆலிம் என்றும் மாப்பிள்ளை மரிக்கார் என்றும் இவர் அழைக்கப்படுவார். (3) கோட்டாறில் (4) காயல்பட்டணம் மக்தூம் பள்ளியில் (5) ஸாஹிபு தைக்காவில் (6) ஸாஹிபு தைக்காவில்.

களிடையேயும் முஸ்லிம் அல்லாதாரிடையேயும் பிரசித்தி பெற்ற ஒரு வொலியாக, காலத்தின் குதுபாக, அறிவின் மிக்க ஞானச்சுடராக விளங்கினார்.

கல்வியறிவு:—

நமது மேன்மைதங்கிய தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் பச்சிளங் குழந்தையாக இருக்கும்போதே அவரது தந்தை மாட்சிமைமிக்க நம் உமறொலி நாயகம், தமது அத்தியந்த குருவும் ஞானமார்க்கமறிந்த சன்மார்க்க போதகருமான ஸெய்யிது முஹம்மது புகாரீ தங்கள் வொலிநாயகப் பெரியார் காயல்பட்டணம் வந்திருந்த பொழுது அவரிடம் அன்னவரையழைத்துச் சென்றார். அன்னவரைக்கண்டு களிப்புற்ற பெரியார், தம் கரத்தால் அன்னவரின் சிரசை வருடி, உடல் ஆத்தும நலனுக்காக எல்லாம் வல்ல இறையை இறைந்து ஆசிர்வதித்தார். அன்றியும், தம் திருநாவை அன்னவரின் வாயினுள் வைத்தபோது, அதனைச் சுவைக்கக்கண்ட குருநாதர், தம் உத்தம சீடரான ஹஸ்ரத் உமறொலி நாயகத்தை நோக்கி 'உம்முடைய மக்கள் அனைவரும் வொலித்துவம் பெறாது மரணமடைய மாட்டார்கள்' என நல்வாழ்த்துக் கூறினார். தந்தையின் முந்நிலையில் கூறப்பட்ட குருநாதரின் அருள்வாக்கு இறைவனால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கல்வித்துறையை நோக்குமிடத்து, தம் இளமைப் பருவத்திலேயே எம் மறையாம் திருமறை முழுவதையும் மனனஞ் செய்திருந்தார். முதிய வயதெய்திய காலையிலும்கூட அம்மறையில் நின்று எதையும் அவர் மறக்கவில்லை.

தந்தையிடமும் தம் தாயகத்தே உள்ள மகா அறிஞர் பெருமக்களிடமும் கற்வியறிவு பயின்று பல்கலைகளிலும் தேர்ச்சியடைந்தார். சட்டம், ஒழுக்கம், ஞானம் முதலிய இக் கலைகளில் மிகவும் சீர்சிறப்புற விளங்கினார். இவற்றில் ஞானக் கலையில் மிக ஆர்வங்கொண்டு அறி



வுக்கேற்ற அனுஷ்டானத்தையும் மேற்கொண்டிருந்ததனால் மாபெரும் ஞானச்சுடராகத் திகழ்ந்தார். நபி பெருமானாரின் பொன் மொழிகளான அனேக ஹதீஸ்கள் அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றுள்ளன. சுருங்கக்கூறின், அக்கால மக்களிடம் ஞாபக சக்தியும் மதிநுட்பமும் அவரிடம் மலிந்து காணப்பட்டன. அன்றியும், சரியை, கிரியை, யோக, ஞானம் முதலியவைகளை அனுஷ்டான பூர்வமாக ஏற்று முறை பிரளாது நடந்தார்.

கலைகளிற் கொண்ட அபிலாசையினாலும், பகுத்தறிவின் விவேகத்தினாலும் அவர் அடைந்த புகழுக்கோர் எல்லை இல்லை.

தீட்சை (பைஅத்துப்) பெறுதல்:—

மாட்சிமை மிக்க ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் முதன் முதலில் தம் தந்தையிடமும் அதன் பின் தந்தையின் சைகையின் மூலம் கிடைத்த உணர்ச்சியால் கௌரவ ஸெய்யிது முஹம்மது ஜிப்ரீ ஹளரமீ வொலி நாயகப் பெரியாரிடமும் தீட்சை பெற்றார். தம்மிதயம் பக்குவப்பட்டுப் பரிசுத்தமாகி இறையருள் பொங்கப் பெற்றவராய் உயர் திரு சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து, அம்மார்க்கத்தினூடே பிறமதஸ்தர்களையும் வழி நடத்துவதற்கான மாபெரும் பொறுப்பையும் சதாமயமாய் அடைய வளையத்தக்கப் பிரதிநிதித்துவமெனும் தத்துவாட்சியும், தௌதியமாட்சியும் அப்பெரியாரிடமிருந்து அடைந்து 'ஜிப்ரிய்யத்துல் காதிரிய்யா' தரீக்காவுக்கு விசேட குருவாகவும் அமர்ந்தார்.

இத்தகைய மேலான தீட்சைக்குப் பின்னர் எல்லாம் வல்ல கருணாநிதியான இறைவனிடமிருந்து ஆத்மீக செல்வாக்கும் உணர்ச்சி ததும்பும் விவேகமும் உள்ளத்தில் மிகைத்தன.

குருக்களின் ஞானவமுதுண்டு அருள் நிரம்பப் பெற்று, அவ்வமுதின்பம் மாறுவதற்கு முன்பே, 'தனித்திரு, பசித்திரு, விழித்திரு' எனும் தவ ஞானிகளுக்கேற்ற முப்பெரும் அரிய சாதனைகளைக் கையாண்டு தவத்தில் ஈடுபடத் தொடங்கினார். பல்லாண்டு மானுஷீக இச்சைகளை வெறுத்து நிஷ்டையிலிருந்து தியானம் புரிந்தார்.

அருள் நிலையம், அன்பின் உறைவிடம், ஆத்மார்த்த ஆச்சிரமம், தவச்சாலை ஆதியனவற்றின் அடிப்படையிலேயே நம் வொலி நாயகத்தின் தைக்காக் காட்சியளித்தது. ஸலாமுக்குப் பிரதிகூறல் போன்ற அத்தியாவசிய தேவை நீங்கலாக இதர சந்தர்ப்பங்களிலெல்லாம் இறையருள் வேண்டி அவன்பால் சிந்தித்தவராகப் பெருமளவு மௌனஞ்சாதிப்பதே அவரது வழக்கமாக இருந்தது. தமது இந் நற்சிந்தனைக்கும் தியானத்துக்கும் இடையூறு நேராதிருப்பதற்காகப் பெரும்பாலும் தம் தைக்காவின்வாயற் கதவு சாத்தப்பட்டுத்தாளிடப்பட்டதாகக் காணப்பட்டது. மேலும், தமது உத்தமமான பாரியாருங்கூட உட்பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இனமித்திர சமஸ்த சமூகத்தினர் எவரேனும் தம்மைத் தரிசிக்க் வருவார்களாயின், வாயற்கதவு தாளிடப்பட்டிருப்பதாகவே காண்பர். அன்னவர்களுடைய அத்தியாவசிய தேவைகள் அது சமயங்களில் நிறைவேற்றப்படாது கண்டு அன்னவர்கள் திரும்பிச்சென்று விடுவர். முக்திக்கு வழிதேடும் இவ்வரிய சந்தர்ப்பங்களில் தைக்கா ஒளியால் நிரப்பபட்டு ஜோதிமயமாய் இலங்குவதையும் சுற்றுமுற்றுமுள்ள இல்லங்களில் அதன் சுவாலையையும் பலர் காண்பர்.

<u>மித உணவு:—</u>

உணவு சம்பந்தப்பட்ட வகையில் நபி பெருமான்



கூறியதற்கேற்ப, சாதாரணமாக வயிற்றின் ஒருபகுதி உணவாகவும் மற்றப் பகுதி நீராகவும், எஞ்சியபகுதி வெறுமையாகவும் இருக்கக்கூடிய அளவில் நம்மொலி தைக்காஸாஹிபு நாயகம் மிதமான உணவை உண்டு திருப்தி யடைந்தார்.

இச்சையை அடக்க விரும்பும் ஒரு பக்திமானுக்கு அவனது முதுகெலும்பை வளையாமல் வைத்துக்கொள்வதற்கான இந்த அளவு உணவு போதுமானது. மேலும் இந்த அளவு உணவு தான் புத்திகூர்மைக்கும் நுண்ணறிவுக்கும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது, மிதமாக உண்டு, சிறிது பசித்திருப்பதால் ஒடு மனிதன் பல நன்மைகளை அடைகிறான். தன்னையறியாமலே இச்சை அடக்கப்பட்டு விடுகின்றது. ஆக்க வேலைகளுக்கு உடம்பு தகுதியாகி விடுகின்றது. நேரமும் மிச்சப்படுகின்றது. இவற்றின் காரணமாய் தெய்வ பக்திக்கான உண்மை பக்திப்பிரவாகம் இருதயத்திலிருந்து ஊற்றெடுக்கின்றது,

அமித உணவு உடலுக்குத் தீங்கிழைப்பதைப் போன்று ஆத்ம முன்னேற்றத்துக்கும் அது ஒரு பெரிய தடையாக இருக்கும். ஆதலால், தெய்வ ஞானம்பெற்ற மகத்தான பெருமேதைகளைப் போன்று நமது வொலி நாயகமும் மித உணவு உண்டு ஆத்ம நலனைப் பெற்றார். அமித உணவில் கவனஞ் செலுத்தவில்லை என்பதும், உடல் நலத்தைவிட ஆத்ம நலத்தையே பெரிதும் விரும்பினாரென்பதும் அவரது முற்போக்கான வாழ்க்கையை ஆராயுமிடத்து அறியவருகின்றது. உதாரணமாக. அவர் தம் தாயகத்திலிருந்து கால்நடையாக ஏறத்தாழ முன்னூற்றுச்சொச்ச மைல்களுக்கப்பாலுள்ள நாகூர் சென்று அங்கு சமாதி கொண்டுள்ள மகான் அல்குதுபு செய்கு அப்துல் காதிர் மீரான் ஸாஹிபு வொலி நாயகத்தின் புனித சமாதியைத் தரிசித்துவிட்டுத் தாயகம் திரும்பிவரும் வரையும் ஒரு ரொட்டித்துண்டைத்தவிர வேறெந்த உணவுப் பொருளையும் வைத்துக்

கொள்ளவில்லை. இவ்வண்ணம் நீண்ட தொலையிலுள்ள வைப்பார் நகருக்குச் சென்றும் திரும்பி இருக்கின்றார். இவ்விரு விஷயங்களையும் உற்றுணர்ந்து பார்ப்போமானால் அன்னவரின் ஆத்மா எவ்வளவு பரிபக்குவம் அடைந்திருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை,

<> <>

மணவாழ்க்கை;—

இஸ்லாமியத்தில் துறவறம் இல்லை எனக்கூறிய நபி பெருமான், இல்லறத்தை நன்கு மதித்து, துறவறத்தின்மூலம் அடைய முடியாத சௌபாக்கியங்களைப் பெற்றார். இல்லறத்தைக் கடைப்பிடித்தொழுகுமாறு தம் சகாக்களுக்கும் போதித்தார்.

சித்தர்களும் யோகிகளும் போதிப்பதேபோல, நபி பெருமான் இல்லறத்தைத் துறந்து, துறவரத்தை மேற்கொள்ளும்படிப் போதிக்கவில்லை. இதற்கேற்ப, நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் முறையே நான்கு மனைவியர்களை மணந்து மணவாழ்க்கை நடத்தினார். எனவே, அவ்வுத்தம மனைவிகளின் நாமங்கள் வருமாறு:—

(1) ஸெய்யிது மீரு உம்மாள், (2) ஆமினு உம்மாள், (3) ஸாரு உம்மாள், (4) பாத்திமா.

(1) முதல் மனைவி (ஸெய்யிது மீரு உம்மாள்) இவர் காயல்பட்டணத்தில் கண்ணுப்பிள்ளை மரைக்கார் ஹஸ்ரத் ஹாபின் முஹம்மது லெப்பையின் புத்திரியாவர், மேலும், இவர் அல்லாமா பஹ்ருல் உலூம் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் (மனைவியின் பிதாவான) மாமனார் கீழக்கரை தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் சகோதரியுமாவார். இம் மனைவிக்கு (1) முஹம்மது ஸெய்யிது மீரு உம்மாள், (2) ஸெய்யிது பாத்திமா,



(3) ஸாரு உம்மாள் என இம் மூன்று புத்திரிகள் பிறந்தனர். இம் மூன்று புத்திரிகளில் முதல் புத்திரிக்கு உமர் லெப்பை என்ற ஆண்மகவு பிறந்து அவர்மூலம் சந்ததிகள் இருந்து வருகின்றனர். இரண்டாவது புத்திரிக்கு ஹலீமா உம்மாள் என்றும் முஹம்மது முஹ்யித்தீன் பாத்திமா என்றும் இருமகவுகள் பிறந்தனர். முஹம்மது முஹ்யித்தீன் பாத்திமா அவர்களுடைய சந்ததிகள் மட்டும் இருந்து வருகின்றனர். மூன்றாவது புத்திரிக்குச் சந்ததிகள் எவருமிலர்.

(2) இரண்டாம் மனைவி (ஆமினு உம்மாள்): இவர் முதல் மனைவியின் தங்கையாவார். தமக்கையின் மரணத்துக்குப்பின் இவர்மனைவியானார். இம்மனைவிக்கு (1) முஹம்மது ஆஇஷா, (2) மற்யம், (3) செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் என இம் மூவரும் பிறந்தனர். இம் மூன்று புத்திர புத்திரிகளுக்கும் சந்ததிகள் உளர்.

(3) மூன்றும் மனைவி (ஸாரு உம்மாள்): இவருக்கு உமற்லெப்பை என்ற ஒரு ஆண்மகவும், ஆமினுப்பிள்ளை என்ற ஒரு பெண்மகவும் பிறந்து அவ்விருவருடைய சந்ததிகளும் இருந்து வருகின்றனர்.

(4) நான்காம் மனைவி (பாத்திமா): இவரது பிறப்பிடம் தலைச்சேரியாகும். இம் மனைவிக்குச் சந்ததிகள் எவருமிலர்.

× × ×

தவமும் அரிய உபதேசமும்:—

''மெய்யான விசுவாசிகள் யாரென்றால் இறைவனின் திருநாமம் கூறப்பட்டால் அவர்களுடைய இருதயங்கள் பயந்து நடுங்கிவிடும். அவர்கள் மீது அவனது திருவசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால் விசுவாசத்

தை அவர்களுக்கு அதிகரிக்கச் செய்யும். அவர்களுடைய இரட்சகன்பால் அன்னவர்கள்(எல்லாவற்றையும்) பொறுப்புச் சாற்றிவிடுவர்'' (அல்–குர்ஆன் 8:2) என்ற இறைமறை நியதிக்கேற்ப, நமது வொலி தைக்கா ஸாஹிபு நாயகத்திடம் சகல குணாம்சங்களும் காணப்பட்டன. இறைவனைப்பற்றி ஏதேனும் கூறப்பட்டால், அன்னவருடைய புனித தேகம் அச்சத்தால் வலுவிழந்து உள்ளுணர்ச்சி வலுனடைந்துவிடும். தனக்கென வாழாப் பெரியார்களுள் அன்னவரும் ஒருவர். வாழ்க்கை முறையில் பரிசுத்த நபி பெருமானின் வாழ்க்கை முறைதான் சிறந்ததென அவர் கண்டாராதலின், முக்கரணம் (மனம்–வாக்கு–காயம்) வாயிலாக ஒவ்வோர் வேளையும் அவ்வாழ்க்கையைப்பின்பற்றி யொழுக வேண்டுமெனும் பேரவா நிறைந்தே காணப்பட்டார்.

வணிகத் துறையில் இரத்தினத் தொழிலை மேற்கொண்டு அவர் பிரபல வர்த்தகராக இருந்தார். எந்த வழியில் தம்மைத் தாமே சீர்திருத்தம் செய்துகொண்டாரோ அந்த வழிமூலம் இறைவனின் அளப்பரிய சன்மானத்தையும் பெற்றார். சுத்த சத்திய சன்மார்க்கக் கடமைகளில் அணுவேனும் தவறாது நின்று மக்களுக்கு மார்க்கறிவூட்டி ஞானவழியைத் துலக்கினார். மிக அற்பமாகக் கருதப்பட்டுவந்த பாமர மக்களையும் உயர்குடி மக்களாகத் திகழ வைத்தார். குருவெனும் முறையில் தம் கடமை எதுவோ அதைத் தெளிவுற சீடர்களுக்கு எடுத்துக் காட்டி அன்னவர் இகபரமிரண்டிலும் இன்புற அரும்பாடுபட்டார். 'தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்' எனும் முதுமொழிக்கேற்ப, அரசாலும் ஐசுவரியத்தாலும் அடைய முடியாத எதனையும் தவப்பயனால் அடையமுடியுமென்பதை மக்கள் முன்னில் முழக்கினார்.

ஆத்ம சுத்தியை நாடும் எவர்க்கும் ஒரு மாற்று மருந்து அளிக்கத்தக்கதான ஒரு புண்ணிய ஸ்தலமாக



அன்னவரது தைக்கா அமைந்திருந்தது. காயல்பட்டணத்தில் ஆரம்பகாலத்திலெழுந்த திக்ரு, ராத்திபு மஜ்லிஸ்களில் அன்னவரின் தைக்காவான இந்த ஸாஹிபு தைக்கா எனப்பெயர் கொண்டுள்ள தவ நிலையம்தான் ஆதிமுதலானதாகும். அதன் பின்னர்தான் காயல்பட்டணத்தில் சகல பாகங்களிலும் திக்ரு, ராத்திபு மஜ்லிஸ்கள் தோன்றின என்பது என்றென்றும் அழிவில்லாத உண்மை.

பகுத்தறிவின் சான்றுகளால் பெறப்படும் ஞானம் (இல்முல்யகீன்) அவருடைய ஜனனமாகவும், அகவொளியின் சான்றுகளால் பெறப்படும் ஞானம் (ஐனுல்யகீன்) அவருடைய வளர்ச்சியாகவும், இறைவனின் நிலையான வர்ணனைகளில் சிருஷ்டியின் நிலையற்ற வர்ணனைகளை மாழச் செய்வதன்மூலம் பெறப்படும் ஞானம் (ஹக்குல்யகீன்) அவருடைய இறுதி இலட்சியமாகவும் இருந்தன.

தெய்வ வழிபாடு, ஆத்மிக முன்னேற்றம், மனோதத்துவ ஆராய்ச்சி, அறநெறி வழுவாமை, அகத்தூய்மையின் வளர்ச்சி, பண்பாட்டுக்குரிய நிலை ஆதியாம் இவை மனிதனின் உயர் நிலையும் உயிர் நிலையுமாகும். எனவே, முக்திக்கு அடிகோலாய பண்டைய மகான்கள் எல்லோரும் இவ்வரிய சாதனங்களை வலியுறுத்திக்கூறியும் அனுஷ்டித்தும் வந்துள்ளனரென்பது வெள்ளிடைமலை

சொல்லும் செயலும் ஒன்றுபடாதவரை அச்சொல் வெறும் பதருக்குச் சமானமானதென்பது ஆன்றோர்களின் அருள்வாக்கு. அன்பு மார்க்கத்தைக் கடைப்பிடித்துத் தூய எண்ணத்தோடு பகரும் அன்னவர்களின் ஒவ்வொரு அமுத மொழியும் அருள் வாக்கும் பலனளிக்காது வீண்போகவில்லை. சொல்லளவில் ஆரவாரித்துச் செயலளவில் காட்டப்படாதவரை எவ்விதப் பிரதிபலனையும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு பேச்சளவில்

நின்றுவிடுவதில்லை அன்புமார்க்கத்தைக் கடைப்பிடித்த ஆன்றோர்களான நம் முன்னோரின் தன்மை,

இன்று எவரும் எதையும் எழுதலாம், பேசலாம், உபதேசிக்கலாம். ஆனால், அவ்வாறு எழுதுகின்றவர்களும், பேசுகின்றவர்களும், உபதேசிக்கின்றவர்களும் அதன்படி காரியத்திலும், செய்து காட்டுவார்களாயின் அன்னவர்களில் எந்தக்குறையும் காணமுடியாது. இன்றைய கலியுகத்தில் அத்தகையவர்களைக் காணுதல் அரிதிலுமரிது என்று கூறப்படுமிடத்து, அது நூற்றுக்கு நூறு உண்மையெனக் கொள்ளலாம் போலும்! ''நீங்கள் வேதத்தை ஓதிக்கொண்டு உங்களையே மறந்து (மற்ற) மனிதர்களுக்கு நன்மை செய்யும்படி ஏவுகின்றீர்களா? நீங்கள் இதையாவது சிந்திக்க வேண்டாமா? (அல்–குர்ஆன்: 2– 44 எனும் தெய்வத்திருமறையின் அறைகூவலும், ''சொல்லுதல் யார்க்குமெளிய அரியவாம் சொல்லியவண்ணஞ் செயல்'' எனும் முதுமொழியின் முற்போதனையும் சிந்திக்கத்தெரிந்த எந்த மனிதனுடைய உள்ளத்தையும் தொடாதிருக்கமாட்டா.

இல்லறத்தின்மூலம் துறவறம் கண்ட மேதாவிகள் நம் முன்னோரிடையே பல்லாயிரக் கணக்கிலிருந்தனர். அன்னவர்கள் மனித உளங்கொண்ட மக்களாயினும் ஐம்புலன்களையும் அடக்கி உலக சுகபோகங்களை வெறுத்து, இறையை அஞ்சிய அருந்துறவிகளாய் விளங்கினர். யாவரும் அறிய அவர்கள் எல்லோருடனும் அளவளாவி வந்தனரெனினும், அவர்களுடைய மனோ இச்சையானது ஒரே ஒரு நித்திய பொருளையே இலக்காக்கிக் கொண்டிருந்தது. இறுதி இலட்சியத்தை அடையவும் முக்தி பெறவும் ஏது வழிகள் உண்டோ அவற்றினை எல்லாம் என்னேரமும் பயன்படுத்திக்கொண்டனர். விவேகம், தீரம், இறையன்பு ஆகிய இவற்றால் சாதாரண மக்கள் புரிந்து கொள்ள சாத்தியமற்ற எண்ணில்



அடங்காத கலையானங்களை உணர்ந்து தவமிருந்து இறைவனது ஆக்ஞையைச் சிரமேற்றாங்கித் தொண்டாற்றினார்கள். இப்புண்ணிய மகாத்மாக்கள் அனுஷ்டித்த இலட்சிய வாழ்க்கைகளிலும் அன்னவர்கள் புரிந்த பணிகள் ஒவ்வொன்றிலும் நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் சிறப்புற விளங்கினார்.

''கற்றாரைக் காமுறுவர் கற்றாரேயன்றி மற்றார் எங்கனம்'' எனும் கவிக்கேற்ப, நமது வொலி நாயகத்தின் புனித சபை எப்பொழுதும் கலா நிபுணர்கள், அறிஞர்க் குழுவினர்கள் நிறைந்த மாபெரும் கலைமன்றமாகவே காட்சியளித்தது.

தேனினுமினிய ஞானச்சுவை நிறைந்த அன்னவரின் ஆணித்தரமான சொற்பொழிவால் உணர்ச்சியற்றுக் கிடந்த உள்ளங்களெல்லாம் உணர்ச்சி பெற்றன. தீய குணங்களும் பாவச் செயல்களும் மலிந்து காணப்பட்ட மக்களிடையே சற்குணங்களும் நற்கிரியைகளும் ஒருங்கே ஓங்கி வளர்ந்தன.

கலைஞர்கள், கவிஞர்கள், கவியேற்றும் விற்பன்னர்கள், வரகவிகள், தத்துவ ஞானிகள் இன்னும் பலதரப்பட்ட கலைக்களஞ்சிய மேதைகள் யாவரும் நமது வொலி நாயகத்துடைய அரிய உபதேசங்களுக்குச் செவி மடுத்தனர்.

இஸ்லாமிய ஞான பிதாக்கள் என மக்கள் போற்றி கௌரவிக்கும் அல்–இமாம் ஹஸ்ரத் ஙஸாலீ, அல்–இமாம் ஹஸ்ரத் யாபிஈ, ஹஸ்ரத் அப்துல் கரீமுல் ஜியலீ, ஹஸ்ரத் முஹ்யித்தீன் பின் அரபீ போன்ற ஞானவான்களின் ஞானப்பூம்பொழில் எழில் மிக்க இஹ்யா உலூமுத்தீன், இர்ஷாதுல் யாபிஈ, இன்ஸான் காமில், ஸைருஸ்ஸுலூக் புஸூஸுல் ஹிக்கம் முதலிய

நூற்களும் ஞான விளக்கங்கள் நிறைந்த இதர நூற்களுமே நமது வொலி நாயகத்தின் கரங்களில் மிளிர்ந்தன.

அக்கால மக்களின் மாசுபடிந்த உள்ளங்களை ஞான ஜோதியால் மாற்றியமைக்க அவருக்கு நிகரானோர் எவருமில்லை. ஆதலால், ஞானக்கலைவானில் ஜோதியாய், தனியே நின்றிலங்கும் ஒரு நட்சத்திரமாக அவர் விளங்கினார் என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

## பரோபகாரமும் விருந்தோம்பலும்:—

கலைச்செல்வத்தினால் தலைசிறந்த மகத்துவமிக்க நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் தனச்செல்வத்தில் குபேரனாகி மாபெரும் பரோபகாரியாக விளங்கினார். வறியவர்களையும், திக்கற்றவர்களையும் ஆதரித்துப் பண்புடன் பரோபகாரங்கள் பல நாளாந்தம் வழங்கினார். வறியோரின் வருகையை எதிர்நோக்கி அண்மையில் பொருள் குவித்து வைக்கப்பட்டிருந்தது. வறியவர்கள், விதவைகள், அனாதைகள், போக்கற்றவர்கள், ஏழ்மைத் தனத்தால் யாசகம் புரியாமல் கண்ணியமாக வாழும் மக்கள் யாவருக்கும் காட்டும் அன்பும் பரோபகாரமும் தான் காருண்யமிக்க இறைவன்பால் அபரிமிதமான பலன் உடையதென அன்னவர் மதித்தார். இரத்த பாசத்தில் சம்பந்தப்பட்டவர்கள்மீது அளவு கடந்த நட்பு கொண்டு வாழ்ந்தார், அன்னவர்களில் எவரும் பொருளாதாரத்துறையில் பாதிக்கப்பட்டுக் கஷ்ட நிலையை அடைந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் உடனுக்குடன் அன்னவரில்லம் ஏகிப் பொருளுதவி செய்து கஷ்டத்தை மாற்றி வைத்தார். அன்புநெறியிற் கடைத்தேறுவான் வேண்டி அவர் வாரிறைத்த பொருளுதவி



அளவிட முடியாது. நன்கொடை, அன்பளிப்பு எனும் வாயிலாக சிஷ்யர்களிடமிருந்து வரும் பொருட்கள் யாவையும் தரும வழியிலேயே செலவு செய்யப்பட்டன. ஒரு சந்தர்ப்பத்தில், அவர் பிரயாணத்தில் இருந்த போது, பெருந்தொகையான பொருட்கள் அவரிடமிருந்தன. அவைகளை நேரிற் பார்த்தவராக இருந்த ஒரு சிஷ்யர், அப்பெரும் தொகையான பொருட்களோடு ஹஸ்ரத் வொலி நாயகத்தைத் தம் தாயகத்துக்கு அழைத்துச் செல்வதென அவர் மனதில் எண்ணினார். எனவே, அதையறிந்த ஹஸ்ரத் வொலி நாயகம், ''இதோ பொருளுடன் நாம் தாயகம் திரும்ப வேண்டுமென்றா நீர் நினைக்கிறீர்? அணுவும் எஞ்சாதவாறு அனைத்தையும் இறைவனுக்காக ஏழைகள் பால் பகிர்ந்து கொடுத்தாலேயன்றி யான் ''தைக்கா ஸாஹிபு'' எனும் பெயரோடு வாழ முடியாது'' என்று அச்சிஷ்யருக்குக் கூறினார், தம் பந்துக்களும் உற்றாருறவினர்களும் வசிக்கக்கூடிய எந்த நாட்டுக்குச் சென்றாலும் ஆங்காங்கே அன்னவர்கட்குத் தேவையான உதவி உபகாரங்கள் செய்து அன்னவர்களை இன்புற வைத்தார். வறுமையால் பீடிக்கப்பட்டிருந்த மக்கள் அன்னவரின் உதவியைப் பெற்றுச் சுக வாழ்வெய்தினர். பொருளில்லாமைக்காகப் புகலற்றுக் கிடந்த இளயௌவன வனிதாமணிகள், விதவையர்கள் யாவருக்கும் வேண்டிய பொருள் உதவி செய்து அன்னவர்களின் இருண்ட வாழ்க்கையை ஒளியாக்கி வைத்தார். அன்னவரால் நிறைவேற்றி வைக்கப்பட்ட திருமணங்கள் மா நகரங்கள் தொட்டுக்குக்கிராமங்கள் ஈறாகப் பலப்பல. அத்திருமண வைபவங்கள் யாவும் திரு நபியின் உன்னதமான எளிய வாழ்க்கையைப் பின்பற்றி ஆடம்பரமில்லாமலேயே நிகழ்ந்தன.

உணவு சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஏழைகளையும், அனாதைகளையும், திக்கற்றவர்களையும் சேர்த்து உணவ

ருந்தும் பழக்கம் அவரிடம் காணப்பட்டது. உயர்ந்தோன், தாழ்ந்தோன் எனும் பாகுபாடு அவரிடம் காண முடியாதிருந்தது. ''உங்களில் மிகச் சிறந்தவன் இறைவனிடம் மிக அஞ்சியவன்'' (அல்-குர்ஆன்: 29-12) எனும் திவ்விய திருமறைச் சித்தாந்தத்தை மக்களுக்கு நினைவுறுத்தி, விரோதம், குரோதம் ஆதியாம் விஷக்கிருமிகளை நீக்கி ஒருவருக்கொருவர் சகோதரத்துவத்துடனும் நேசப்பான்மையுடனும் வாழ வேண்டுமெனும் அடிப்படையில்தான் அன்னவரின் புனித வாழ்க்கை இருந்தது.

''கொழுத்த கன்றுக்குட்டியை (சமைத்து) விருந்து கொடுத்தவர்'' என்று நம் திருமறையாலும் ''விருந்தினரின் பிதா'' என்று பரிசுத்த நபி மொழியாலும் புகழோங்கிய ஹஸ்ரத் நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய அழகிய முன்மாதிரியை நம்மொலி நாயகம் கடைப்பிடித்தொழுகினாரன்றோ!

× × ×

## தன்னையறிந்து தன்னிறைவனையறிதல்:—

(A) ''தன்னையறிபவன் தன்னிறைவனையறிவான்'' என்ற முன்னோர் மொழிக்கேற்ப, கடமையும் கடமையல்லாததுமான (பர்லு, ஸுன்னத்து) வணக்கங்களை நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் என்றும் தவறாது அனுஷ்டித்து வந்தார். ஆதலால். தன்னையறிந்து தன்னிறைவனையறியும் பாக்கியம் பெற்று, தம் கொள்கை முழுதும் உண்மை யென மெய்பித்துக் காட்டினார்.

அகத்தூய்மையால் ஐம்புலன்களையும் அடக்கி அசைதல் ஒடுங்குதல் என இவ்விரண்டும் இறைவனில் நின்று



முள்ளனவென்றும் பிறவிகளுக்கு அவ்விரண்டும் இடைக்காலத்திற்காக மட்டும் இரவலாகக் கொடுக்கப்பட்டு, உரிய காலம் வரும் போது அவை மீட்சிக்கப்பட்டுவிடும் எனவும் கூறுவர் இஸ்லாமியக் கொள்கையைப் பின்பற்றும் அறிஞர்ப் பெருமக்கள்.

''தனக்கோ தன் அவயவங்களுக்கோ எத்தகைய சக்தியுமில்லை; எல்லாம் அவன் செயல்'' எனக்காணும் பொழுது, தன்னை ஒரு பிறவி என்று கருதவும் முடியாத நிலையேற்படுகின்றது. அந்நிலையில் தனது சொற்செயல் அனைத்தும் சர்வ வல்லமையுள்ள இறைவனின் சொற்செயலாக மாறிவிடுகின்றன.

சிருஷ்டியில் நின்று வெளியாகும் ''லிஸானுல்கல்க்கு' எனும் சொல், சிருஷ்டிகர்த்தாவில் நின்று வெளியாகும் ''லிஸானுல் ஹக்'' எனும் சொல்லாகவும், சிருஷ்டியில் நின்று வெளியாகும் ''பிஉலுல்கல்க்கு'' எனும் செயல், ''பிஉலுல் ஹக்'' எனும் செயலாகவும் மாறிவிடுகின்றன. எனவே, சிருஷ்டியினால் சொல்லப்படுபவையும், செயப்படுபவையும் உண்மையிலேயே சிருஷ்டிகர்த்தாவில் நின்றுமே வெளியாகின்றன என்பது தெளிவு. ஆதலால்தான், எதைச் சொல்ல வேண்டுமானாலும் எதைச் செய்ய வேண்டுமானாலும் சொல்லலாம், செய்யலாம். அவைகட்கெல்லாம் அன்னவர்கள் பால் தடை விதிக்கப்படவில்லை.

''எந்த ஒரு அடியான்மீது நான் எந்த ஒரு வணக்கத்தைக் கடமையாக்கி இருக்கின்றேனோ அந்த வணக்கத்தை அவ்வடியான் தவறாது செய்து வருவதைவிட எனக்கு மிகவும் உவப்பான (வேறு) வணக்கத்தைக் கொண்டு அவன் என்னளவில் நெருங்கமாட்டான்; எனது அடியானை நான் உவந்து கொள்ளும் வரையில் அவன் (கடமையல்லாத) நபுல் வணக்கங்களைச் செய்த

வண்ணமே அவன் என்னிடம் முடுகுதல் பெறுகின்றான். ஆகவே, நான் அவனை உவந்து விட்டால், அவன் கேட்கக்கூடிய கேள்வியாக, அவன் பார்க்கக்கூடிய பார்வையாக, அவன் பிடிக்கக்கூடிய கையாக, அவன் நடக்கக் கூடிய காலாக, அவன் பேசக்கூடிய நாவாக, அவன் உணரக்கூடிய இருதயமாக நான் ஆய்விடுவேன்; அவன் என்னிடம் எதைக் கேட்பினும் அதை நான் அவனுக்கு அளிப்பேன்; எதை விட்டு அவன் என்னிடம் காவல் தேடுகின்றானோ அவனை அதில் நின்று காப்பேன்'' என அல்லாஹ் தன் ஹதீஸுல் குத்ஸீமூலம் நபிகள் பெருமானுக்கு அறிவித்துள்ளான்.

''பரிசுத்த 'ஈமான்' எனும் விசுவாசத்தாலும் தூய எண்ணத்தோடும் உள்ள கிரியைகளினாலுமே ஒரு மனிதனுடைய முடுகுதல் உண்டென்றும், இம்மையில் ஞான வெளிப்பாடும், மறுமையில் சாயுட்சய பதவியும் அளிப்பதே அம்மனிதன் பால் இறைவனுடைய முடுகுதல் எனவும்'' அல்—இமாம் ஹஸ்ரத் அபுல் காஸிம் குஷைரீ கூறியுள்ளார். இத்தகைய பரிசுத்தவான்களே பின்வரும் திருமறை வசனத்துக்கு இலக்காகின்றனர்.

''அறிவீராக! நிச்சயமாக அவ்லியாக்கள் தங்கள் மீது அச்சம் கொள்வதில்லை, இன்னும் அன்னவர்கள் கவலை கொள்ளவுமாட்டார்கள்'' (அல்-குர்ஆன்:10-62.) ''இறைவன் எமது இரட்சகன் என்று கூறி (சன்மார்க்க வழியிற் நெறி தவறாது) செவ்வனே நிற்கின்றவர்கள், தங்கள்மீது அமரர்கள் இறங்கி, அச்சமுறாதீர், கவலை அடையாதீர், உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனபதியைக் கொண்டு நன் மாராயம் பெறுங்கள் என அவர்களுக்குச்சொல்வர்'' (அல் குர்ஆன்: 41—30.)



''எனக்குள்ள ஒரு வொலியை எவர் பகைக்கின்றாரோ அவர் என்னுடன் போர்புரிய தயாராகிவரவும்'', (நாயக வாக்கியம்—ஹதீஸ்குத்ஸீ) ''ஒரு வொலியைப் பகைத்தல் கெட்ட சாவுக்குரிய அறிகுறியாகும்; அவ்வொலி உயிரோடிருப்பினும் இல்லாதிருப்பினும் சரியே'' என ஹஸ்ரத் அபூபக்ருஷ்ஷிப்லீ போன்ற மகான்கள் கூறுகின்றனர்.

''வொலிமார்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றிப் பேசப்படுமிடத்து இறைவனருள் கிட்டும், இதயங்கள் மகிழ்ச்சியிலாகி நிம்மதியுறும்'' என அல்-இமாம் ஹஸ்ரத் யாபிஈ, அல்—இமாம் ஹஸ்ரத் அபுல் காஸிம் ஜுனைதுல் பக்தாதீ போன்ற ஸூபிய்யாக்கள் விளக்கியுள்ளார்கள்.

ஆக்கவும் அழிக்கவும் வல்ல இறைவன் தனது சக்தியை அவனுடைய உத்தமர்களான அவ்லியாக்களுக்கு அன்பளிப்புச் செய்கிறான். அவனது 'தாத்'தென்னும் அதி சூக்குமத்துக்குரிய அந்தரங்க ஒளியை அன்னவர்கள்தான் கண்டு மகிழ்வர். அவர்கள்தான் ஆரிபீன்கள் (ஞானிகள்), ஆஷிக்கீன்கள் (ஆத்மார்த் தப்பிரமையுடையவர்கள்), இறைவனிடம் நெருங்கிய தொடர்புள்ள இன்னவர்களுள் நமது மகத்துவமிக்க தைக்கா ஸாஹிபு வொலி நாயகமும் ஒருவர்.

× × ×

## (B.) ஷரீஅத், தரீக்கத், ஹகீக்கத், மஃரிபத்:—

சமயாசார சன்மார்க்க ஆசாரத்தைப்பற்றியொழுகுதல் எனும் ஷரீஅத்தும், அதற்கேற்ப சமய வழிபாடான தரீக்கத்தும், அதையடுத்த யோக நிலையான கூட்டுச்சேர்தல் எனும் ஹகீக்கத்தும், இறுதி இலட்சியமான ஞானம்

தெளிவு, நற்போதம் எனும் மஃரிபத்தும் நமது வொலி நாயகம் அவர்களிடம் பரிபூரணமாக வளர்ச்சி அடைந்திருந்தன.

சன்மார்க்க சமயாசாரத்தை (ஷரீஅத்தை) விடுத்து மற்ற மூன்றினையும் கொள்கையளவில் காட்டுவோர் ஆரிபும் அல்லர், ஆஷிக்கும் அல்லர். தவிர, சன்மார்க்க சமயாசாரமான ஷரீஅத்துக் கொள்கை எவரிடமில்லையோ அவருக்கு ஞான வெளிப்பாடோ அகத்தூய்மையோ எதுவும் ஏற்படா. அவ்வாறிருந்தும், அவற்றிற்கு ஆசைப்படுவோரினது ஆசை வீணாசையாவது மட்டுமன்றி, முடவனுக்குக் கொம்புத் தேன்மீதுள்ள ஆசையையும், நூலாம்படையினுல் வலை பிண்ணி மானைப் பிடிக்க ஆர்வம் கொள்வதையும், வெண்ணையினுல் மரக்கலத்தைச் செய்து நெருப்பாற்றைக் கடக்க முயற்சிப்பதையும் இன்னும் இவைபோன்ற ஆயிரமாயிரம் விஞோதமான உவமானங்களையும் இதற்கு ஒப்பிடலாம். சன்மார்க்க சமயாசாரமான ஷரீஅத்தை அனுஷ்டிக்காமலே ஒருவர், தனது இறுதி இலட்சியத்தை அடைந்து விடலாம் எனக் கருதும் எண்ணம் நிராகரிக்கப்பட்டுள்ளது. ''சன்மார்க்கத்தைப் பின்பற்றுவதன்மூலம் வாழ்க்கை நடத்துவதுதான் இருலோக சுக வாழ்வின் அறிகுறியாகும்'' என செய்குல் அக்பர் ஹஸ்ரத் முஹ்யித்தின் பின் அரபீ கூறியுள்ளார். ''நமது வழி இறைவனின் திருமறையாலும், நபிகள் நாயகத் திருமொழியாலும் கட்டுப்பட்டதாகும்'' என ஸெய்யிதுத் தாயிபா ஹஸ்ரத் ஜுனைதுல் பஃதாதீ கூறியுள்ளார்.

ஹஸ்ரத் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹஸ்ரத் நபி ஹிழுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி ''நீர் கற்றுக் கொண்ட சரியான கல்வியை எனக்குப்போதிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்



நான் உம்மைப் பின்தொடரலாமா? என்று கேட்டார் '' (அல்–குர்ஆன்: 18-66.) எனும் நம் திருமறை வசனம்தான் ஒருவர் ஞாஞசிரியரைப் பின்பற்றி அவரது வழியைத் தழுவி நேர்வழி பெற்றெழுக வேண்டுமென்பதற்கு அடிப்படையான சான்ருகும். இதனை ஹஸ்ரத் அல்–இமாம் யாபிஈ, ஹஸ்ரத் அல்–இமாம் அப்துல் வஹ்ஹாபுஷ் ஷஃரானி போன்ற மேதாவிகள் ஆதரித்து முழு மனதோடு ஒப்பி நிற்கின்றனர். எனவே, ஆரிபீன்கள் வகுத்த வழிகளெல்லாம் உண்மையானவையும் நேர்மையானவையுமாகும். ஆதலின், வாழ்க்கைத்துறையில் ஒரு ஞாஞசிரியரைப் பின்பற்றி அவர் காட்டும் வழியை (தரீக்கை)த்தழுவி அதன்மூலம் ஒருவர் செல்வதால் நேர்வழி பெற்று அதிக நலன்களை அடைகின்ருர். எனினும், ஞாஞசிரியருடையவும் சிஷ்யனுடையவும் நிலைபற்றி ஒரு சில வார்த்தைகள் இங்கு கூறுதல் பொருந்தும்,

## (C) ஞாஞசிரியரின் நிலை:–

திருக்குர்ஆன், ஹதீஸ் பற்றிய அறிவும் ஆராய்ச்சியும், சட்டக்கலை, ஞானம், ஏகத்துவம் பற்றியும், நேர்மையான கொள்கைப்பற்றியும் உள்ள திட அறிவு ஆகிய இவற்றில் ஞாஞசிரியர் பாண்டித்துவம் பெற்றுத் தம் மிதயம் பக்குவப்பட்டுப் பரிசுத்தம் அடைந்திருத்தல் வேண்டும். பிறருடைய இழிவான குணங்களெனும் இருதய நோய்களையறிந்து அவைகளுக்குத் தக்க பரிகாரம் செய்யக்கூடியவராக இருப்பாராயின் அது மிகவும் நன்று. தனது சொற்செயல் எண்ணம் யாவும் சுய நலத்தின் வாடையைக்கூட நுகராதனவாக இருத்தல் வேண்டும்.

உயிர்களிடத்தில் அன்பு காட்டல், தனக்கும் பிறருக்கும் வரும் பழியை நாணுதல், கைமாறு கருதாமல் பிறருக்கு உதவி செய்தல், ஜீவகாருண்யங்கொள்ளல், உண்மையைக் கடைப்பிடித்தொழுகுதல் இத்தகைய சீரிய பண்புகள் ஞானாசிரியரிடம் நிரம்பப் பெற்றிருத்தல் மிகவும் அவசியமாகும். ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் அறநெறிகளையும் பிறருக்கு எடுத்தோதுவதற்கு முன்னர் தாமே அவற்றினை யொழுகி நன்கு அனுபவமுள்ளவராக இருப்பது வேண்டுமானதாகும்.

தீட்சை பெற வருவோரைப் பகுத்தறிவு கொண்டு நோக்கி, அவர் இதயம் இறைவனின் மகாத்மியத்தை ஏற்றுக்கொள்ளத் தகுதியானதாகவும், சமயாசார சன்மார்க்க ஷரீஅத்து சம்பந்தப்பட்ட அறிவுகள், கிரியைகள் ஆகியவைகளில் போதுமான அளவுக்கு அவர் முற்போக்குடையவராகவும் இருக்கின்ருரா என ஆராய்ந்து பார்த்துப் பின்னர் தீட்சை அருளுவதுதான் சிலாக்கியமாகும்.

மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை இவைகளை விட்டு ஞானாசிரியர் முற்றுந்துறந்தவராக இருக்க வேண்டுமா என்பதுபற்றி அபிப்பிராய பேதங்கள் நிலவுகின்றன. ஆயினும், இத்துறையினை வழி வகுத்தோருள் பெரும்பான்மையினேர் பின் வருமாறு தீர்ப்புக் கூறினர்:—

''மண், பெண், பொன் ஆகிய இம்மூன்றினது ஆசைகளையும் ஒரு ஞானாசிரியர் தம் மிதயத்தை விட்டொழித்தாலேயன்றி அவர் ஞானாசிரியராக இருக்க அருகதையற்றவராவார், என்ருலும், ஒரு ஞானாசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட நான்கு மனைவியர்களை மணந்துள்ளார்; பல மக்களுக்குத் தந்தையாக இருக்கின்ருர்; பல கோடிக்கு சீமானுக இளங்குகின்ருர்; இவ்வாறெல்லாம்



இருந்தும் அவரது இதயம் இவற்றில் அறவே பற்றற்றதாக இருக்குமெனில் அவர் ஞானாசிரியராக இருக்க தகுதியுடையவர்தான்; அன்றியும் இவர்தான் சிறந்தவர் எனவும் கருதப்படுகின்ருர்; இஃதேயன்றி, சதாவும் உள்ளன்போடுஅவ்வத்துணைமீதும் இருதயப்பற்றுக்கொண்டிருப்பவருக்கு ஞானாசிரியர்ப் பதவி அபாயமானது; எனவே, இத்தகையவர் கூடுமான்வரை இறைவனைப் பயந்து நாளடைவில் இவ்வாசைகளைக் குறைத்து, தம் மிதயம் இறைவன்பால் மேல் நோக்கிச் செல்லத்தக்க முறைகளைக்கொள்ள வேண்டும்.''

ஞானாசிரியரைக் குறித்துள்ள மேலே சொல்லப்பட்ட அத்தனை இலட்சணங்களும் இல்லாதவரை ஞானாசிரியராகக் கொள்ளல் மடமையாகும். இதற்கு பதிலாகத் திருமறையும் ஹதீஸையும் முன்மாதிரியாக வைத்து அனுஷ்டான வாயிலாக வாழ்க்கை நடத்துவது நன்று·

ஞானாசிரியர்களென தங்களைக் கூறிக்கொண்டு அறிவிழந்த பாமர மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கக்கூடியவர்களும், இறைவனது பாட்டையை விட்டு வெகு தொலையிலுள்ளவர்களுமான இவ்வேஷதாரிகள் சமுதாயத்தில் தோன்றிய வெறும் பதர்களேயாவர். இன்னேர் தாமே வழி கெட்டதுமல்லாமல் பிறரையும் வழி கெடுக்கத் துணிந்து விடுகின்றனர். புலியைக் கண்டு வெருளுவது போல. இவ்வழிகேடர்களைக் கண்ட வண்ணம் வெருளுதல் புத்திசாலித்தனமாகும். இன்னவர்கள் தான் கொள்ளைக்கூட்டத்தினர் பிறர்ப் பொருளைச் சூறையாடுபவர்கள். பொது மக்களை வஞ்சிக்கின்றவர்கள் உள்ளத்தில் உழுத்துப்போன கபடம் நிறைந்தவர்கள். மகா கொடிய தோசிகள், பெரிய மோசக்காரர்கள். ஐக்கிய சமூகத்தவர்களான ஸுன்னத்து ஜமாஅத்தவர்கள் இழிந்து கூறும் கயவர்கள். விபரீதக் கொள்கையுடையவர்கள். சமூக துரோகிகள். ஒன்று

பட்ட சமூகத்வர்களிடையே பிளவை உண்டுபண்ணுபவர்கள். இத்தகைய படுமோசமான நிலையில் இன்னவர்கள் இருப்பினும், தாங்கள் சொல்வதும் செய்வதும் தான் முற்றும் சரியெனக் கொள்பவர்கள்.

''தனது இரட்சகனை அறியாத, தன் சிஷ்யனைப் பண்படுத்தாத எத்தனையோ ஞானாசிரியர்கள் உளர்; என்றாலும், அன்னவர்கள் (எதையும் ஆராய்ந்து அலசிப் பார்க்காத மதிகெட்ட) யோசனைகளால் (தன்) சமுதாயத்தவர்களை வழி கெடுக்கின்றனர்'' எனும் நம்மொலி நாயகப் பெருமகனின் தந்தை ஹஸ்ரத் உமறொலி நாயகம் தமது பேரின்பக்கவியொன்றில் இவ்வாறு கூறுகின்றார்.

மன்னர்களுக்கோர் மா மன்னராய், நா நிலத்துக்கோர் நந்நபியாய், வாழத் தெரியாதவர்களுக்கோர் வழிகாட்டியாய், மனுக்குலம் உய்யப் புவியில் தோன்றிய புனித நபியின் புகழ் வாழ்வு பூத்து மலர்ந்திட்ட அந்தக் காலத்தில், அன்னவரின் அருள் வாக்கொன்று போதுமாயிருந்தது. அகத்தைத் திறந்து காட்டி அன்பொழுக அண்ணலுக்கு மண்டியிட்டுச் சிரஞ்சாய்த்துச் சாஷ்டாங்கஞ் செய்ய விட்டார்களா? உளமுருக, கண்ணீர்ப் பெருக நல் வரமொன்று போதுமாயிருந்தது. அண்ணலவரின் திருவடிவுப் பொன்னுடலைப் பொற் சிலையாகச் செய்து மாறாத ஞாபகச் சின்னமாக அமைக்க, கொடுத்தார்களா? இல்லை! இல்லை!! மண்டியிட்டுச் சிரஞ்சாய்த்துச் செய்யும் சாஷ்டாங்கம் அவனியில் அவனன்றி அணுவுமசையாத அல்லாஹ்வுக்கன்றி எனக்கன்று; முன் நபிகள் பெருமக்களின் வாழ்வு அஸ்தமித்தும் அன்னவர்களை உருவம் தீட்டிக்கற்சிலைகள் பொற்சிலைகள் வார்த்து அகத்தோடணைத்து ஆலிங்கனம் செய்துவந்த அறியாக்காலத்தவர்களின் அறியாமையை அகற்றவே யான் தோன்றினேன் என்றல்லவோ அண்ணலவர் அவனியுடையோர் கேட்க



அறிவொலி எழுப்பினார். இது இங்ஙனமிருக்க, அண்ணலவரின் திருப்பணியைச் செய்வதாக நாடறிய முழக்கிக் கொண்டு சத்தியம் தவறி ஏய்த்துப் பிழைக்கும் சில வழிகெட்ட போலி சேகுமார்கள், தங்களைக் குறுக்கு வழியில் பாமர மக்களுக்கு அறிமுகப் படுத்த, இலட்சணங் கெட்ட தங்கள் உருவத்தைச் சித்திரமாக, ஓவியமாக, புகைப்படமாகத்தீட்டி, நாற் சதுர மினுக்கக் கண்ணாடிகளிற் பதித்து, மாலையிட்டுத் தூபங்காட்டி, குச்சு வீடு முதல், மச்சு வீடுவரை அலங்கரிக்கச் செய்வார்களெனின், அது அண்ணலவரின் திருப்பணியாகுமா? (நஊது பில்லாஹி மின்ஹா). இது கொடிய 'ஷிர்க்கு' அல்லவென்றால், பிறகு 'ஷிர்க்கு' என்பதற்குத்தான் அர்த்தமென்ன? அண்ணலவர் அன்றெழுப்பிய அறிவொலி அரபு நாட்டைக் கடந்து எந்நாட்டவருக்கும் எதிரொலித்திருக்க, இன்னவர்கட்கு மாத்திரம் அது எதிரொலிக்காதது ஏனோ?

"நபியே! விசுவாசங் கொண்ட பெண்மணிகள் உம்மிடம் வந்து, தாங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்குவதில்லை, திருடுவதில்லை, விபச்சாரம் செய்வதில்லை, தங்கள் (பெண்) குழந்தைகளைக் கொலை செய்வதில்லை, அன்னவர்களுடைய கைகள் கால்களுக்கு மத்தியில் அவதூறு இழைப்பதில்லை, நலன் பயக்கும் நல்ல காரியத்தில் உமக்கு அன்னவர்கள் மாறு செய்வதில்லை என்றெல்லாம் உம்மிடம் பைஅத்தென்னும் உறுதிமொழி தருவார்களானால், நீர் அன்னவர்களுக்குத் தீட்சை நல்கி அல்லாஹ்விடம் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிகுந்து மன்னிப்பளிப்பவனும் இரக்கமுடையவனுமாக இருக்கின்றான்'' (அல்—குர்ஆன்: 61-12) என நம்திருமறை வசனத்தை மேற்கோளாய்க் கொண்டு நந்நபியின் நலம் மிகுந்த நற்பண்புகளை ஏற்றுச் செயலாற்றும் ஞானாசிரியர்கள் அல்லாஹ்வுக்கும் அவன் தன் தூதருக்கும் மிக

உவப்பானவர்களாய் விடுகின்றனர். இன்னவர்களினது அந்தஸ்து உச்சத்தில் உயர்ந்து விட்டது, மதிப்பில் அளவைக் கடந்து விட்டது. ஆதலின், இத்தகையோரை வானளாவப் போற்ற நாக்கள் எழாவிடின், நற்சுவையறியாத துரதிர்ஷ்டத்தையுடைய நாக்கள் என்றே சொல்ல வேண்டும்,

பெண்மணிகளுக்கு நபிகள் பெருமான் பைஅத்தருளும்போது அப்பெண்மணிகளைத் திரைக்கு அந்தப்புறம் வைத்து பைஅத்தருளினுரென்றும், அவரது திருக்கரம் எந்த ஒரு அன்னிய பெண்ணின் உரோமத்தையோ அல்லது நகத்தையோ கூடத்தீண்ட வில்லையென்றும் ஹதீஸ் கிரந்தங்களில் உண்மையான அத்தாட்சிகள் காணக்கிடக்கின்றன. இது இவ்வாறிருக்க, அன்னிய பெண்களைத் திரைமறைவின்றி நேருக்கு நேர் வைத்து அன்னவர்கள் மீது காமவலை வீசி, தங்கள் கரங்களை அப்பெண்கள் பிடிக்கச் செய்து, அல்லது அவர்களுடைய கரங்களைத் தாங்கள் பிடித்து பைஅத்துக் கொடுக்கக்கூடிய வழிகெட்ட ஞாஞசிரியர்கள் பகுத்தறிவு வளர்ந்துள்ள இந் நவீன நாகரீக இந்த இருபதாம் நூற்றுண்டிலே நம் சமூகத்தவரிடையே பலர் இருந்து வருகின்றனர் என்பதை நோக்குமிடத்து எந்த ஒரு உண்மை முஸ்லிமுடைய உள்ளமும் வருந்தாதிருக்கமாட்டா. துரதிர்ஷ்டவசமாக இத்தகையவர்கள் செய்யும் இழி செயலால் நாளாந்தம் கெட்ட பழக்கம் அதிகரித்து எத்தனையோ நிரபராதிகளான குடும்பங்களை நாசவேலையின் பக்கம் இழுத்துச் செல்கின்றது. பேரின்பம் அடையவும் இறைவனின்உவப்புக்காளாகவும் அபிலாசை கொண்டு பைஅத்துப் பெற வந்த நாரிமணிகளை மாயத்தால் மயக்கிச் சிற்றின்பத்தையூட்டி, தங்களைப் போன்ற கள்ள மனத்தை உடையவர்களாக்கும் இம்மாதிரியான வழிகேடர்கள் மனிதவர்க்கத்தில் நடமாடும் சாத்தான்களோ அல்லது கோரப் பிசாசுகளோ என்று சொன்னுலும் மிகையல்ல. மலை ஏறி



விட்டது அந்தக்காலம். மகுடி ஊதி மலைப் பாம்பை அடக்க முடியாது எந்தக்காலமும். என்னே மதியீனம்! ஜாக்கிரதை!! வெல்க பகுத்தறிவு!!!

ஷரீஅத்துக் கொள்கையை அனுஷ்டான வாயிலாகப் பேணுதவர்கள் இகபர மிரண்டிலும் நஷ்டவாளர்களாவர். இறைவனைவிட்டு இன்னேர் வெகு தொலையில் இருக்கின்றனர். அகங்களிருந்தும் உணராதவர்களாய், கண்களிருந்தும் கபோதிகளாய், செவிகளிருந்தும் செவிடர்களாய் இன்னவர்கள் ஆகிவிடுகின்றனர். ஏகனின் திருமறை வசனத்திற்கு இன்னவர்கள்தான் இலக்காகின்றனர்;– "நிச்சயமாக மனிதர்களிலும் ஜின்களிலும் அனேகரை நரகத்துக்காகவே நாம் படைத்திருக்கின்றேம். அவர்களுக்கு மனங்கள் உண்டு, எனினும் அவற்றுல் விளங்கமாட்டார்கள்; கண்கள் உண்டு, எனினும் அவற்றுல் பார்க்கமாட்டார்கள்; காதுகள் உண்டு, எனினும் அவற்றுல் கேட்கமாட்டார்கள்: இன்னவர்கள் மிருகங்கள் போன்றவர்கள்; இல்லை, (பிழை செய்வதில் அவற்றிலும்) மிக வழிகெட்டவர்கள்" ?? (அல்–குர்ஆன்;7.17.)

''இறைவனுக்கு நெருங்கிய தொடர்புள்ள ஞானிகளென தங்களைக் கருதிக்கொண்டு சன்மார்க்க சமயாசாரமான ஷரீஅத்துச் சட்டத்துக்கு மாறுன கொள்கைகளை அனுஷ்டிப்பவர்கள், பட்சிகள் போல விண்ணில் பறந்துசெல்ல. மச்சங்கள் போல நீரில் நீந்திச் செல்ல சக்தி உடையவர்களாயினும் கூட அன்னவர்கள் நல்வழி தவறியவர்கள்தான்; அன்னவர்களை நீர் காண்பீராயின் மயங்கி விடாதீர்'' என குருமார்கட்கும் ஞானிகட்கும் ஞான மார்க்கம் போதித்து, எண்ணற்ற ஞான அறிவு நூற்கள் இயற்றிய ஞானபிதாவும் தத்துவப் பேராசிரியருமான அல்–இமாம் ஹஸ்ரத் அபூஹாமித் ஙஸாலீ தமது சிஷ்யருள் ஒருவருக்கு இவ்வாறு புத்தி போதித்தார். எனவே, இத்தகைய நற்போதம் அந்தச் சிஷ்யருக்கு

மட்டுமன்றி,ஷரீஅத்துச் சட்டங்கள், இஸ்லாமிய அடிப்படையான ஐந்து கடமைகள், அவற்றிற் குறிப்பாக ஐங்காலத் தொழுகை போன்ற அத்தியாவசியமானவைகளை அனுஷ்டிக்காமல் 'தன்னை ஒரு ஞானி, வொலி, பீர்,ஸூபி, மஸ்தான்' என்றெல்லாம் கூறிக்கொண்டு, பொதுமக்களை ஏமாற்றிய வண்ணம் குருட்டு நம்பிக்கையில் இருப்பவர்கட்கெல்லாம் இதோர் சிறந்த படிப்பினையாகும்.

× × ×

## (D) சிஷ்யனின் நிலை;—

தெய்வ வழிபாட்டிலே தன்னை உச்ச நிலைக்கு வழிகாட்டும் ஒரு ஞானாசிரியருக்குக் கட்டுப்பட்ட சிஷ்யன் அனுஷ்டிக்க வேண்டிய கடமைகள் அனந்தம் உள. தொண்டு புரிதல், கட்டளைக்குத் தலை சாய்த்தல், உள்ளத்தாலும் உடலாலும் பரிசுத்தத் தன்மையைக் காட்டல், எக்காரியத்திலும் வெகுளாமைகொள்ளல், ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் நன்நடத்தையையும்சிறந்த பண்புகளாய்க் கொள்ளல், திருமறை, ஹதீஸ், திக்ரு, அவ்ராது, ஸலவாத்து முதலியனவைகளைப் பக்தியோடு அதிகமாக ஓதல், கடமையானதும், கடமையல்லாதது 'மான—பர்லு—ஸுன்னத்து' வணக்கங்களையும் தவருது காலை மாலை நிறைவேற்றல், இறைவனுடைய நாம—இலட்சணங்களான அஸ்மா—ஸிபாத்துகளால் அகக்கண் வழியாக தியானம், யோகசாதனை (முஷாஹதா— முருக்கபா) செய்தல், சிருஷ்டியினங்களில் சகலவற்றையும் விட தன்னை இழிவாகக் காணுதல், இறைவனின் 'தாத்' தெனும் அதிசூக்குமத்தைத் தவிர வேறு எதுவும் தனது எண்ணினுட் புகாதவாறு 'கடமையைச் செய்து அதன் மூலம் இறைவனிடம் தொடர்பு கொண்டு நெருங்குதல்' எனும் குற்புல் பராயிளை அடைதல், 'மனிதப்



பண்புகள் நீங்கி இறைவனின் பண்புகள் தன்னில் வெளியாகி நெருங்குதல்' எனும் 'குற்புந்நவாபிலை அடைதல், ஸ்தூலத்தோடு இச்சடலோகத்தில் (ஆலமும் அஜ்ஸாமில்) இச்சிஷ்யர் வாழ்கின்றவராயினும், சித்துலோகம் (ஆலமுல் அர்வாஹ்), பரலோகம் (ஆலமுல் மலக்கூத்து) எனும் சூக்கும இவ்விருலோகங்களிலேயும், அதற்கப்பாலேயும் தனதுள்ளம் கனவிலும் நனவிலும் சஞ்சாரம் செய்துவருதல், இறைவனது அதிசூக்குமம் (தாத்), வர்ணனை (ஸிபத்து) இவற்றோடு சேர்ந்து அவனது அத்வைதத்தில் (தவ்ஹீதில் அல்லது வஹ்தத்துல் வுஜூதில்) இணைந்து கொள்ள அரும் பாடுபடுதல், 'தானெனும் ஒரு பொருள் இல்லை' என சிஷ்யர் முடிவு கட்டிவிட்டால் அந்த முடிவு தன்னை இறைவனின் அதிசூக்குமத்தில் அழிவுறச் செய்து விடுகின்றது. பனிக்கட்டியின் இயற்கையான தன்மை சுத்த ஜலம்தான்; ஆனுல், அது வேறு ஒரு புதிய உருவம் கொண்டிருப்பினும், இயற்கையின் மூலாதாரத்தையே அது நோக்கிச் சென்று விடுகின்றது, இவ்வாறே நீரில் தோன்றும் குமிழியையும் ஒப்பிடலாம்,

''எனதிறைவா! அன்பர்களிடத்தில் சிருஷ்டிகள் ஜலத்துக்கு மேலால் தோன்றும் குமிழியைப் போன்றவர்கள், ஆகவே, ஜலம் மாய்ந்து போய்வதில் குமிழி ஏற்படுகின்றது, (பின்னர்) அதன் (ஆரம்ப நிலையான) தரிபாட்டுக்கு அது திரும்பி விடுகின்றது'' என்று ஹஸ்ரத் உமறுெலி நாயகம் ஒரு அரபுக்கவிமூலம் பாடுகிருர்.

சிஷ்யர் தனது ஞானுசிரியரோடு எந்த விதமான தர்க்கம் வாக்குவாதம் இன்றி தன்னுடைய சகல காரியங்களிலும் ஞானுசிரியரிடம் ஆலோசனை செய்து கொள்வதும்,தொனியைத்தாழ்த்தி அன்பின் வழியாக உரையாடுவதும் வேண்டுமானதாகும். ஸூபிய்யாக்களான ஆத்மஞானிகள், தவ சிரேஷ்டர்கள் அடைந்த எல்லையை

தானும் அடைவதற்கு அன்னவர்கள் சென்ற வழியினைத் துலக்கும் ஞான நூற்களை ஆழிய நோக்குடன் அவதானிப்பின் நற் சிந்தனைக்கும் முன்னேற்றப் பாதைக்கும் தூயமனத்துக்கும் அது வழி வகுத்துக் காட்டும். இறைவனின் நாமத்தை இடைவிடாது உச்சரித்து, தனது ஞானாசிரியரின் பொருட்டால் தான் விரும்பும் பேரின்ப நிலையைத் தனக்கருள இறைவனைப் பிரார்த்திப்பதும் அதி முக்கியமாகும்.

சிஷ்யரின் நிலையைக் குறித்து மேற் சொல்லப்பட்ட இவ்வத்துணை நற்போதங்களையும், அவர் கடைப் பிடித் தொழுக வேண்டிய இவை போன்ற இன்னும் அனேக புத்திமதிகளையும் சட்டரீதியாக ஹஸ்ரத் அப்துல் கனீ நாபலஸீ கூறியுள்ளார்.

## நாகரீக வாழ்க்கை

வணிகத்துறையில் இரத்தின வியாபாரியாகவும் மா பெரும் செல்வந்தராகவும், பரோபகாரியாகவும் இருந்த நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் வாழ்க்கை மிகவும் எளிதாகவே இருந்தது. அறிவோடு கூடிய ஒழுக்கத்தோடு உயர்ந்த இலட்சணங்களைப் பொதிந்திருந்தது. அதன் நாடாந்தக் குறிப்பேடுகளை எந்தப் பக்கம் புரட்டினாலும் ஆங்காங்கே காணப்படும் பாடங்களெல்லாம் அறிவு, ஒழுக்கம், ஆடம்பரமின்மை, பண்பாடு, ஞானம், தவம், யோக, தனிமை, மறுமையுணர்ச்சி, நற்சிந்தனை, நேர்மை முதலிய இம்மைக்கும் மறுமைக்கும் நற்பலன் தரக்கூடிய சகல உன்னதமான கிரியைகளும் குணாம்சங்களுமாகவே இருந்தன.



''தந்தை எப்படியோ தனையனும் அப்படி'' ''மக்கள் பெற்றாரின் அகமியப் பொருள்'' எனும் பொன் மொழிகளுக்கேற்ப, நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகம், தந்தை வழியை அடிப்படையாக வைத்து வாழ்க்கை நடத்தினார். ''நல்லோர் வழி சென்று பெறப்படும் அறிவும், அதன் வழிபட்ட ஒழுக்கமும் சேர்ந்துதான் நாகரீக வாழ்க்கை'' என்பர் அறிவு படைத்த மேதைகள்.

நாகரீகம் என்பது திருந்திய வாழ்க்கை. அறிவும் ஒழுக்கமும் இரட்டைக் குழந்தைகள் போன்றவை. ஒன்றிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதவை. அறிவின்றி ஒழுக்கமோ ஒழுக்கமின்றி அறிவோ இருப்பின் அது நாகரீக வாழ்க்கையாகா.

<u>அறிவென்பது;</u> ஒழுக்கத்துக்குக் காரணமான இயற்கையும் செயற்கையுமாகிய இரு வகையாக இருப்பது. அது ஒருவடைய மூளையில் பல பொருட்களைத் திணிப்பதன்று. கற்பவை உயிரூட்டுவனவாய், ஊக்கமளிப்பனவாய், மனிதத் தன்மையைப் பயப்பனவாய் இருத்தல் வேண்டும். இயற்கையாவது, குடிப்பிறப்பாலும் தெய்வத்தாலும் அமைவது. செயற்கையாவது கல்வியாலும் நல்லினக்கத்தாலும் உண்டாவது.

<u>ஒழுக்கமென்பது:</u> அகம் புறம் எனும் இருவகைத் தூய்மையாகும். அகத்தூய்மையாவது, மனோ வாக்குக் காயம் மூன்றும் தூய்மையாய் இருத்தல். புறத்தூய்மையாவது, உடம்பு, காற்று, இடம் முதலியன தூய்மையாய் இருத்தல்.

ஒழுக்கமே சிறந்ததாகும். ஒழுக்கமில்லாதவர்கள் நடைப்பிணமாகவே இருப்பர். இதனால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் மனித வாழ்வுக்கு அவசியம் வேண்டிய பண்புகளுள் ஒழுக்கமும் ஒன்று. ஒருவர் பணம் பட்டம்

பதவி இவற்றால் அவரது வாழ்வை உயர்த்திவிட முடியாது. ஒழுக்கம் சேர்ந்த சிறந்த பண்புகளினால்தான் வாழ்வை உயர்த்தலாம். ஒழுக்கமில்லாத ஒரு செல்வன் ஒழுக்கமுள்ள ஒரு ஏழையின் அந்தஸ்தைவிடக் கீழ்த்தரமாக மதிக்கப்படுகின்றான். எச்செல்வமும் கைவிட்டுப் போன பின்னர் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், ஒழுக்கம் தவறின் அதனைத் திரும்பப் பெறுதல் மிகவும் அரிதுலுமரிது.

ஒழுக்கத்தை ''நல்லொழுக்கம், தீயொழுக்கம்'' என இரு வகையாகப் பிரிக்கலாம், ''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம். தீயொழுக்கம் என்றும் இடும்பு தரும்'' என்றதன்படி நல்லொழுக்கம் எப்பொழுதும் இன்பத்தையும் தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையும் தரும்.

ஒழுக்கம் ஒருவர் பிறக்கும் பொழுது கையில் கொண்டு வருவதில்லை. அவரது வாழ்க்கைக் கேற்ப அது அவரை அண்டிக்கொள்ளும். ஆகவே, ஒருவர் உலகில் உச்சநிலையை அடைய வேண்டுமானால், உத்தமர்களின் வரிசையில் ஸ்தரமாக நிற்க வேண்டுமானால் அவர் நல்லொழுக்கம் பற்றிப் படித்தால் மாத்திரம் போதாது, பயிற்சியும் வேண்டும். அறிவும் ஒழுக்கமும் ஆண்-பெண் என்ற பேதமின்றி உலகில் வாழும் சகலருக்கும் பொதுவானவை. குலந்தோறும், ஜாதிதோறும் வேறுபட்ட வருணாச்சிரமதர்மமன்று அது.

நாகரீக வாழ்க்கைதான் திருந்திய வாழ்க்கை என நாம் மேலே கண்டோம். ஆதலின், உண்மையான நாகரீகம் என்பது மனிதனுடைய தூய்மையான ஒளியாகும் எளியதன்மையும் குற்றமற்ற வாழ்வும், எல்லா உயிர்களையும் தன்னைப்போல் நேசிக்கும் மனப்பான்மையும் கொண்டுள்ள மனிதனே உண்மையான நாகரீகத்தில் அமர்கின்றான்.



உயர்ந்த விலையுள்ள உடைகளால் உடம்பைப் பொதிவதும், விலையுள்ள சுவைமிக்க உண்டிகளை உண்பதும், மாட மாளிகைகளில் சௌஜன்னியமாக வாழ்வதும், ஊர்திகளில் உல்லாசமாகச் செல்வதும் இன்னும் இவைபோன்றவைகளெல்லாம் பெரும்பாலும் செல்வர்க்குரிய ஆடம்பர வாழ்க்கையே அன்றி நமது இலக்கணத்துக்குட்பட்ட நாகரீக வாழ்க்கை ஆகா.

ஒருவர் எவ்வளவுதான் எளியவராக இருந்தாலும் இறைவனால் நியமிக்கப்பட்ட அவருக்குள்ள அளவை மனோதிருப்தியோடு ஏற்றுக் கொள்ளாதவரை அவர் இறைவனுக்கு நன்றி செய்தவராகமாட்டார். ''வாழ்க்கையில் உங்களை விடத்தாழ்ந்தவர்களை நீங்கள் நோக்குவீர்களாக! ஆனால், உங்களைவிட மேலான வாழ்க்கையிலுள்ளவர்களை நோக்காதீர்கள், அப்போதுதான் உங்களுக்கு நியமிக்கப்பட்ட அளவைத் திருப்தியோடு ஏற்கவும், இறைவனுக்கு நீங்கள் நன்றி செய்யவும் ஏதுவாகும்'' என்பது மனித வாழ்வுக்கு வழி வகுத்துக் காட்டிய மாநபியின் திவ்விய மொழியாகும்,

மனச்சாந்தியானது, மனிதனின் ஆத்மிக முன்னேற்றத்தையும் பரிபக்குவத்தையும் அடையச் செய்கின்றது. செல்வனின் செல்வத்தை மனதிற் கொண்டு அதிருப்தி கொள்வதால் விளையும் நன்மை யொன்றுமில்லை. ஆதலின், வாழ்க்கையில் தாழ்ந்தவரோடு ஒவ்வொருவரினதும் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தலே அறிவுடைமையாகும்.

இம்மையானது மறுமையின் விவசாயபூமி என்பதை மறந்திடாமல் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் அதனை அடிப்படையாக வைத்து, நற்கிரியைகள் புரிந்து வந்தால் தெய்வருள் தானாகவே தன்னில் உதயமாகிவிடும். உதயகிரி முதல் அஸ்தகிரிவரை, வடகோடி முதல்

தென்கோடி வரை தன்னுடைய நல்ல பெயர் புகழுடன் விளங்கும். மரணத்துக்கு முன்பு நற்கிரியைகள் புரிந்து அதனால் மரணத்தின் போது இருதயகமலத்தில் களிப்பும் பரமானந்தமும் பெற்று இறைவனது அடிசேர முற்றும் துணைபுரிகின்றது.

''எவர்கள் இவ்வுலக வாழ்வையும் அதன் அலங்காரத்தையும் விரும்புகின்றார்களோ அவர்களுடைய செயலுக்குரிய பிரதிபலனைப் பரிபூரணமாக அவர்களுக்கு அதிலே (இவ்வுலகத்திலே) நாம் அளிப்போம். அதில் அவர்கள் நஷ்டப்படமாட்டார்கள். மறுமையில் நெருப்பைத் தவிர வேறொன்றும் பெறுவதற்கு இல்லாதவர்கள் அன்னவர்களே. அவர்கள் செய்த கிரியைகள் யாவும் மறுமையில் (பிரதிபலன் எதுவுமின்றி) வீணாய்விடும்.'' (அல்-குர்ஆன்; 16–11–15)

தன்னையும் தன் பொருளையும் உள்ளும் புறமும் தூய்மையாக வைத்துக் கொள்வதோடு, கந்தையானாலும் கசக்கிக் கட்டுவதும், கூழானாலும் குளித்துக் குடிப்பதும். குடிலானாலும் கூடி வாழ்வதுமே உண்மையான நாகரீகம்.

ஈகை, தாழ்மை, சாத்வீகம், சகிப்புத்தன்மை, விருந்தோம்பல், தானென்ற மமதையின்மை முதலியன இறைபக்திப் பிரவாகத்தோடு ஊடுருவிச் செல்லும் இக்குணங்கள்தான் மக்கள் உள்ளத்தில் சுபிட்சமான தெய்வீக வாழ்க்கைக்கு அடிகோலாகும். மேலும் அவைகளே நாகரீகத்துக்கு இன்றியமையாத சாதனங்களுமாகும்.

ஒருவர் பன்னெடுங்காலமாகத் தீவினைகள் புரிந்து, பிறகு தனது தவறான நிலையை உணர்ந்து இறைவனைப் பணிந்து பச்சாத்தாபம், பிராயச்சித்தம் செய்து, அத்தகைய தீவினைகளைவிட்டு நீங்கி நல் வினைகள் புரிந்து நல்லவராவதற்கும் நாகரீக வாழ்க்கை என்று கூறலாம். இந்த



நாகரீக வாழ்க்கையான திருந்திய வாழ்க்கையைச் செல்வர், வறியவர் என்ற பாகுபாடின்றி இருசாராருமே ஏற்க வேண்டும். எனவே, எந்த இலக்கணத்துக்குட்பட்ட அறிவு, ஒழுக்கம், நாகரீகம் பேணி மனிதன் நடந்து கொள்ள வேண்டுமென நாம் மேலே சொன்னோமோ அந்த இலக்கணத்துக்குட்பட்ட அறிவு, ஒழுக்கம், நாகரீகம் பேணியே நம்மொலி நாயகம் தம் வாழ்க்கையைச் சீரிய முறையில் அமைத்து அறிவிலும் ஒழுக்கத்திலும் நாகரீகத்திலும் சிறப்போங்கினர் என்பது ஈங்கு குறிப்பிடற்பாலது.

× × ×

இதய சுத்தம்;–

''ஒரு உண்மை விசுவாசியின் இதயம் இறைவனின் சிம்மாசனம்'' என்பது நபிகள் பெருமானின் பொன்மொழி. உலகமனைத்திலும் பரஞ்சோதியாய், பராசக்தியாய் நின்றிலங்கும் ஏகபரம் பொருளான இறைவன் ஒரு விசுவாசியின் இதயத்தை ஆசனமாக்கிக் கொண்டிருப்பதென்றால், இறைவன் தன்னுடைய அருள் ஜோதியை அவ்விசுவாசியின் உள்ளத்தில் நிரப்புதற்குத் தகுதியாக அவ்வுள்ளத்தை மாசற வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையே அழுத்தந் திருத்தமாக இந்நாயக மொழி சுட்டிக் காட்டுகின்றது.

இது இங்ஙனமிருக்க, கருத்து வேற்றுமையால் இறைவனை ஒரு கூண்டில் அடைப்பட்ட கிளிக்கு ஒப்பாக்கி, அவனுக்கு ஒரு இடத்தையும் ஒரு உருவத்தையும் வகுத்து விடுகின்றனர் அவனது உயர் திரு தன்மையை அறியாத பாமர மக்கள். அந்தோ!

அவனே எலும்பு தசையும் உடையவன், கட்டையன், நெட்டையன், ஒற்ற உயரமானவன், ஓரிடத்தில் வசிப்பவன் என்றெல்லாம் குறிப்பிடலாகாது. அவன் இவ்வுலகினுட் புகுந்தவனுமல்லன், அதை விட்டு வெளியானவனுமல்லன், அவனைப்பற்றி ஐயறிவும் ஐம்புலன்களும் எப்படி எப்படி சமிக்ஞை செய்கின்றனவோ அப்படி அப்படியெல்லாம் அவன் இருப்பவனல்லன். ஐயறிவுக்கும் ஐம்புலன்களுக்கும் கட்டுப்படாத அவனை எந்த உவமானங்களாலும் கட்டுப்படுத்த முடியாது.

மனித வாழ்க்கையில் அஞ்ச வேண்டியது அவன் கோபத்துக்கு மாத்திரமே. அவனுடைய தெய்வத் தன்மையானது உருவம், உதவியாளர், மனைவி மக்கள், பங்காளர் போன்ற இணைதுணையொன்றுமில்லாத புனிதம் வாய்ந்தது. அவனது சந்நிதானத்தில் பெரிய தன முடையவன், பட்டம் பதவி உடையவன் எனும் பெருமை எவருக்குமில்லை. அவனிடம் மனித அறிவும் புத்தியும் மழுங்கிப் பயனற்றுப் போய்விடும். நமக்குப் பிரமாண்டமானவைகளாகத் தோன்றும் இப்பூவுலகும் அதனுள்ளிருக்கும் காடுகளும் மலைகளும் அடர்ந்து படர்ந்த பென்னம் பெரிய விருட்சங்களும் விண்ணில் ஒளிகாட்டும் சூரியனும் சந்திரனும் ஆக இவை அவன்பால் சரணடைகின்றன.

''உண்மை விசுவாசியின் உள்ளத்தில் இறைவன் வீற்றிருக்கிறான்'' என்பதை ஒரு உண்மை விசுவாசியான முஸ்லிம் உணர்ந்து விட்டால் அவனது ஜீவிதம் முற்றும் புனிதமடைந்துவிடும். பாவக்கிரியைகள் நிகழாமல் அது உடலைப் பாதுகாக்கும். தெய்வ பக்தியில் உச்சநிலை ஏற்படும். பேரின்ப அருள் சுரக்கும். ஆன்மிக வாழ்வில் உருசி பிறக்கும். நாடும் நாட்டம், தேடும் தேட்டம், கோரும் கோரிக்கை யாவும் மின்னல் வேகத்தில் கண்ணெதிரில் காட்சி தரும் என்பதில் ஐயமில்லை.



இதயம் பாழ்ப்படுவதெல்லம் இதனை உணராதிருப்பதே காரணமெனலாம். உடலைமட்டும் பெரிதாக மதித்து உள்ளத்தை மறந்துவிடுகின்றனர் கோடானு கோடி மக்கள். உள்ளத்துக்கு அனுகூலமானதை அனுவேனும் அன்னவர்கள் பெறுவதில்லை. உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதுபோலவே ஆன்வுமாக்கு உணவு அவசியம் என்பதையும் அன்னவர்கள் மறந்து விடுகின்றனர். மனிதனிடம் ஆன்மா என்றும் சடலம் என்றும் இரண்டு பொருட்கள் உள. அவ்விரண்டும் ஒன்றை விட்டொன்று பிரிக்க முடியாதவை. சடலத்தோடு ஆன்மா சேர்ந்த பின்னரே ஒருவன் மனிதனாகத் தோற்றமளிக்கின்றான். ஆன்மா இன்றேல், சடலத்தில் ஒரு விதமான பயனும் இல்லை என்க. சடலத்தைக் காக்க சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வணங்காமுடி மன்னனுடைய நாடாயினும் யதேச்சாதிகாரவாதியின் தேசமாயினும், ஜனநாயகத்துவம் ததும்பும் குடியரசுகள் உள்ள பூமியாயினும் அங்கெல்லாம் மனித சடலத்தைக் கருதி வித விதமான சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தண்டனை விதிக்கக்கூடிய சட்டங்கள் (Criminal Laws) என்றும், தேசாசாரச் சட்டம் (Civil Laws) என்றும் இரு வகையான சட்டங்கள் உள. இவை எதற்காக! மனித சடலத்தின் நலனைக் கருதியல்லவா? மனிதன் தனது ஐம்பொறிகளால் பிறருக்குத் தீங்கு செய்யக் கூடாதென்பதை விளக்கவே இந்தச் சட்டங்கள் ஏற்பட்டன. எனவே, வரம்பை மீறுவோர் எவரோ அவர்மீது இந்தச்சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. மனிதன் நோய்வாய்ப்பட்டால் அல்லது காயமுற்றால் அவனுக்கு வைத்திய சிகிச்சை அவசியப்படுகின்றது. மேலான பரிகாரம் தேவைப்படுகின்றது. இவை எதற்காக? மனித சடலத்தின் நலனைக் கருதியல்லவா? அவ்வாறே ஆன்ம நலனைக்கருதி ஆன்மாவைச் சீர்ப்படுத்தவும் பரிசுத்தமாக்கவும் கண்டிப்பான சட்டதிட்டங்கள் தேவைப்படுகின்றன.

கட்புலனுக்குத் தோன்றும் வெளியுலகில் கால வேறுபாடுகள் உண்டு. காற்றுக் கடினமாக வீசிக் கிளம்பும். மின்னல் தோன்றி மறையும், இடி முழங்கும். உஷ்ணமும் குளிரும் காணப்படும். பூகம்பம் ஏற்படும். இன்னும் இவையல்லாத ஆயிரமாயிரம் நிகழ்ச்சிகள் நிகழும். இந்த வெளியுலகினைப் போன்று ஆன்ம உலகிலும் வேறுபாடான நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அஞ்ஞானம் எனும் இருள் சூழ்ந்து கொள்ளும். அகவிருளை அகற்ற அறிவெனும் ஜோதி அவசியம். அகவுலகிலும் காற்றுக் கிளம்பும். பருவ காலங்கள் மாறி மாறி வரும். சுருங்கக் கூறின், வெளியுலகில் உள்ளனவெல்லாம் அகவுலகிலும் உள்ளன. இவ்விரு வகையான உலகங்களுடைய நிகழ்ச்சிகளை அறிந்த பின்னரும் சடலத்தை மட்டும் பெரிதாக மதித்து ஆன்மாவை மறந்திடலாகாது.

“இறைவன் நிச்சயமாக உங்களுடைய செல்வம், உருவம் இவற்றில் நோக்குவதில்லை; எனினும், அவன் உங்களுடைய உள்ளத்தையே உற்று நோக்குகிறான்'' எனும் நாயகத் திருமேனியின் திருவாக்கு இதற்கோர் எடுத்துக்காட்டு.

உடலுக்குள் சூக்கும உடல் உண்டு, அதற்கு மத்தியிலேயே இருதயகமலத்தில் இறைவன் வீற்றிருக்கிறான். பாழ்ப்பட்ட மனத்தில் காமம், குரோதம், லோபம், மோகம், கோபம், வஞ்சகம், சூது, துரோகம், பேராசை, பதவி மோகம், பொறாமை முதலிய அலைகள் எப்பொழுதும் கொந்தளிக்கின்றன. பலனற்ற உதவாக் கறை எண்ணங்கள் ஊசலாடுகின்றன. இத்தகைய அழுக்கு நிறைந்த அலைகள் உள்ளத்தில் மோதிக் கொண்டிருக்குமளவும் மகிழ்ச்சியோ நிம்மதியோ காணப்பட முடியாது. இன்னோரன்ன இன்னும் பல காரணங்களால் மனோசக்தி குறைந்து விடுகின்றது.



உள்ளம் பாழ்ப்பட்டு விட்டால் உடம்பு தானாகவே பாழடைந்து தன்னைப் பஞ்சமாப் பாதகங்களுக்கு இழுத்துச் செல்லும். புலனடக்கம் தன்னைவிட்டுத் தூரமாய் விடும்.

''மனித சடலத்திலே ஒரு மாமிசத்துண்டு உள்ளது, அது நல்ல நிலையில் இருக்குமானால் சடலம் முழுவதும் நல்ல நிலையில் இருக்கும்; (அன்றி) அது பாழ்பட்டு விடுமானால் சடலம் முழுவதும் பாழ்ப்பட்டுவிடும். அறிவீராக! அதுதான் இதயம்'' எனும் நந்நபி நாயகத்தின் மற்றோர் திருவாக்கும் இதற்கோர் உறுதுணை.

உள்ளம் சுத்தப்பட்டு உடம்பிலுள்ள சகல அங்கங்களும் உணர்ச்சி பெற்று உய்த்தெழுந்து விட்டால், எங்கும் நிறைந்த ஏகபரம் பொருளான இறைவனின் அருள் ஜோதிக்குள் தானாக நின்றிலங்கும் சக்தியான பரவச நிலையும் (ஹாலும்), பரவசம் மேலிட்ட நிலையும் (கஷ்பும்) கிட்டிவிடுகின்றன.

ஊனக்கண் அளிக்கும் ஜோதியை வரையறுத்து ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தி விடலாம். ஆனால், ஞானக்கண் அளிக்கும் ஜோதியை அவ்வாறு வரையறுக்கவோ, அல்லது ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தி விடவோ முடியாது. மண்ணுலகு முதற் கொண்டு விண்ணுலகில் நிகழும் சர்வ நிகழ்ச்சிகளையும் ஒரே சமயத்தில் ஓரிடத்திலிருந்தே காணுவர் ஞானக்கண் ஜோதியை அடைந்த ஆரிபீன்கள்.

''அல்லாஹ்வை ஞாபகம் பண்ணுவதால் உள்ளங்கள் நிம்மதி பெறுகின்றன'' (அல்-குர்ஆன்; 13:28) எனும் திருமறை வசனம் எவருடைய சிந்தனையையும் கிளராதிருக்க மாட்டா. பட்டத்தால், பதவியால், அரசால், ஐசுவரியத்தால், அறிவால், அறத்தால் இன்னோரன்ன

வேறு எந்தச் சாதனைகளாலும் உள்ளங்கள் நிம்மதி கொள்ளாது அல்லல் படும் இன்று, அல்லாஹ்வை ஞாபகம் பண்ணுவதால் மாத்திரம் உள்ளங்கள் நிம்மதி பெறுகின்றன எனும் திருமறை வசனப் போக்கு மிக விசித்திரமானது. விஞ்ஞானம் வளர்ந்தோங்கிட்ட இக் கலியுகத்தவர்களின் வாழ்க்கைப் பாதை சுபிட்சமாவதற்கும், கலக்கமின்றி அன்னவர்களுடைய மனோநிலை ஒருமைப்படுவதற்கும், சுருங்கச் சொல்லின், அமைதியான சூழ்நிலை எங்கும் நிலவுவதற்கும் கையாள வேண்டிய ஒரே வழி இறை நினைப்பைத் தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை. எனவே, இறைவனுடைய நாமத்தைப் பக்தியோடு தியானித்து அதனால் தூய மனத்தை அடைதல் சுலபமான வழியாகும். மன ஒருப்பாட்டுக்கும் அதுவே சிறந்த வழி. பக்தி என்பது இரு வகைப்படும். ஒன்று காம பக்தி, மற்றொன்று நிஷ்காம பக்தி. காம பக்தியானது உலகாசைக்கு வழிபட்டது. அது தீயது. அதனால் ஒரு பொழுதும் தூயமனம் ஏற்படா. நிஷ்காம பக்தியே தூயமனம் அடைவதற்கு அவசியமானது. நிஷ்காம பக்தி மூலம் இறைவனிடம் நம்மைச் சரணடையச் செய்வதனால் தூயமனம் அடைந்து ஆன்ம ஈடேற்றம் பெறலாம்.

அழிவிலா ஆண்டவனுக்கு அளவிலா நாமங்கள் உள. அவனது அழகிய திருநாமங்களில் எதைக் கருத்தில் கொண்டு தியானிப்பினும், அதற்கெல்லாம் எண்ணிறந்த விசேட சலுகையும் சக்தியும் இறைவனுடைய திவ்விய தோற்றமும் கிடைக்கப் பெறும்.

தூய மனம் அடைவதற்கு முக்கியமாக நல்ல நூற்களைப் பக்தி விசுவாசத்தோடு ஆராய வேண்டும். ஆத்ம உலகில் சஞ்சரிக்க, ஆஸ்திகத்துறையில் எந்த அறிவு அவசியம் எனக் கருதப்படுமோ அந்த அறிவு தன்னை விளக்



கும் நூற்கள்தான் நல்ல நூற்கள் எனப்படும். காமம், காதல், நாஸ்திகம் முதலியன பற்றி விளக்கும் உதவாக் கடை எண்ணங்கள் நிறைந்த நூற்களை ஆராய்வதனால் உடலின்பங்களில் கவர்ச்சியை உண்டாக்கி ஆத்மிக இன்பங்களை மறக்கச் செய்து விடுகின்றது. ஆதலின், வெளிப்படையான தோற்றத்தைக் கண்டு மயங்கி, தீய கருத்துக்கள், எண்ணங்கள், கொள்கைகள் உள்ள நூற்களை மறந்தும் பார்க்கக்கூடாது. ஏனெனில், நல்ல பாம்பு படமெடுத்தாடும் போது பார்வைக்கு நல்ல அழகாகத் தோற்றுவிக்கும். நல்ல பாம்பு என நினைத்து அருகில் சென்றால் அது நம் உடலைத் தீண்டிவிட நேரிடும். அத் தன்மை போன்று, தீய நூற்களை நல்ல நூற்கள் என நினைத்து ஆராய்வதனால் அறிவீனமெனும் பாம்பு தீண்டி நம் மனத்தில் விஷம் பரவி, நம்மறிவெனும் உயிரைப் போக்கிவிடும். நாம் ஒழுகி வந்துள்ள நல்லொழுக்கங்கள் அனைத்தும் அதற்கப்பால் தீயொழுக்கங்களாக மாறி விடுகின்றன.

நல்லோரினது இணக்கமும் நட்பும் பரிசுத்தம் அடைவதற்கு இன்றியமையாதனவாகும். தெய்வ பக்தி, ஆசாரசீலம், நற்குண நல்லொழுக்கம் இவைபோன்றவைகளே நல்லோரினது சிறந்த இலட்சணங்களும் பண்புகளுமாகும்.

''கல்லைக் கழுகினாலே கரை சேரலாம்; கையைக் கழுகுவதால் கறை போகுமோ'' என்று ஞானச்சுடர் வொலி நாயகத்தின் தந்தை தமது இறை முனாஜாத்தில் கூறியிருப்பதும், தூயமனம் பெறுவதற்கு நபி பெருமானை வேண்டிய வண்ணம் அந்நபி பெருமானின் திருச் சமாதிக்கருகே நின்று உள்ளம் உருகிப் புகழ்ந்து பாடிய ''அஹ்மதுல்லா ஹல்வலீ'' எனும் அரபுக் கவியொன்றில் ''நபிகளிற் சிறந்தவரே! தீயொழுக்கமெனும் பிற

பொருள் நுழைவதை விட்டு என்னுள்ளத்தைப் பரிசுத்தமாக்கி, இச்சிறுவன்மீது நுமது திருமுகத்தைச் சேர்ப்பீராக'' என்று நமது வொலி நாயகம் கூறியிருப்பதும் இங்கு விசேடமாகக் கவனிக்கத்தக்கது.

உடலும் உள்ளமும் பரிசுத்தப்பட்டு, உடலின் தூண்டுதலுக்கு உள்ளம் கட்டுப்படாமல், உள்ளத்தின் தூண்டுதலுக்கு உடல் கட்டுப்பட்டு, அதனையே எல்லாக் கருவிகளுக்கும் மூல கருவியாக ஏற்றுக் கொண்டு, பக்திப் பாதையிலே தொடர்ந்து சென்றால் பேரின்பத்தில் தழைத்தோங்கலாம்.

பேரின்ப வாழ்க்கை பழமையாகி முதுமை அடைந்து விட வேண்டும். அப்போதுதான் அது இயற்கை போல் அமையும். அவ்வியற்கைக் குணம் வந்த பின், எக்காரணம் கொண்டும் கால விபரீதத்தாலும் அல்லது இமய மலை போன்ற பெரும் துன்பத்துக்குட் சிக்குண்டு பெரும் துயர்வடைந்தாலும் அக்குணத்தில் சிறிதளவேனும் மாற்றம் ஏற்படா. துன்பமும் இன்பமும் சமம் என்ற அளவுக்குத்தான் அவ்வியற்கைக் குணத்தின் தன்மையைக் காணலாம், பொன்னை தட்டான் நெருப்பிலிட்டுக் காய்ச்சுகிறான், உருக்குகிறான், அடித்தடித்துக் கம்பியாகவும் சங்கிலியாகவும் நீட்டியும் வளைத்தும் அதன் உருவத்தை மாற்றுகின்றான். ஆனால், அதன் குணம் குறைவதில்லை. அது பத்தரை மாற்றுத் தங்கமாகக் குணபாவங் கெடாமல் இருக்கக் காண்கிறோம். செயற்கையின் விபரீதத்தால் இயற்கைக் குணம் மாறக் கூடாதென்பது ஆண்டவன் விதித்த நியதிபோலும்! "களங்கமற்ற இதயத்தோடு வருவோரைத் தவிர பொருளும் மக்களும் பயன்படாத நாளை (நபியே!) ஞாபகம் செய்வீராக!'' (அல்–குர்ஆன்:–26–88–89)



இதய சுத்தம் பெற்று இன்னலையகற்றி இகத்தில் இன்பங்கண்டு, பரத்தில் பரமானந்தத்தோடு வாழ ஆசைப்பட்ட ஆத்ம ஞானிகளான அவ்லியாக்களின் அட்டவணையில் நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகமும் ஒருவர் உண்டெனச் சொன்னால் மிகையல்ல.

## நபித்துவம் வொலித்துவம்;—

நபிமார்களை மனிதவர்க்கத்தவரிடையே நபித்துவத்தைக் கொண்டு இறைவன் தேர்ந்தெடுத்ததுபோல, வொலிமார்களை வொலித்துவத்தைக் கொண்டு தேர்ந்தெடுத்துள்ளான். எனினும், நபிகள் நாயகம் உட்பட ஏனைய நபிமார்கள் கனவிலும் நனவிலும் எத்தகைய சிறியதொரு பாவத்தைக்கூடச் செய்யாது இறைவனால் இயற்கையிலேயே பாதுகாக்கப்பட்டவர்களாவர். உடலும் உள்ளமும் மாசுபடியாதவர்கள். இதனாலேயே ''பாதுகாக்கப்பட்டவர்கள்'' (மஉஸூமூன்) என அவர்கள் அறியப்படுகின்றனர். ஆனால், அவ்வாறு பாவச் செயல் நிகழாமல் இயற்கையிலேயே பாதுகாக்கப்படாதவர்களும், பாவம் நிகழாமல் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள சக்தியுடைவர்களுமே வொலிமார்களாவர்.

பாவச்செயல் உண்டாகாமல் இயற்கையிலேயே அவ்வாறு பாதுகாக்கப்படாத வொலிமார்கள் ஏனைய பொது மக்களைப் போல "பாதுகாக்கப்படாதவர்கள் (கைரு மஉஸூமீன்) என அறியப்படுகின்றனர். ஆதலால், நற்கருமங்கள் புரிந்து பாவச் செயலை ஒழித்து, எந்தக் கருமத்திலும் இறைவனைத் தனது குறிக்கோளாகவைத்து ஆன்மாவைப் பரிபக்குவப்படுத்தி, அவனோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதனால் எதிர் காலத்தில்

இன்னோர் பரம சாதுக்களாய், உளந்தெளிந்த உத்தமர்களாய் விளங்குவர் என்பதில் ஐயமில்லை.

அதிவினோத அற்புதங்கள் எனப்படும் முஉஜிஸாத், கறாமாத்து இரு வகைப்படும். நபி பெருமான் முதற்கொண்டு பரிசுத்த தீர்க்கதரிசிகள் வாயிலாக நிகழ்ந்த அதிவினோத அற்புதங்களுக்கெல்லாம் ''முஉஜிஸாத்' எனவும், வொலிமார்கள் வாயிலாக நிகழும் அதிவினோத அற்புதங்களுக்கெல்லாம் ''கறாமாத்து'' எனவும் கூறுவர் அறிவுடையோர். தீர்க்கதரிசிகள், வொலிமார்கள் இன்றி ஏனையோர் வாயிலாக வெளியாகும் அற்புதங்களுக்கெல்லாம் ஸிஹ்று, மாந்திரம், சூனியம், மாய வித்தை எனவும் கூறுவர் அன்னவர்கள். இதுபற்றிய விளக்கம் இஸ்லாமிய கலாநிகண்டில் தெளிவாகக் காணப்படுகின்றது.

முஉஜிஸாத், கறாமாத்து என்ற இவ்விரு வகைகளும் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ நிகழலாம் என்பதில் அறிஞர்களிடையே அபிப்பிராய பேதம் எதுவுமில்லை. ''ஜமாலிய்யத்'' தெனும் சாதுத்தன்மையை மேற்கொண்ட தீர்க்கதரிசிகள் வொலிமார்கள் மூலமாக மறைமுகமாகவும் ''ஜலாலிய்யத்'' தெனும் அதிகாரத்து உணர்ச்சியை மேற்கொண்ட தீர்க்கதரிசிகள், வொலிமார்கள் மூலமாக வெளிப்படையாகவும் அற்புதங்கள் வெளியாகலாம் என்பது இதன் கருத்து. திரு நபி அவர்கள் முதல் ஏனைய உத்தமமான புனிதமிக்க தீர்க்கதரிசிகள் மூலமாகவும், வொலிகளுக்கரசர், கௌதுல் அஉழம், மஹ்பூபுஸ்ஸுப்ஹானீ, ஹஸ்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ ஆண்டகை முதல் ஏனைய சிறப்புமிக்க வொலிமார்கள் மூலமாகவும் அளவிடற்கரிய ஏராளமான அதிவினோத அற்புதங்கள்-முறையே-மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் நிகழ்ந்துள்ளனவென்பதற்கு ஆதாரங்கள் பலப்பல.



நபிமார்களாலும் வொலிமார்களாலும் அற்புதங்கள் நிகழவேணுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. கடமையும் இல்லை. அன்றியும், அற்புதங்களை நிகழ்த்துவோர் மட்டுமே நபிமார்களும் வொலிமார்களும் என்றும், அவ்வாறில்லாதவர்களை நபிமார்கள் என்றோ வொலிமார்கள் என்றோ கூற முடியாதென்றும் கூறும் கூற்று முற்றிலும் தவறு. ஏனென்றால், அற்புதங்கள் நிகழ்த்தாத நபிமார்களும் வொலிமார்களும் இவ்வையகம் தனில் தோன்றி மறைந்துள்ளனர் என்பதற்கு ஆதாரபூர்வமான சான்றுகள் உள.

நபிமார்களுடைய அந்தஸ்து வேறு. வொலிமார்களுடைய அந்தஸ்து வேறு. இவ்விரு அந்தஸ்துகளுக்குமிடையே உள்ள தொலையை தென் துருவத்துக்கும் வட துருவத்துக்குமிடையே உள்ள பெருந் தொலையைக் குறிப்பிடலாம். எக்காரணம் கொண்டும் நபிமார்களுடைய அந்தஸ்தை வொலிமார்களால் அடையவே முடியாது.

வொலிமார்களின் அந்தஸ்தை நபிமார்களுடைய அந்தஸ்துக்கு மேலாக மதித்து மதி போதிக்கும் சில குருமார்களும் வழிகெட்ட ஞானாசிரியர்களும் நம் சமூகத்தவரிடையே இருந்து வருகின்றனர். சத்திய சன்மார்க்கத்தில் இன்னவர்கள் இழைத்து வரும் தீங்குகள் மிகவும் அபாயகரமானவை. ஆதலின், அல்–இமாம் ஹஸ்ரத் ஙஸாலீயின் சொல்லுக்கேற்ப, இஸ்லாம் மதத்தின் சத்துருக்களில் ஆயிரம் பேர்களைச் சிரச்சேதஞ் செய்வதைவிட இன்னவருள் ஒருவரைச் சிரச்சேதம் செய்து விடுதல் மிகவும் நன்று என்க.

ஆரிபீன், ஆஷிக்கீன்களில் வாகை சூடிய மன்னர்களான ஹஸ்ரத் கௌதுல் அஉழம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி ஆண்டகை, அல்குதுபு ஹஸ்ரத் அபுல்

ஹஸன் அலிய்யிஷ்ஷாதலீ, செய்குல் அக்பர் ஹஸ்ரத் முஹ்யித்தீன் இப்னுல் அரபீ, ஹஸ்ரத் அஸ்ஸிராஜு இப்னுல் பாரிழ், ஹஸ்ரத் அல்குதுபு ஸெய்யிதஹ்மதுல் கபீருர்றபாஈ, ஸெய்யிதுத்தாஇபா ஹஸ்ரத் ஜுனைதுல் பஃதாதீ, ஹஸ்ரத் அபூமத்யனுல் கௌது ஹஸ்ரத் அப்துல் கரீமுல் ஜியலீ இன்னவர்களும் ஏனைய நடு நாயகத்துவ, வொலித்துவமெனும் மகாசாசனப் பட்டம் பெற்ற சிரோன்மணிகளும், மேற்சொல்லப்பட்ட அத்தகைய அற்பர்கள், வழிகெட்ட முழு மூடர்கள் கொண்டுள்ள கொள்கைகளையும் அன்னவரின் அடிப்பாதைகளையும் விட்டு விலகி வெகு தொலையிலிருந்து குன்றின் மேலிட்ட தீபம் போல அன்னவர்களது ஞானக்கதிர்களை உலகுக்குப் பரப்பினர் என்பது ஈங்கு நோக்கற்பாலது.

நபி பெருமானதும் இதர தீர்க்கதரிசிகளினதும் அற்புதங்கள் பற்றி நம் திருமறையும் நாயகத் திருமொழிகளும் சவிஸ்தாரமாகக் கூறுகின்றன. வொலிமார்களுடைய அற்புதங்கள் குறித்துப் பெரு மேதைகள் தொகுத்த அரிய நூற்கள் சான்று பகர்கின்றன.

ஞானச்சுடர் நம் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்துடைய அதிவினோத அற்புதங்கள் எனும் கருமாத்து காற்று வெள்ளம் போலும் வற்றாச் சமுத்திரம் போலும் உள்ளன. அவர் தம் ஜீவிய காலத்திலேயே கருமாத்துடைய வொலி என்றும் குதுபு என்றும் பெயர் துலங்கினார். கருமாத்துகளிற் சில வருமாறு;—

× × ×

கருமாத்து (அற்புத நிகழ்ச்சிகள்);-

(1) மழை வருசிக்கப் பிரார்த்தனை;—

தபூக் யுத்தம் நிகழ்ந்தபோது நபி பெருமானும் சேனைகளும் தாகத்துக்கு ஜலமின்றி எங்கே யாருடைய



உயிர் தீர்ந்து விடுமோ என்று ஒவ்வொருவரும் பயங்கொண்டனர், அதனால், ஒட்டகங்களை யறுத்து வயிற்றைக் கிழித்து நீரை எடுத்துக் குடிக்கும் அஃதோர் சந்தர்ப்பமாய்விட்டது. நபி பெருமானை நோக்கி ''இறைத்தூதே! நமது கஷ்டமான நிலை நீங்க அல்லாஹ்வைப் பிரார்த்திக்க வேண்டுமே!'' என ஹஸ்ரத் அபூபக்ருஸ் ஸித்தீக் வேண்டினார். உடனே நபி பெருமானார் தமது இரு கரங்களை உயர்த்தி இறைவனைப் பிரார்த்தித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் நீல மேகம் மாறிக் கார் மேகம் கவிழ்ந்து மழை வருசிக்கத் தொடங்கியது. தண்ணீர் இன்றித் தாகத்தால் கஷ்டத்துக்குள்ளானவர்களெல்லாம் தண்ணீர் அருந்தித் தாகத்தைத் தீர்த்துக்கொண்டனர். அன்றியும், தேவையான அளவுக்கு அன்னோரிடமுள்ள நீர்ப்பாண்டங்களை நிரப்பினர், தபூக் யுத்தம் முடிந்து சேனைகள் யுத்தக்களத்தை விட்டுப் பிரியும்வரை மழை வருசித்த வண்ணம் இருந்தது என்பது சரித்திரங் கண்ட உண்மை. இச்சரித்திரம் பின்வரும் சம்பவத்துக்கு அடிகோலாகும்;—

ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம், தமது தாயகத்திலிருக்கும் போது தாயகமும் சுற்று முற்றுமுள்ள கிராமப்பகுதிகளும், மழையில்லாது பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தன. மக்கள் மட்டுமின்றி, பசும் புற்றரைகள் இல்லாமையால் மாக்களும் கூட அவதியுறும்படியான நிலை ஏற்பட்டது. மழை வருசிக்க வேண்டி ஊர் மக்கள் திரண்டு வொலி நாயகத்திடம் முறையீடு செய்தனர். அதன் காரணமாக, அவர் தம் திருக்கரங்களை உயர்த்தி இறைவனைப் பக்தியோடு வேண்டினார். ஊர் மக்கள் ஒன்று கூடி ஒரே தொனியில் 'ஆமீன்' எனக் கூறிய அப்பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்து மழை வருசிக்கச் செய்தான். கொடிய உஷ்ணத்தால் மடியும் தறுவாயிலிருந்த விருட்சங்களும் புற்றரைகளும்

தானிய நிலங்களும் விவசாய பூமிகளும் மறு மலர்ச்சி பெற்று வளமெய்தின. மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த பஞ்சப்பிணிகள் பறந்தோடின. சிறிது காலத்துக்குள் மக்களினதும் மற்றும் உயிர்களினதும் நிலைமாறி சகலரும் சுபிட்சமாக வாழத் தொடங்கினர்,

### (2) மகப் பேறருளல்;-

செல்வம் இருந்தென்ன, மகப்பேறில்லையே என வருந்தி முறையிட்டவர்கட்கெல்லாம் நமது வொலி நாயகம் மகப்பேறருள இறைவனை வேண்டினார். அருளும் அன்பும் உடையோனாகிய கருணாநிதி தனது காருண்யத்தால் அன்னவரின் புனிதமான பிரார்த்தனையை அங்கிகரித்து யாவருக்கும் மகப் பேறருளினான். காயல்பட்டணத்திலும் மலபாரிலும் இலங்கை தீவிலும் ஏனைய பிறதேசங்களிலும் வாழ்ந்த அக்காலத்தவர்கள் வொலி நாயகத்தின் புனித பிரார்த்தனையின் பிரதிபலனைக் கைமேற் கண்டனர். நாட்டங்கள், கோரிக்கைகள், தேவைகள் யாவும் தீர்க்கப்பட வல்லோனை வேண்டுமாறு நாளாவட்டத்தில் மக்கள் திரண்டு வந்து அவரது திருச் சமுகம் கூடினார்களென்றால் அவ்வொலி நாயகத்தின் புனிதத்தன்மையைப் பாராட்டாதிருக்க முடியுமா?

### (3) கோயில் நேர்ச்சைக்கு வந்த ஆடுகள்:-

காயல்பட்டணத்திலிருந்து சுமார் 5 மைல் தொலையிலுள்ள பிரபல சுப்பிரமணியக் கோயில் இருக்குமிடமான திருச்செந்தூரை நோக்கி அக்கோயிலுக்கு நேர்ச்சை செலுத்துவதற்காக ஒரு கூட்டத்தார் ஏழு ஆடுகளைக் கொண்டு சென்றனர். அவ்வழியே வந்த நமது தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் அதனை அறிந்து அவ்வாடுகளிலொன்றைக் கிரயமாகப் பெற்று வளர்க்க ஆசை கொண்டவராக அக்கூட்டத்தாரிடம் விலை கோரினார். அப்போது அன்னவர்கள் மறுத்ததுமன்றி மிகவும் இழிவான முறையில் எல்லை கடந்து அடாத மொழிகளையும் பிரயோகித்தார்கள். எந்த விக்கிரகத்துக்காக ஆடுகள் நேர்ச்சை செலுத்தக்கொண்டு போகப்பட்டனவோ அந்தக் கோயில் பூசாரி இரவில் திடுக்கிடும்படியான ஒரு கனவு கண்டு அவ்வாடுகள் அனைத்தையும் காயல்பட்டணத்துக்குக் கொண்டு சென்று தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்துக்குப் பாத காணிக்கையாகச் சமர்ப்பிக்கும்படி அவர் கூறினார். எனவே, கோயில் பூசாரி கண்ட கனவுக்கேற்ப, ஆடுகளைக் கொண்டு வந்த அக் கூட்டத்தினரை யழைத்து இந்தச் சணமே காயல்பட்டணத்துக்கு ஆடுகளைக் கொண்டு சென்று அங்கு தைக்கா ஸாஹிபு எனும் வொலி மகானுக்கு அவைகளைச் சமர்ப்பித்து விட்டு அவரிடம் மன்னிப்புக் கோரும்படியும் கட்டளையிட்டார். அதன்படியே அக் கூட்டத்தினர் செய்தனர் என்க.

### (4) கப்பலுக்குள் துள்ளி விழுந்த கடல் மீன்:—

இஸ்லாம் மதத்தின் ஐந்தாம் கடமையான ஹஜ்ஜு வணக்கம் புரிவதற்காக புனித நகர் திரு மக்கா ஷரீபை நோக்கிக் கடற் பிரயாணம் செய்த நம் ஞானச்சுடர் வொலி நாயகத்தோடு கீழக்கரை தைக்கா ஸாஹிபு வொலி நாயகமும் சேக்கனாப் புலவர் எனும் செய்கு அப்துல் காதிர் நெய்னா லெப்பை ஆலிம் புலவர் நாயகமும் கூடச் சென்றனர். நீண்ட நாட்களாக மாமிசம் தின்று

அலுத்துப்போய் மச்சம் தின்ன ஆவல் கொண்ட தம் சக தோழர்கள் அதுபற்றித் தங்களுடைய செய்கொலி நாயகத்திடம் சமிக்ஞை செய்தனர். சக தோழர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்கமாகத் தமது சிறப்பான தலையை அசைத்தவராக இறைவனை வேண்டினர், ஆழிய கடலினூடே மின்னல் வேகத்தில் சென்று கொண்டிருந்த அக்கப்பலில் அன்னவர்கள் எல்லோரும் வீற்றிருக்கும் தளத்தில் பெரிதோர் மச்சம் துள்ளி வந்து விழுந்தது. அது கண்டு அன்னவர்கள் திகைத்த வண்ணம் என்றும் சாகா இறைவன்மீது ஆணையாக இஃதோர் மகத்தான ஆச்சரியமும் புகழத்தக்க சம்பவமும் எனக்கூறினர். அந்த மச்சத்தைச் சமைத்து சகலரும் புசித்த போது அதன் சுவையும் உருசியும் கண்டு அன்னவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

ဟဟ ဟဟ

## (5) மழை நிற்கப் பிரார்த்தனை:—

அண்ணல் நபியின் திருப்பேரர், கலைச் சமுத்திரம், ஞான சொரூபி, 'தங்கள்' எனப் போற்றப்படும் பிரசித்தி பெற்ற நம் முதல் ஆத்ம ஞானி ஹஸ்ரத் ஸெய்யிது முஹம்மது புகாரீ தங்களுடைய புனித சமாதியை கண்ணனூர் சென்று தரிசிப்பதற்கு நமது வொலி நாயகம் விரும்பினர். சீடர்களில் சிலர் தம்முடன் வருவதாக வாக்களித்த போது, வாகனங்கள் இன்றிக் கால் நடையிலேயே பிரயாணஞ் செய்ய வேண்டுமென்ற முடிவை அன்னவர்களுக்கு அறிவிக்கையில் அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். நம்மொலி நாயகப் பெருமகனும் சீடர்களும் பல நூற்றுக் கணக்கான மைல் தொலையிலுள்ள அப் பிரயாணத்தில் இருக்கையில், வழியில் பல நாட்களாக அடை மழை பெய்தது. அதன் காரணமாக பிரயாணம் தடைபட்டு விடுமோ என சிஷ்யர்கள் பயந்தனர். ஆதலின், அன்றுள்ள கஷ்டமான சூழ்நிலை நீங்க அன்னவர்கள் வொலி நாயகத்திடம் முறையிட்டபோது, வொலி நாயகம் தம்மிரு புனித கரங்களை மும்முறை மேலே உயர்த்திக் கொட்டினர் (கை தட்டினர்). கார் மேகம் கவிழ்ந்து இருள் சூழ்ந்திருந்த நிலை மாறி, அம்மேகம் அங்குமிங்கும் கலைந்தோடிச் செல்லவே, வல்லோனின் கருணை முன்னின்று அடை மழை ஓய்ந்து அன்னவர்களுடைய சங்கடமான சூழ்நிலையை நிவர்த்தியாக்கியது.



ဟဟ ဟဟ

## (6) கனியிற் சிறந்தது பேரிச்சங்கனி:—

மலபாரில் கல்லிக்கோட்டுக்கு விஜயஞ் செய்த நமது மாமகத்துவப் பெரியார் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் அங்கு ஹஸ்ரத் ஜிப்ரீ தங்கள் வொலி நாயகத்துடைய மறைவிடத்தில் அன்னவருடைய ஞாபகார்த்தமாகப் பெரியதொரு விருந்து நடத்தினர். ராஜ்ஜியத்தின் பிரமுகர்கள், பொது மக்கள் பெரும்பாலோர் அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். பல ரக உணவுப் பொருட்களும் நானாவிதமான கனி வகைகளும் உணவு விரிப்பில் காணப்பட்டன. ஆனால், ஈச்சங் கனி மட்டும் இல்லாதது ஒரு குறையாக இருந்தது. ஆதலால், நம்மொலி நாயகம் தம் பணியாளரை அழைத்து "கனிகளிற் சிறந்த பேரீச்சங்கனி"யை வாங்கிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்.

மலபாரிலும் அதன் பிராந்தியத்திலும் பொன் விலை கொடுத்தாயினும் கூடப் பேரீச்சங் கனியை அறவே கண்டு கொள்ள முடியாத சந்தர்ப்பமாக இருந்தது. என்றாலும், வொலி நாயகத்துடைய கட்டளையை ஏற்றுப் பணியாளர் அங்குமிங்கும் தேடி அலைந்து அவரது

முயற்சி வீணாகி வெறுங் கையோடு திரும்பினார் பணியாளர். பேரீச்சங் கனியை வாங்கி வராததைக் கண்ட வொலி நாயகம் சபையை விட்டெழுந்து ஜிப்ரீ தங்கள் பெரியாருடைய மறைவிடத்துக்குள் விரைந்து சென்று ஒரு ஈச்சங் கனிக் குலையுடன் மீண்டார், அந்தக் கனி அங்கு கூடியிருந்த விருந்தினர்கட்குப் போதுமாக இருந்தது. தேனைவிட தித்திப்பாக இருந்தது அக்கனி. விருந்தினர் புசித்து இறைவனைப் புகழ்ந்து வொலி நாயகத்தை நாவாறப் போற்றினார்கள்.

<> <>

## (7) சொற்ப உணவு பொலியுறுதல்:-

நபி பெருமானின் விருந்தோம்பல் பற்றியும் சொற்ப உணவு பொலியுற்று அதனால் அனேகருக்கு வினியோகஞ் செய்த வரலாறு பற்றியும் ஆதாரபூர்வமான சரிதைகள் பல உள்ளன. அவற்றிற் சில வருமாறு:-

ஒரு மரக்கால் அளவு கோதுமையால் சுடப்பட்ட ரொட்டிகளையும், சமைக்கப்பட்ட ஒரு ஆட்டு மாமிசத்தையும் "கந்தக்" யுத்தத்தில் ஆயிரம் சகாக்கள் பங்கு பற்றினர். சிறிய ஒரு பாத்திரத்தில் இருந்த நெய்—தயிரினால் தயாரிக்கப் பெற்ற "ஹைஸ்" எனும் பதார்த்தத்தில் ஏறக்குறைய 300 தோழர்கள் கலந்து கொண்டனர். ஒரு மரக்கால் அளவு கோதுமையால் செய்யப்பட்ட உணவை "ஹுதைபிய்யா", "தபூக்" போன்ற இடங்களில் 1400 அல்லது 1500 பேர் கொண்ட சேனைகள் அருந்தினர்.

நபி பெருமானின் வாழ்க்கையை முன் மாதிரியாக வைத்து அதன் அடிப்படையிலே தமது வாழ்க்கையைச் செவ்வனே நடத்தி வந்த நம் தைக்கா ஸாஹிபு வொலி



நாயகத்தின் கறாமாத்துகளில் "சொற்ப உணவு பொலியுறுதல்" எனும் வினோதமும் ஒன்று. ஒரு கூஜாவிலுள்ள பானத்தைத் தாகத்தால் வருந்திய மாபெரும் கூட்டத்துக்கு அவர் வினியோகஞ் செய்தார். உணவு விரிப்பில் வைக்கப்பட்டிருந்த ஒரு கலம் உணவால் பசியால் வாடிய ஆயிரம் பேருக்கு உணவளித்தார்.

× × ×

## (8) அரச மரியாதையும் முதல் அமைச்சரின் முறையீடும்:-

தவ மா மணிச் செல்வமேதை ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் தென் மலையாளம் சென்றிருந்த போது திருவனந்தபுரம் நகரை அடைந்தார். அது சமயம் அந்நகர மன்னனின் முதல் அமைச்சரான நாக மணி எனும் நாமமுடையவர் வொலி நாயகத்தைப் பற்றி அதிசயமாகக் கேள்விப்பட்டு அன்னவரை கௌரவிக்கும் முகமாக அவரது திருச்சமுகம் வந்தார். இருவர்க்குமிடையே அன்பு ததும்பும்படியான பல சம்பாஷணைகள் நடந்தன. ஒரு சில வினாடிக்குள் அம்முதல் அமைச்சர் வொலி நாயகத்தை மகாப் பெரிய அந்தஸ்தில் உள்ள, தெய்வாம்சம் பொருந்திய மகானாக மதித்து, மன்னனுக்கும் சமஸ்தானத்திலுள்ள பிரமுகர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். இஸ்லாமியத்தவர்களும் இதர சமயத்தவர்களும் நாளாந்தம் வொலி நாயகத்திடம் வந்து அருள் வரம் பெற்றேகினர். இராஜோபசாரத்தோடு மன்னனும் மற்றவர்களும் வொலி நாயகத்தை வரவேற்று நல்லுபசாரஞ் செய்தனர். ஒவ்வொருவரும் தத்தம் மனதில் ஊசாடிய ஊசாட்டங்களைத் தெரிவித்து அவைகளெல்லாம் நிறைவேற்றப்பட வல்லோனை வேண்டும்படி முறையிட்ட

னர். முதல் அமைச்சரின் வெண் குஷ்டரோகம் பற்றி அவரிடம் முறையிடப்பட்டது. அதன் நிவாரணத்துக்காகப் பெருந் தொகையான பணம் செலவிட்டு நெடுங்கால சிகிச்சை செய்தும் எவ்விதமான குணமும் அடைய முடிந்ததில்லை என்றும் அவருக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. முதல் அமைச்சர் தன்னே முன் வந்து அவரது அங்கப்பழிப்பான ரோகம் அகல வல்லோனை இறைஞ்சுமாறு வேண்டிய போது, தமது உணவுத் தட்டில் உண்டு எஞ்சிய எச்சிலை அவர் புசிக்குமாறு அவருக்குச்சொல்லித் தமது அன்புக் கரத்தை அவரது வயிற்றில் வருடி, அவலட்சணமான அந்த ரோகம் அகல வல்லோனை இறைஞ்சினர். தமது அன்புக்கரம் பட்ட அச்சமயத்திலேயே வல்லோனருளால் அவர் பூரண குணமடைந்தார். வொலி நாயகத்தின் அபூர்மான சிகிச்சை கை மேற் கண்ட பலனைக் கொடுத்தமையால், அங்கப்பழிப்பு அகன்று அங்க வடிவு பெற்ற அமைச்சர், நம்மொலி நாயகப் பெருமகனில் அபரிமித அன்பை அள்ளி அளித்தார். வொலி நாயகம் தமது திருவனந்தபுரச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிச் செல்லும் தறுவாயில் அவருக்கு அதிகமான வெகுமதிகளை அன்பளிப்புச் செய்தார். முதல் அமைச்சருடைய உள்ளத்தில் குடி புகுந்துள்ள அபரிமித அன்புணர்ச்சியினுல் அவ்வெகுமதிகளை மறுக்காது மகிழ்ச்சியோடு வொலி நாயகம் ஏற்றுர்கள் அன்றே!

<>  <>

(9) தத்துவ மொழிகள்:—

நமது காரணக் குரு மாட்சிமை மிக்க தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்திடம் ஏராளமான தத்துவ மொழிகள் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் சில வருமாறு:—



எனது ஆத்மிக ஞான பிதாவின் நாமம் ''அப்துல் காதிர்'' (கௌதுல் அஃலம் ஹஸ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை) என்பதாகும். எனது நாமமும் அப்துல் காதிர் தான். யான் விரும்பின் இங்கிருந்தே எனது மனக் கட்புலனுல் பார்த்தவாறு என் கையை நீட்டினுல், பஃதாது மா நகரத்திலுள்ள அவரது புண்ணிய சமாதியைத் தொடுவேன்; ஆனுல், இடையே நாகூரில் சமாதி கொண்டுள்ள அப்துல் காதிர் (என நாமமுடைய ஹஸ்ரத் ஷாஹுல் ஹமீது மீரான் ஸாஹிபு வொலி) நாயகத்தை நான் கௌரவிக்க வேண்டியவனுக இருக்கிறேன்'' என்பது அவரது தத்துவ மொழிகளுள் ஒன்றுகும்.

''இறைவனுடைய உத்தமத் தூதரான முத்து முஹம்மது தாஹா நபியின் சிறப்பு மிகுந்த பாதக்குறிகள் இரண்டும் அசரீரத்துவ மூலம் என்னிரு புயங்கள்மீது தரிபட்டுள்ளமையால், என்னிரு பாதக்குறிகள் இரண்டும் ஞால முழுவதிலுமுள்ள அவ்லியாக்கள் அனைவரின் புயங்களிலும் தரிபட்டுள்ளன'' என்று அதிகார உணர்ச்சி மேலிட்டு தத்துவார்த்தத்தோடு கூறிய ஹஸ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி நாயகத்தின் சத்தியத் திரு மொழிக்கியைந்த அவ்லியாக்களோடு தாங்களும் இணைந்து கொள்ளப்படுகின்றீர்களா என்று வொலி நாயகத்திடம் கேட்ட பொழுது, 'ஆம்! அந்த மிதி இல்லாவிட்டால் இந்தக் குதி ஏது?' என்று அவர் கூறியிருப்பது அவரது மற்றெரு தத்துவ மொழியாகும். இது பின் வரும் சம்பவத்தை ஊர்ஜிதப்படுத்துகின்றது:—

காயல்பட்டணத்தில் கலைச்சமுத்திரம் எனப் புகழோடு விளங்கிய அல்லாமா ஹஸ்ரத் ஹிலுறு முஹம்மது லெப்பை ஆலிம், நமது வொலி நாயகத்தின் திருபுயத்தில் மாட்சிமை தங்கிய கௌதுல் அஃலம் உடைய

புனித பாதக்குறிகள் தரிபட்டுள்ளனவா என்பதை அறியும் நோக்கமாக இரண்டு தடவை அன்னவருடைய சமுகம் வந்தார். ''ஹஸ்ரத் கௌதுல் அஃலம் உடைய பாதக்குறிகள் என் புயத்தில் தரிபட்டுள்ளனவா என்று பார்க்க வந்தீரோ'' என வினவிய வொலி நாயகம், தமது பொன்னுன மேனியைப் பொதிந்திருக்கும் மேலங்கியை நீக்கி, புயத்தைத் திறந்து காட்டிய போது, அதில் ஜெக ஜோதியான ஒரு ஒளி நின்று பிரகாசித்துக் கொண்டிருந்ததைக்கண்டு அவ்வறிஞர்ப் பெருமகன் ஆச்சரியம் அடைந்தார். ஹஸ்ரத் அல்லாமா ஹிலுறு முஹம்மது லெப்பை ஆலிம் அன்று முதல் வொலி நாயகத்தில் நல் விசுவாசமும் உள்ளத்து நட்பும் கொண்டு இரண்டறக்கலந்து அன்னவரை சந்தேகமற்ற குதுபுஸ்ஸமான் (காலத்தின் குதுபு) என மனமாற ஒப்புக் கொண்டார்.

''கதிரவன் உதிக்கும் எல்லையிலிருந்து அது அஸ்தமிக்கும் எல்லைவரை எனக்கு அதிகாரம் உண்டு'' என்பது அவரது தத்துவ மொழிகளுள் மிகச் சிறந்த மொழியாகும்.

## (10) மறைமுக மக்கா யாத்திரை:-

ஜீவியத்தில் ஒரு தடவை தான் நமது பேரின்பச் சுடர் ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் வெளிப்படையாக திரு மக்கமா நகர் சென்று ஹஜ்ஜு வணக்கம் புரிந்தாரென்பது பிரசித்தம். ஆனுல், மறைமுகமாக அவர் சென்ற மக்கா யாத்திரைக்கு வரையறை இல்லை.



தென்னக நெல்லை மாவட்டத்துக்கும் அரேபிய தீபகற்பத்துக்குமிடையே ஏறத்தாழ பல்லாயிர மைல்கள் கொண்ட தொலை இருக்கின்றது என்பதைப் பூகோள ரீதியாக நாம் அறிகிறோம். தரை மார்க்கமாகவோ கடல் வழியாகவோ, ஆகாயமூலமாகவோ நாம் அங்கு சென்று மீளுவதாயின் அதற்காக நாம் சில மாதங்களையோ நாட்களையோ ஒதுக்க வேண்டியதிருக்கிறது. ஆனுல், இந்தக் காலத்திலுள்ள நவீன விஞ்ஞான முறைகளைப் போல வாகன வசதிகள் இல்லாத அந்தக் காலத்திலே நமது ஆத்ம ஞானி ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்துக்குத் தென்னகமும் திரு மக்கப் பதியும் உருவமும் நிழலும் போல ஒன்றை விட்டொன்று பிரியாது நெருங்கிய வண்ணமிருந்தன வென்ருல் அது மறைமுக வழியின் பயனேயன்றி வேறல்ல. எந்த ஒரு சந்தர்ப்பத்தில் நமது வொலி நாயகம் திரு மக்கப்பதியைத் தரிசிக்க விரும்புவாரோ அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் அங்கு தரிசனம் கொடுப்பார். சுருங்கக்கூறின், ஐந்து வேளைத் தொழுகை கூட ஒவ்வொன்றையும் திரு கஃபத்துல்லாஹ் ஷரீபினுள் தொழுது வந்திருக்கின்ருர் என இயம்பின் மிகையல்ல. பல்லாயிரக் கணக்கான மைல்கள் கொண்ட தொலையை ஒரு நொடிப் பொழுதில் கடக்கக்கூடிய அளவுக்கு இப்பூவுலகும் தனது விரிவான அண்டகோளச் சக்கரத்தை நெருக்கியும் குறுக்கியும் கொடுத்தது என்று தான் சொல்ல வேண்டும். இது பின் வரும் சம்பவத்தை உறுதிப்படுத்தும்:-

ஞானப் பூங்காவிலே வனப்புடன் வாழ்ந்து இறையருள் சுரக்க வேண்டி மெய்ம்மறந்து தவம் செய்த உத்தம ஞான சொரூபியான சின்ன முத்துவாப்பா எனும் சிறப்புப் பெயர் உடைய ஹஸ்ரத் ஸெய்யிது அபூபக்ரு வொலி நாயகம் ஆரம்பத்திலே நமது வொலி நாயகத்துடைய உன்னத நிலையை உணராதவராயிருந்தார்.

ஹஜ்ஜு செய்வதற்காக அவர்கள் திரு மக்கமா நகர் செல்லும் தறுவாயில், அப்புனித யாத்திரைப் பற்றித் தெரிவிப்பான் வேண்டி வொலி நாயகத்திடம் வந்த போது அவர்களுக்கு இன்சொல் பகர்ந்து ஆசீர்வதித் தார். ஹஸ்ரத் சின்ன முத்துவாப்பா அவர்கள் விடை பெற்றுச் செல்லும் தறுவாயில், ''நீர் மக்கப்பதிக்கேகி திரு ஹறம் ஷரீபினுட் சென்றவுடன் (ஓர் எல்லையைக் குறிப்பிட்டு)இன்ன இடத்தில் மேன்மைதங்கிய (ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹ் மிஸ்ரீ மக்கிய்யி எனும்) ஒரு பெரியார் வீற்றிருப்பார்; அவருக்கு என்னுடைய ஸலாம் சொல்வீராக!'' என அவரை வேண்டினார். ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் வேண்டுகோளைப் பெற்று நலமென நல்வாக்குக் கொடுத்து விட்டுப் பிரயாணம் செய்த ஹஸ்ரத் சின்ன முத்துவாப்பா வொலி நாயகம், மாதங்கள் பல கழிந்த தன் பின்னர் திரு மக்கப்பதிக்கு வந்து ஹறம் ஷரீபினுள் குறித்த எல்லையில் குறித்த மனிதரைக் கண்டு ஸலாம் தெரிவித்தார். அம்மனிதர் பிரதி கூறி, "நீர் தைக்கா ஸாஹிபு வொலியை எப்பொழுது சந்தித்தீர்? அன்ன வர் எனக்கு எங்கிருந்து ஸலாம் தெரிவித்தார்?'! எனக் கேட்க; ''நான் எனது ஊரை விட்டுப் பிரியும்போதும்'' என் ஊரிலிருந்தும்''... என்று பதில் சொன்னார்கள். ''அப்படியானால். தைக்கா ஸாஹுபு வொலி நாயகம் இங்கு என்னுடன் வெகு நேரமாக சம்பாஷித்து விட்டு இப்போதுதானே என்னைப் பிரிந்து இதோ செல்கின்றார்'' எனச் சொன்னார் அப்பெரியார். எனவே, அப்பெரியார் சுட்டிக்காட்டிய வழியை நோக்குமிடத்து, அங்கு நமது வொலி நாயகம் அவ்வழியே சென்று கொண்டிருந்த தைக் கண் கூடாய்க் கண்டு களிப்புற்றார். ஞானச்சுடர் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்துடைய உன்னத நிலையை ஏலவே உணராதிருந்த ஹஸ்ரத் சின்ன முத்து வாப்பா வொலி நாயகம் தாய் நாடு திரும்பியதும் நம்



வொலி நாயகத்தின் திருச்சமுகம் வந்து, எத்திசையிலும் எழிலிய ஏந்தலே! என எழில் காட்டி, புன்னகைப்பூத்த இன் முகத்தோடு உள்ளம் பூரித்த அன்பு மொழியுடன் சம்பாஷித்தார். பின்னர், இருவரினதும் உறவு இகத் தொடு பரத்தும். நல்லுறவாக மாறியது என்க.

வொலிமார்களினது அரசர் கௌதுல் அஉழம் ஹஸ் ரத் முஹ்யித்தீன் ஆண்டகை உட்பட தெய்வாசீர்வாதம் பெற்ற வொலிமார்கள், குதுபுமார்கட்கெல்லாம் இவ் வையகம் ஓர் தூரதரிசினியைப் போன்று அல்லது ஒரு பந்து போல உருண்ட வடிவமானதொரு பொருளுக்குச் சமானமாகவே இருக்கும். வையகத்தை எந்தப்பக்கம் எப் படி எப்படித் திருப்பினாலும் அந்தப்பக்கம் அப்படி அப்படி யெல்லாம் அது உருண்டோடிச் செல்லும். அதில் நிக ழும் சர்வ நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் நேரிற் பார்த்தறியும் சக்தி அன்னவர்களுக்கு இறைவனால் அளிக் கப்பட்டுள்ளது. எழுவான் முதல் படுவான் வரை அன் னவர்களுடைய ஆட்சி பீடங்கள் உள என்பதைச் சரித்தி ரம் நிரூபித்துக் காட்டுகின்றது. எனவே, ''கதிரவன் உதிக்கும் எல்லையிலிருந்து அது அஸ்தமிக்கும் எல்லை வரை எனக்கு அதிகாரம் உண்டு'' எனும் ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் தத்துவார்த்த மான மொழியும் இதன் அடிப்படையான உண்மையைத் தழுவியே உள்ளதென்று உணர்க!

அங்க வடிவம், குணாதிசயம், மறைவு:—

ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் மெலிந்த தேகக் கட்டுடையவர், நெட்டையானவர், செந் நிறம் உடையவர், குறைந்த தாடியும், விரிவான நெஞ்சமும், செந்தாமரை போன்ற முகவழகும் பெற்ற வர். உடல் மிக்க அழகுடையவர். சாந்த குணமும்,

நகை முகமும், நற்குண நல்லொழுக்கமும், பெருமித பண்பும், கலையின் தெளிவை எடுத்துக் காட்டும் தோற்ற மும் அஞ்சாநெஞ்சமும் உடையவர். தக்க நெறி பற்றி யுரைக்கும் சொல் வன்மையில் மெய்ப் பொருள் காண இயல்புடைய நம் வொலி நாயகம் ஜீவியத்தில் மக்க ளுக்கு ஆற்றிய தொண்டு செப்பிடற்கரிது. அடக்கம், பொறுமை, தயை, தாழ்மை, ஈதல், ஞானம் யாவும் அவரது சிறப்பியல்களாகும்.

ஹிஜ்ரா 1272—ம் வருடம் ஸபர் மாதம் 14.ம் திகதி வெள்ளிக்கிழமை வைகறைப் பொழுதில் தமது 81—வது வயதில் (கி. பி, 1856) தமது உலக வாழ்வு முற்றுப் பெற்றது. தந்தையின் பாதத்தடியில் அன்னவரது தைக்கா வெனும் தவ நிலையத்தில் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

நவ்வரல்லாஹு ளரீஹஹு

(இறைவன் அன்னவரின் சமாதியை ஜோதிமயமாக் குவானுக!)

ஆமீன்!!

அறிவுச் சுடர் அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் இயற்றிய ''மவ்ஹிபத்துல் வாஹிப்-பீ—மன்கிபத் திஷ்—ஷைகி தைக்கா ஸாஹிபு''எனும் மௌலிது ஷரீபை உறு துணையாகக் கொண்டு இச்சரித்திரம் உருவாக்கப் பட்டது.

ஆக்கியோன்.



## (4) நான்காம் ஆத்ம ஞானி
## ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹ் வொலி நாயகம்:-

ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் நாம் குறிப்பிடும் நான்கு ஆத்ம ஞானிகளுள் நான்காம் இடம் பெற்றவர். அவர் ஸித்தீக்கீ வமிசத்தில் தோன்றிய ஹஸ்ரத் உமறுலி நாயகத்தின் திருப்பேர ராவார். ஹஸ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் அருந்தவ மைந்தரா வார். அன்னையின் திருப் பெயர் ஹஸ்ரத் ஆமினா.

காயல்பட்டணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு ஹிஜ்ரா 1242—ம் ஆண்டு அவதரித்த இப்பெரியார் அன் புத் தாயிடம் அற நெறியொழுக்கம் கற்றுத் தந்தை யிடம் எம்மறையாம் திருமறையும் பல கலைகளையும் குறைவில்லாது கற்றுத் தேறினார். ஆண்டவனின் அருள் ஜோதி அன்னவருடைய உள்ளத்தை ஒளியாக்கி யது. காலப் போக்கில் அவருடைய அந்தஸ்து உயர்ந்து மிகச் சிறந்த மனிதரானார். 'ஜிப்ரிய்யத்துல் காதிரிய்யா' தரீக்காவுக்குத் தம் தந்தை ஞானாசிரியராகவும் தீட்சை (பைஅத்து) வழங்குவதற்கு விசேடமானவராகவும் இருந்தமையால் தம் தந்தையிடம் அதற்கான தீட்சை பெற்றார்.

பருவ கால வயதெய்தியபோது தந்தையிடம் பிரதி நிதித்துவம் எனும் கிலாபத்துப் பெற்று முதல் கலீபா வாக அன்னவரது ஸ்தானத்தில் அமர்ந்து தம் குல கோத்திரம் நனி சிறக்க விளங்கினார். அறிஞர்கள் மத்தி யிலே தம் கால மக்களிடையே நல்ல செல்வாக்குப்பெற்று யாவரும் கண்ணியமாக மதிக்கும் வண்ணம் சிறந்த பண் புகளோடு திகழ்ந்தார். அன்னையின் அணைப்பில் ஆணை தவறாமல் ஆண்டவனில் ஆழ்ந்த நம்பிக்கையோடு வாழ்க் கையைச் செப்பனிடத்துணிந்தாராதலின், எல்லாம்

வல்ல ஆண்டவனின் அனுக்கிரகம் முன்னின்று அவரைக் கை தூக்கியதன்றோ! ஆகவே தான், அவர் மதிப்பிற் குரிய மகானாக, புகழ்ப்பூத்த பூமானாக, வான்புகழேந் திய வள்ளலாக வாழ்ந்தார்.

தமது எண்பத்தொரு ஆண்டு கால வாழ்க்கையிற் பெரும்அளவு பொது ஜன சேவையை மேற்கொண்டிருந் தது. இஸ்லாமிய மக்கள் மட்டுமன்றிப் பிற மதஸ்தர்க ளும் அன்னவரை நன்கறிந்திருந்தனர். அருள் பூத்த அன்னவரின் திருமுகத்தை ஒரு முறையேனும் பார்ப்பது பெரிதொரு அதிர்ஷ்டம் எனக் கருதினோர் பல்லோர். தந் தையைப் போன்றும் பாட்டனாரைப்போன்றும் மக்க ளுக்கு நல்வழி துலக்கி அன்னவர்களை இறையருளுக்கு ஆளாக்கினார். தம் கருமாத்து எனும் அதி அற்புதங்கள் வலுத்த நெஞ்சங்களை வசப்படுத்த முக்கிய ஆயுதங்க ளாக இருந்தன.

தாம் நிகழ்த்திக் காட்டிய கருமாத்துக்கள் எண்ணு தற்கரிது. தமிழகம், மலபார் இராஜ்ஜியம், இலங்கைத் தீவு ஆதியாம் நாடுகளில் தம்மை ஞானாசிரியராய்க் கொண்டவர்களிடையே அவை இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றன. வாழையடி வாழையாக வரக்கூடிய சிஷ் யர்களின் சந்ததிகளும் தங்களின் முற்பிதாக்களைப் போன்று தம் வழியினைப் பின்பற்றியே வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

மனிதப் பிறவி எடுத்து மனித உருவத்தில் நடமாடு வோர்களை யெல்லாம் மனிதர்கள் என்று நாம் சொல் கின்றோம். ஆனால் இஸ்லாமிய சமுதாயத்தில் ஞானஅறிவு வளர்ச்சி பெற்று அகம் தெளிந்து இறைவன்பால் அன் பும் பண்பும் மிகுந்து ஆத்ம ஞானிகளாய், தவயோகிக ளாய்ப் போய் விட்டவர்களைத்தான் முழு மனிதர்கள்



(இன்ஸான் காமில்) எனக்கூறுவர் ஸூபிய்யாக்கள். குண மும் கெட்டு, நடத்தையும் சீரழிந்து போனவர்களை முழு மனிதர்களாக அன்னவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அத்தகையவர்களுடைய உள்ளங்களில் மாசு படிந்து மனக் கண்களை மறைக்கும் பாவங்கள் கார் மேகம்போல கவிழ்ந்து அப்பழுக்கற்ற பாவிகளாய்ப் போன அன்னவர் கள் நடமாட்டத்தில் மக்களாகக் காட்சி அளிப்பினும் மாக்களாகத் தானிருப்பர். ஆத்ம ஞானிகளான அவ்லி யாக்களுடைய கண்களுக்கு அத்தகையவர்கள் மனித உருவம் எடுத்த முழு மனிதர்களாகத் தோற்றுவதில்லை. மனிதப் பிறவிக்குரிய அங்க வடிவங்கள் பூரணமாக இருந்த போதிலும் உள்ளம் கெட்டுச் சீரழிந்து போன தன் காரணத்தால், அவ்வங்க வடிவங்கள் விலங்கினங் களை ஒத்ததாகவே அன்னவர்கள் காண்பர். எனவே, மனிதன் தனது பிறப்பின் பயனை அடைவதற்கும், அவன் அறைகுறை மனிதன் எனும் குறைபாட்டை நீக்கி முழுமனிதனாவதற்கும் உள்ள முயற்சிகளை அவன் கையாள வேண்டும். அதற்கான முயற்சி இல்லையெனில், நிச்சயமாக அவன் இகபரமிரண்டிலும் துரதிர்ஷ்டத்தை அடைவான் என்று கூறுவர் ஆரிபீன்கள்.

முழு மனிதன் (இன்ஸான் காமில்) என்று கூறும் ஆரிபீன்களுடைய இலக்கணத்திற்கு நமது மாண்புமிக்க ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் அவர்கள் மிகவும் தகுதியுடையவராக இருந்தார் என்ப தற்கு அன்னவருடைய காலத்து ஞானவான்கள் கூறும் சான்றுபோதுமானது. எண்களுக்குட்புகாத எத்தனையோ சம்பவங்களில் மலபாரில் அலப்பே (ஆலப்பள்ளி) நகரில் நிகழ்ந்த சம்பவமும் ஒன்று.

மலபாரில் அலப்பே நகரில் நமது வொலி நாயகம் தங்கியிருந்த ஒரு சமயத்தில், அங்கு தெய்வ தியானத்தில் ஊறிப்போய் உள்ளந்தெளிந்து உலகப்பற்றற்று உள்ளும் புறமும் இறைவன் பால் உணர்ச்சி வசப்பட்டு அதன் போதையில் மதி மயங்கிக் கிடந்த மஸ்தான் ஒருவரை ஜனங்கள் கூடி நின்று ஏளனஞ் செய்தனர், அவர் ஆடைகள் இல்லாது முழு நிர்வாணமுடையவராக இருந்தமையால் அன்னவர்களுடைய கண்களுக்கு அவர் இழிவாகக் காணப்பட்டார். ஒரு நாளன்று ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் அவ்வழியே கால் நடையில் வந்த பொழுது, அஃதோ அந்த மஸ்தான் உடனெழுந்து ஆடைகளை அணிந்து கொண்டு மிகுந்த மரியாதையோடு முன் வந்து அவருக்கு ஸலாம் கூறினர். அம்மாதிரி பழக்கத்தை அவரிடம் புதிதாகக் கண்ட ஜனங்கள் திகைத்த வண்ணம் அவருடைய போதை தெளிந்ததும் அவரை நோக்கி, 'நீர் இவ்வாறு செய்ததன் காரணம் என்ன' என்று கேட்டனர். 'நான் இப்போதுதான் முழு மனிதனைக் கண்டேன்' என்று அவர் விடையளித்தார்.

ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகத்தின் தந்தை கௌரவமிக்க ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம் திரு மக்கப்பதிக்கு ஹஜ்ஜு வணக்கம் புரியச் சென்றிருந்த போது, அங்கு செய்குல் இஸ்லாம் ஹஸ்ரத் முஹம்மது ஸாலிஹுல் மிஸ்ரிய்யுல் மக்கிய்யி எனும் பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இருவரும் அசமிய அறிவு நுட்பங்களை அளவு கடந்து பரிமாறிக் கொண்டனர். ஒவ்வொருவரும் தத்தமக்கு இறைவனல் அருளப்பட்ட அறிவுச் செல்வத்தையும் விலாயத்தின் வெகுமதியையும் நினைவு கூறினர். அறிவாற்றலும் அறநெறியும் ஒருங்கே அமையப்பெற்ற அப்பெரியார் மகாகனம் ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தை நோக்கி அல்லாஹ்வினருளால் உங்களுக்கு ஒரு ஆண் மகவு பிறக்கும்; அவர் வொலியாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குவார்; அந்த ஆண் மகவுக்கு எனது நாமத்தைச் சூட்டுவீர்களாக என்று வேண்டிக் கொண்டார்கள். செய்குல் இஸ்லாமின் திரு வாக்குப் பலித்தது. ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் பிறந்தார்கள். ஆறறிவு படைத்த எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வொலியாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினரென்பது இங்கு விசேடமாகக் கவனிக்கத்தக்கது.



நல்லவர்கள் செய்யும் சேவையைப் பாராட்டுதல் வேண்டற்பாலது. ஆதலின், நம் மதிப்பிற்குரிய மகான் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் செய்த பொது நலச் சேவைகளுள் இறை நினைப்புக்காக கௌதுல் அஉழம் ஹஸ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகையின் திருநாமத்தில் ஆங்காங்கு பல தைக்காக்களைக் கட்டி வைத்ததும் ஒன்று. பரிசுத்த எண்ணம் கொண்டு அன்று அன்னவரால் கட்டப்பட்ட தைக்காக்கள் ஒவ்வொன்றும் 'முஹ்யித்தீன் தைக்கா' வெனும் நாமம் தாங்கி இன்றும் துலங்கி வருகின்றது. அவ்வொலி நாயகம் இறைவனடி சேர்ந்த நாளை ஞாபகத்தில் வைத்துப் பிரதி வருடமும் ஆங்காங்கு திரளான மக்கள் கூடி அன்னவரின் திருப்புகழ் பாடிக் குதூகலமாக விசேட வைபவங்கள் நடத்தி வருவதை நோக்குமிடத்து அவ்வொலி நாயகப் பெருமகனின் புனித சேவையைப் பாராட்டாதிருக்க முடியாது.

வொலி நாயகப் பெருமகனை குருநாதராக, உள்ளத்துக்கு உற்ற துணையான ஞானசிரியராக ஏற்றுக் கொண்ட சிஷ்யர்களில் அக் குருநாதருடைய திருப்பெயரைத் தம் மக்களுக்குச் சூட்டுதல் பெரிதொரு பாக்கியம் எனக் கருதினேர் ஆயிரமாயிரம். ஆதலால் தான், தமிழகத்திலும் மலபார் இராஜ்ஜியத்திலும் இலங்கைத்

தீவிலும் 'செய்கு முஹம்மதுஸாலிஹ்' எனும் நல்நாமத்தை யுடையவர்கள் அதிகமதிகம் காணப்படு கின்றனர் அன்றோ!

''ஒருவனை நேசிப்பதும் வெறுப்பதும் இறைவனுக் காகவே இருக்க வேண்டும்'' எனும் நபிபெருமானின் சிறந்த கொள்கை ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகத்திடம் மிளிர்ந்து காணப்பட்டது. ஆதலின்' நல்ல மனிதர்களைக் கண்டால் மலர் முகத்தோடு, அன்பு கனிந்த உள்ளத்தோடு, நல்லபிமானத்தோடு அன்னவர் உறவு கொள்வார். ஆனால், அதற்கு மாறாகக் கெட்ட மனிதர்களைக் கண்டால் கடுஞ்சினங்காட்டி, உள்ளத்தில் வெறுப்பையூட்டி' உறவை நாடும் நெஞ்சத்தில் விரோதத்தை நிலை நாட்டிப் பகைமை கொண்வார். இது அவரது வாழ்க்கையில் சர்வள்சாதாரணமாக மிளிர்ந்த ஒரு அம்சமாக இருந்தது.

அவ்லியாக்களில் அற்புத நிகழ்ச்சிகளை வெளியாக்கும் அவ்லியாக்கள் என்றும், அற்புத நிகழ்ச்சிகளை வெளியாக்காத அவ்லியாக்கள் என்றும் இருதரப்பினர் உளர். எனவே, இவ்விரு தரப்பினருள் முதற் தரப்பினரைச் சேர்ந்த நமது பெருமைக்குரிய செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம், தம் ஜீவியத்திலும் மறைவுக்குப் பின்னும் நிகழ்த்திக் கட்டிய அதி விநோத அற்புத நிகழ்ச்சிகள் மட்டிலடங்கா. விரித்தால் இவ்வேடு இடங் கொள்ளாது என்றாலும் நீண்ட தொலையைக்குறிக்க எல்கைக் கல் நாட்டுவதே போன்று அவற்றுள் ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் கூறி அவற்றிற்கு எல்கைக் கல் நாட்டி எஞ்சியவைகளுக்கு விளக்கம் தேடுதல் சிலாக்கியம் என்று கருதுவது தவறல்ல.

எங்கும் நிறைந்த ஏக பரம் பொருளான அல்லாஹ்வின் நல்லருளைப் பெறுவதற்கு நம் மொலி நாயகத்தின்



புனித பிரார்த்தனையை வேண்டி நின்ற சிஷ்யர்களுள் இலங்கைத் தீவில் கம்பளை நகரில் பிரபல வர்த்தகராகவும் மிராசுதாராகவும் வாழ்ந்த நூறு முஹம்மது எனும் பெரியாரும் ஒருவர். அவர் நம்மொலி நாயகத்தின் தந்தையின் ஆசீர்வாதத்தால் தம் பெற்றோர்க்கு நல் மகனாய்ப் பிறந்தாராதலின், வொலி நாயகத்தின் பால் வைத்திருந்த அவருடைய அன்பு காலப் போக்கில் வளர்ச்சி பெற்று உச்ச நிலையை அடைந்து விட்டது. கனவிலும் நனவிலும் வொலி நாயகத்தைக் கண்டு மகிழும் வாய்ப்பையும் பெற்றார். அவரைப் பிடித்திருந்த பொல்லாத நோய்கள் தீர வொலி நாயகத்தின் உதவியை நாடிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், தம் பணியாளர்களிலொருவர் தம்மிடம் வந்து ''அழகுமிக்கதோர் அரசனைப் போன்ற பெரிய மனிதர் ஒருவர் உங்கள் சமுகம் வந்து, அவர் தம் கரத்தால் உங்கள் தொடையை வருடி தேக நலனுக்கு இறைவனை இறைஞ்சுவது போலவும், அவருடைய இறைஞ்சல் முடிவுற்ற போது ஒலுச் செய்வதற்கு ஜலம் கொண்டு வருமாறு அவர் என்னைக் கேட்க, உடன் நான் அவருக்கு ஜலம் கொண்டு வந்து கொடுப்பது போலவும் நான் சொப்பனம் கண்டேன்'' என்று கூறினார். எனவே, பணியாளர் கண்ட அதிசய அச் சொப்பனத்தைக் குறித்து சிந்தை கலங்கிய வண்ணமிருந்த பெரியார் மகாசனம் நூறு முஹம்மது, எந்த நாளில் தம் பணியாளர் சொப்பனம் கண்டாரோ அந்த நாளின் வைகறைப் பொழுதிலேயே அவரைப் பிடித்திருந்த பொல்லாத அத்தனை நோய்களும் தீர்ந்து சொஸ்தமடைந்தார். வருடம் ஒன்று கழிந்ததன் பின்னர் கம்பளை நகருக்கு விஜயம் செய்த வொலி நாயகத்தை அப்பணியாளர் நேரிற் கண்டபோது அன்றொரு நாள் நான் யாரை எனது சொப்பனத்தில் கண்டேனோ அவரேதான் இந்தப்பெரிய மனிதர் எனக் கூறினார்.

(தற்சமயம் கம்பளை நகரில் பெரிய மிராசுதாரும், அறிஞர்ப் பெருமக்களை கௌரவிப்பவரும், தயாள குணத்தை உடையவரும், வொலி நாயகத்தின் பால் அளப்பரிய நேசங் கொண்டவருமான கனம் உமர் பாச்சா (J. P.) என்பவர், பெரியார் நூறுமுஹம்மதுவின் புத்திரர் என்பது குறிப்பிடத்தக்கது.)

ஹளறமவ்த்தைப் பிறப்பிடமாகக் கொண்டு மலபார் இராஜ்ஜியத்தில் கல்லிக்கோட்டில் சமாதி கொண்டிருக்கும் மேன்மை தங்கிய ஸெய்யிதுஷ்—ஷைகுல் ஜிப்ரிய்யி தங்களின் புனித சமாதியைத் தரிசிக்கச் சென்ற நமது செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம், அங்கு அன்னவருடைய திரு தர்கா ஷரீபில் தங்கினார். அங்கு கூட்டங் கூடி இறைவனை திக்று (ஞாபகம்) செய்து கொண்டிருந்த சபைக்கு அவர் வந்த போது சபையினரால் வரவேற்று கௌரவிக்கப்பட்டார். திக்று மஜ்லிஸ் முடிவாகும் தறுவாயில் வழமை போல் சபையினருக்குக் கனிவர்க்கங்கள் விநியோகஞ் செய்யப்பட்டன. ஆனால், சபையில் பூச் செண்டு இல்லாதது ஒரு குறையாக இருந்ததைக் கண்டு ''இங்கு பூக்கள் வைக்கப்படவில்லையே'' என்று வொலி நாயகம் ஒலி எழுப்பினார். ''பூப்பூக்கும் காலம் இதுவல்ல'' என்று அவரிடம் சொல்லப்பட்டது. அது சமயம் அவர் எழுந்து புனித தர்கா ஷரீபுக்குட் சென்று கைநிரம்பிய நறு மணப் பூக்களோடு மீண்டு விரைந்து வந்தார். ஆங்காங்கு சபையினருக்கு அப் பூக்கள் வழங்கப்பட்டதும் ''கஸ்தூரி வாடையை விட மேலான இந்த நறு மணப் பூக்களை எங்கிருந்து பெற்றீர்'' என்று அவரைக் கேட்க, '' ஹஸ்ரத் ஜிப்ரீ தங்கள் எனக்கு அன்னவருடைய சமாதியிலிருந்து கொடுத்தார்'' என்று விடையளித்தார்.



ஸுஊதிய ஆட்சி உதயமாவதற்கு முன்னர் அரேபிய நாட்டில் நாட்டுப்புற அரேபியர்கள் எனப் பொருட்படும் பத்துக்களுடைய தொல்லைகள் எல்லை மீறித் தாண்டவமாடின. புனித யாத்திரைக்குச் சென்று உயிரோடு மீளுவதுமிகவும் கஷ்டமானதொரு காலமாக இருந்தது. பணம் பறிக்கும் அக் கொள்ளைக் கூட்டத்தினர்களால் தாக்கப்பட்டும், வீதிகளில் வீழ்த்தப்பட்டும், கற்களால் அடிக்கப்பட்டும், கத்திக் கூரிலும், ஈட்டி நுணியிலும், வாள் முனையிலும் நிறுத்தப்பட்டும் வந்தவர்கள் பலப் பலர் என்க. பலப்பட்டினத்தில் ஹாஜ்ஜீ ரமழான் எனும் பெயருடைய, ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகத்துடைய சிஷ்யர் ஒருவர், புனித நகர் திரு மக்கா ஷரீபுக்குச் சென்று ஹஜ்ஜு செய்ய முயன்றார். வழித் தோழர்களோடு சென்ற அவர் அரபு நாட்டை அடைந்ததும், அத்தோழர்களை விட்டுப் பிரிந்து தன்னந்தனியே சென்றார். கொள்ளையடிக்கும் ஒரு பத்து அவரோடு நயவஞ்சகமாகத் தோழமைக் கொண்டு அவரோடு இரா வழிப் பயணத்தில் கூட்டுச் சேர்ந்தான். அர்த்த ராத்திரியான போது அந்தக் கொள்ளைக்காரனான பத்து அவரைக் கொலை செய்து விட்டு அவரிடமுள்ள பொருட்களைக் கொள்ளையடிக்கச் சதித்திட்டம் தீட்டினான். தம்மை அண்டிய வழித் தோழன் நயவஞ்சகன், சதிகாரன் என்பதை நன்கறிந்த சிஷ்யர் ''நான் இரண்டு ரக்அத்துகள் இறைவனைப் பணிந்து தொழும் வரை என்னைக் கொல்லாது விட்டுவை'' என்று அவனை வேண்டிக் கொண்டார். தொழுது கொண்டிருப்பவரைக் கொலை செய்துவிட்டுப் பொருட்களைச் சூரையாடுதல் மிகவும் எளிது என்றெண்ணி அவரது வேண்டுதலை ஒப்புக் கொண்டான். உடன் அந்த அர்த்த ராத்திரியில் அவர் இறைவனைப் பணிந்து தொழ ஆரம்பித்தபோது தம் ஞானாசிரியர் மௌலானா ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகத்தைத் தம்

நெஞ்சத்தில் அழைத்து இறைவனிடம் சிபாரிசு தேடினவராக உடுக்கமான நிலையில் நின்று 'அல்லாஹு அக்பர்'' என்று தக்பீர் முழக்கினார். சதித்திட்டத்தை அது வரையும் மனதில் வைத்துக் கொண்டிருந்த அந்தச் சதிகாரன், தனது கூரிய வாளை உயர்த்தி அவரைக் கொலை செய்ய முயன்றபோது கை நடுங்கிய வண்ணம் தன்னைத் தானே கொலை செய்து செத்து மடிந்தான். இறைவனுடைய ஞாபகத்தில் ஊறிப்போய் உடலும் உள்ளமும் இரண்டறக் கலந்து அவனை நேருக்கு நேர் நின்று நோக்கித் தொழுது கொண்டிருந்த அவர், தம் தொழுகை பூர்த்தியானதும் ஓடோடி வந்து தம் வழித்தோழர்களைச் சேர்ந்து ஹஜ்ஜு வணக்கத்தை முடித்துச் சுக சேமமாய் தம் நாட்டுக்கு மீண்டார். ●

இல்லறத்தின் மூலம் நல்லறம் கண்ட நானிலப் பெரியோர்களிலே நமது செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகமும் ஒருவர். இல்லற மேற்று மூன்று மக்களுக்கு அவர் தந்தையானார். தம் வாழ்க்கைத் துணைவியின் பெயர் ஹஸ்ரத் ஸெய்யிது அலீ பாத்திமா என்ப



தாகும். இம்மனைவியின் மூலம் அன்னவருக்கு ஒரு புத்திரியும் இரு ஆண் மக்களும் பிறந்தனர். புத்திரியின் பெயர் ஸெய்யிது உமர் ஆமினா உம்மாள் என்பதாகும். ஆண் மக்களின் பெயர்கள்——: (1) உமர் அப்துல் காதிர் ஸாஹிபு, (2) அப்துல் காதிர் நெய்னா என்பனவாகும். ● ஞானச்சுடர் ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகத்தின் திருப் புதல்வியான ஹஸ்ரத் மற்யம் அவர்களுடைய செல்வப் புதல்வர் மகா கனம் ஸதக்கு அப்துல் காதிர் அவர்களை மணந்த இப்புத்திரியான ஹஸ்ரத் ஸெய்யிது உமற் ஆமினா உம்மாள் அவர்களுக்கு ஸெய்யிது முஹம்மது பாத்திமா நாச்சி எனும் ஒரு பெண் மகவு பிறந்து அதன் மூலம் சந்ததிகள் இருந்து வருகின்றனர். ●

● இவ்விரு ஆண் மக்களும் இளமையிலேயே இறைவனடி சேர்ந்து, ஸாஹிபு தைக்காவிலேயே நல்லடக்கஞ் செய்யப்பட்டுள்ளனர்.

● கௌரவ ஹஸ்ரத் முஹம்மது ஸுல்தான் அப்துல் காதிர் எனும் பெரியாரின் மனைவியும், தற்சமயம் காயல்பட்டணத்தில் ''ஜிப்ரிய்யத்துல் காதிரிய்யா'' தரீக்காவுக்கு அதிகாரபூர்வமான கலீபாவாக, ஞானாசிரியராக இருந்து வரும் மதிப்புக்குரிய மகான் அல்-ஹாஜ் பா. சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் அவர்களிடம் பைஅத்தும் கிலாபத்தும் பெற்ற உளந்தெளிந்த ஸூபீயும் ஞானாசிரியருமான மேன்மை தங்கிய அல்—ஹாஜ் செய்கு முஹம்மது ஸாலிஹ் அவர்களின் அன்னையும் இப் பெருங்குல மகள் தான் என்பது ஈங்கு குறிப்பிடத்தக்கது.

மெலிந்த தேகக்கட்டு, நீண்ட கழுத்து, செந்தாமரை யொத்தத் திருமுகம், நடுத்தர உயரம், உயர்ந்த மூக்கு, மான் விழிகள், மெல்லிய கன்னங்கள், செப்புப் போன்ற வாய், முத்துப் போன்ற பற்கள், வளைந்த புருவங்கள், விரிந்த நெஞ்சு, சிவந்த உதடுகள், அகன்று பரந்த தாடி, ஒளிமயமான நெற்றி, பொன்னிறம் ஆதியாம் இத்தகைய அங்க வடிவங்கள் கொண்ட ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம், தமது தந்தையைப் போன்றும் பாட்டனைரைப் போன்றும் குணத்தில் சிறந்தும் கண்ணியத்தில் மிகுந்தும் அன்பில் மிதந்தும் காணப்பட்டார். பரந்த நோக்கங் கொண்டு எதையும் அலசிப் பார்த்து அறிவு உணர்வு பெறுவது அவரது இயல்பாகும். அவருடைய புத்திமதிக்குச் செவி மடுத்தோர் புனிதவான்களாயினர். இயன்றளவு ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்து ஏகனின் அனுக்கிரகத்துக்கு ஆளானார்.

வான்புகழ் காயலிலே கலை மா மணி க ளி டை யே கலைக் கடல் எனும் கௌரவப் பட்டம் தாங்கி மறைந்த மகான் அல்லாமா அல்—ஹாஜ்ஜுல் ஹரமைன் ஹஸ்ரத் முஹம்மது இஸ்மாயீல் ஆலீம் மாதிஹுல் கௌது அவர்கள், நமது வொலி நாயகத்தின் மகத்துவத்தையும் கீர்த்திப் பிரதாபத்தையும் எல்லை கடந்து புகழ்ந்து கூறிய பின்னர், 'எமக்கு ஜம்ஷீது, கிஸ்ரு ஆகிய இவ்விரு சக்கரவர்த்திகளுடைய பெருஞ் செல்வம் இருக்குமாயின், மேன்மை தங்கிய வொலி நாயகத்தின் பெயர் துலங்க அதை நாம் செலவிடுவோம்' என்று அவர் தம் அரபு மொழிக் கவிச்சுவை மிளிர வர்ணித்துப் பாடி மகிழ்கின்றார்.

ஹிஜ்ரா 1323, ஸபர் மாதம் ஆறும் திகதி புதன் கிழமை இரவு இஷாவுக்குப் பின்னர், தந்தையின் வயதுக்கொப்ப, தமது 81—வது வயதில் இறைவனடி சேர்ந்த



ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் மைசூர் இராஜ்ஜியத்திலுள்ள பட்டுக்கல் நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டார். பட்டுக்கல் நகரிலே கண்ணைப்பறிக்கும் கவர்ச்சியான கல் மண்டபத்திலே இன்று அவரது பரிசுத்த உடலைப் பொதிந்து கொண்டிருக்கும் சமாதியைத் தரிசிக்கக் கூடும் பல இன மக்களைக் காண்பது, மறைந்த மகானின் மகிமைக்கோர் எடுத்துக் காட்டாகும்.

நவ்வரல்லாஹு ளரீஹஹு

(அல்லாஹ் அன்னவரின் சமாதியை ஒளி மயமாக்குவானாக!)

ஆ மீ ன் ! !

N. B

இஸ்லாமிய சமுதாய மக்கள் அறிவு வளர்ச்சி பெற பன்னெடுங் காலம் பேணுமுனை தீட்டி அரிய பொன்னேடுகள் தொகுத்த எனது அன்புத் தந்தை இயற்றிய ''மின்ஹத்துன் ஹாலிக்கிய்யா—பீ—மித்ஹத்தின் ஸாலிஹிய்யா'' எனும் மௌலிது ஷரீபை முக்கியமான தொரு உறுதுணையாகக் கொண்டு இச் சரித்திரம் உருவாக்கப்பட்டது.

ஆக்கியோன்.

## முடிவுரை

மதிப்புக்குரிய மகான்களான ஹஸ்ரத் புகாரீ தங்கள் வொலி நாயகம், ஹஸ்ரத் உமறுலி நாயகம், ஹஸ்ரத் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம், ஹஸ்ரத் செய்கு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகம் ஆகிய இந்நான்கு ஆத்ம ஞானிகளான அவ்லியாக்களின் சுய சரிதைகள் ஓரளவு இங்கு விளக்கப்பட்டிருப்பினும், அன்பர்களின் அவா இதனுல் தீர்ந்து விடாதென்பது என் முடிவு. விரிப்பின் இவ்வேடு இடம் கொள்ளாது. அள்ள அள்ள ஊறி வெள்ளம் போல் பாய்ந்து தேனமுது பொழியும். முற்று என்பது இமயத்துக்கும் குமரிமுனைக்கும் நடுவேதான்.

ஆக்கியோன்.

# மெஞ்ஞானப் புலம்பல்

* * *

இஃது

காயல் பட்டணம் மகா கனம் பொருந்திய குதுபுஸ் ஸமான், அல்–ஆரிபு பில்லாஹ், ஹஸ்ரத் உமறுலி நாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய 'மெஞ்ஞானப் புலம்பல்' எனும்

திருப்பாடல்கள்.

மேலும் அந்நாயகத்தின் திருப் பேரராகிய, உத்தமப் புத்திரர் சற்குரு அல்-ஆரிபு பில்லாஹ் அஷ்ஷைகு முஹம்மது ஸாலிஹு வொலி நாயகத்தின் மகத்தான சீடரும் பிரதான கலீபாவும், கொழும்பு புதிய சோனகத் தெருவில் ஸாலிஹ் தைக்காவில் மறைவிடம் கொண்டிருப்பவருமாகிய மெஞ்ஞான சொரூபி ஹஸ்ரத் அப்துல் கனீ ஸாஹிபுல் காதிரீ அவர்களுடைய முன்னிலையில், கனம் ஹகீம் கொ. அ. ஷாஹுல் ஹமீது அவர்கள் செய்த பொழிப்புரையை அடிப்படையாக வைத்து இதன் கருத்தாக்கம் உருவாக்கப்பட்டது.

★

# வெண்பா

* * *

அஞ்ஞானம் போக்கும் அருள்சேர் உமறுலி
சொல் மெஞ்ஞானத்தின் புலம்பல் மேதினியோர்க்
கெஞ்ஞான்றும் முத்தி வழி காட்டும் மூதறிஞர்
போதிக்கும் சித்தியதிற்றூன் றெளிவு.

மெஞ்ஞான புலம்பல்எனும் திருப்பாடல்கள்

( பொருள் விளக்க உரையுடன் )

(1) எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே
வல்லானைக் கண்டு மகிழ்ந் திருப்ப தெந்நாளோ.

(பொ—ரை) எல்லா உலகங்களும் அவைகளிலுண்டான ஜீவகோடிகளும் நட்சத்திராதிகள் முதலிய பூதியங்களும் ஒரு மிக்கத்திரண்டு கூடியிருக்கா நின்ற ஞான ரசக் குண்டாகிய நேத்திரம் என்னும் மகாமளவில், வல்லபக் கடவுளாகிய உஜூதென்னும் றப்பானிய்யாவை நான் கண் கூடாய்க் கண்டு சதா ஆநந்தமாய் வீற்றிருப்பது எந்த நாளோ!

ஃ ஃ ஃ

(2) சொல்லாற் பொருளால் தூயவறிவால்
கணக்கால்
வெல்லாத வுன்னை விரும்பி நிற்பதெந் நாளோ.

(பொ—ரை) சொல்லைத் தொடுத்து வார்த்தையாடக் கூடிய வைகளாலும், அல்லது அர்த்தங்கள் விரித்து பல வேறு வகைகளாக வர்ணிப்பதாலும், அறிவைக்கொண்டு நீள ஆலோசனை செய்வதாலும், குத்றத்தின் மகிமையை பற்றி ஒன்றொன்றாய்ப் பிரித்து எண்ணி முடிப்பதாலும் யாருக்கும் இன்னது தான் இத்தன்மை தான் என்று ஒரு முடிவு அமையாத உன் ஸிபத்தை உணர்ந்து உன்னில் மோகித்து சாதித்து, நிற்பது எந்த நாளோ!

ஃ ஃ ஃ

(3) மல்லான போரும் விளையாட்டுமா மயக்கம்
எல்லாந் தவிர்ந்து இறைஞ்சுவது மெந்நாளோ.

(பொ—ரை) இந்த மாய உலகந்தில் விகற்ப போதங்களால் ஏற்படக்கூடிய பல சல்லி சங்கடங்களும், ஸ்திரீ ஜனுதிகளால் உண்டாகக்கூடிய காம விளையாட்டுகளும், பொருளிச்சை என்னும் மதிமயக்கங்களும் மற்றப்படியாயுள்ள எல்லா பாப சங்கற்பங்களும் நீங்கி நாயனே! உன்னை நான் வணங்குவது எந்த நாளோ!

ஃ ஃ ஃ

(4 கல்லா அறிவதனைக் கற்றுணர்ந்து கற்பனைக்குள்
நில்லாத நேர்மை யினில் நிலை நிற்ப
தெந்நாளோ.

(பொ—ரை) ஒரு ஏடு. சுவடியின் கண் வரையப் படாத தான பொறிவாகிய நாட்ட மென்னும் இல் ஹாமுடைய வாசல் திறந்து பொங்கி வருகின்ற தன்னைத் தானறிதலென்னும் மகா இல்மை வழிகாட்டி யென்னும் சற்குருவின் சமுகத்தில் வைத்து தெளிந்து பார்க்க ஆசார நற்பலனை விதிகளைக் கடந்து நிற்கின்ற வஹ்தானிய்யத் தென்னும் உள்ளமை யளவில் சாதித்து நிற்கின்றது எந்த நாளோ!

ஃ ஃ ஃ

(5) பல்லுயிருமே படைந்து பரவெளியில்
அதனுடனே
சொல்லும் பொருளதனுல் ஷுஹூது செய்வ
தெந்நாளோ.

(பொ—ரை) இப்பெரிதான மா நிட உலகத்தின் கண்ணே பல பல ரூப வேறுவகைப்பட்ட ஜீவ ஜந்துக்களையும் உற்பத்தி பண்ணிய நாட்டம் என்ற பர வெளி



யில் அறிவை நிலை நிறுத்தி சந்தேகம் தெளிந்து அதனுடே ஒன்றுபடும் பொருட்டாய் சொல்லினிடத்தில் பொருளானது கலந்த பான்மையைப்போல் ஷுஹூது செய்வது எந்தநாளோ!

* * *

(6) வல்லமையால் வானம் மண் பூதர மனைத்தும்
எல்லையிலுண்டாக்கு முன்னே யெதிரேற்ப
தெந்நாளோ.

(பொ—ரை) வல்லமை யென்ற உன் ஸிபத்தாகிய குத்றத்துல் இலாஹிய்யத்தின் தத்துவத்திஞல் ஆகாயம், பூலோகம், பாதாளம், கடல், மலை முதலான சமஸ்த கோடிகளையும் அளவிட முடியாத பெரும் பான்மையாக உற்பத்தி செய்து அவைகள் தோறும் கலந்திருக்கின்ற உன்னை நான் எதிரே கண்டு கலந்து ஒன்று படுவது எந்த நாளோ!

* * *

[7] காற்றை யடைத்திருக்கும் காயமதிலுன்
ஞெளியை
பார்த்து மகிழ்ந்து பரவுவது மெந்நாளோ.

[பொ—ரை] காற்றெனும் பிராண வாய்விஞல் நிரப்பப்பட்டு ஓடி நடமாடுகின்ற வினைக்கூடாகிய இந்த ஜடவத்தில் உன் சிம்மாசனக் கொலுவாகிய நேத்திரக் கமலத்தின் நடுவே வைத்து உன் ஹக்கு தய ஒளி வட்டத்தை இளஞ் சூரிய பிரகாசம் போல் கண்டு தந்தேக மறத் தரிசித்து ஆனந்த பரவசியாய் நான் உன்னை வணங்கி நித்திய வாழ்வில் தரிபடுவது எந்த நாளோ!

* * *

[8] வாய்த்த பொருளதனை வகையறிந்து
விபரமதாய்
ஏற்ற உருவதனை எழுப்புவது மெந்நாளோ.

[பொ—ரை] என் சற்குரு நாதனால் கிடைக்கப்பெற்ற அகமியப் பொருளானதை இன்னதுதான் என்று நல்ல விபரமுடன் அறிந்து தெளிவடைந்ததின் பிறகு அப் பொருளை நிலைத்து நிற்கும்படியாக, யோக நிஷ்டையிலமர்ந்து ஷுஹூது தென்னும் உருவில் வஸ்துடன் வஸ்த்தாய் சம்பந்தப்பட்டு நேசித்துக் கொள்வது எந்த நாளோ!

* * *

[9] உந்தனொளிவில் உருண்டு திரள் மணியை
எந்தனிதயாசனத்தி லேற்பது மெந்நாளோ.

[பொ—ரை] இலாஹிய்யான ஆண்டவனே! தன்னாட்டமெனும் ஹூவிய்யத்தென்னும் நினைவில் காந்தி கொண்டு உன்னி எழுந்து ஒளிவாய்த் திரண்ட றூஹுல் குத்ஸி என்னும் திரு மணியை என்னுடைய இருதயாசனத்தில் வைத்துத் தெளிந்து ஒன்று படுத்துவது எந்த நாளோ!

* * *

[10] முந்துமக் கூரிருளில் மூன்று மொன்றதாயிருந்த
விந்தையாம் வஸ்துதனை விரும்புவது மெந்
நாளோ.

[பொ—ரை] மனமே! பூர்வீகத்தில் யாதொரு குறிப்பும் சொல்ல முடியாத கன்ஸுல் மக்பிய்யா வென்னும் கூரிய இருளில் தந்தையும் தாயும் நானும் ஆகிய மூன்றும் ஒன்றாகிய நாட்டத்திலிருந்த மகா ஆச்சரியமான வஸ்துவை றப் பென்றுணர்ந்து அதனோடும் அதிகமான உகப்பு வைத்து ஆஷிக்காகி திரிகிறது எந்த நாளோ!

* * *

[11] நாதாந்த வொளி வதனில் நந்தி சொரூபா
யெழுந்த
பாதார விந்த மதைப் பணிவது மெந்நாளோ.



[பொ—ரை] தகப்பனுடைய ஆசையில் நின்றும் குதித்து விளைந்து வந்த நாத விந்தில் உதிராக்கினியாக ரஹித்து இரகசிமாயிருந்த நந்தி என்னும் நூறுல்அஹ்மதிய்யாவை என்னுயகமான காமில் குருவின் ரூபத்தில் இருகண்ணின் நடுவே எழுந்து நிற்கக் கண்டு அந்த குருநாதனின் பாதாரவிந்தத்தை சதா காலமும் கண்டு கொண்டிருப்பது எந்த நாளோ!

[12] ஆதம் குகைய தனிலடங்கி நின்ற லச்சரத்தை
வேத முடிவதனில் விளங்கி நிற்ப தெந்நாளோ.

* * *

[பொ—ரை] ஆதமெனும் இம்மானிட கோலத்தில் குகை யென்று சொல்லக் கூடிய நேத்திரக் கமலத்தில் நின்றும் பிரகாசம் செய்கின்ற ஹூ என்ற தத்துவ அச்சரத்தை வேத சாஸ்திரங்களின் தீர்மான மந்திரமாகிய கலிமாவில் நின்றும் விளங்கியறிந்து ஜெயம் பெற்றுக் கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

* * *

[13] பஞ்ச புலன்கள் செய்யும் பல தொழிலும் ஓர்
தொழிலாய்
நெஞ்சகத்தில் நின்று நிலைப்பதுவு
மெந் நாளோ.

[பொ—ரை] தொட்டறிதல், கேட்டறிதல், சுவாசித்தறிதல்; சுவைத்தறிதல், பார்த்தறிதல் என்னும் ஐயறிவுகளான பஞ்ச புலன்கள் கூடி உலகத்தளவில் செய்து வருகின்ற பல செயல்களென்னும் மாறாட்டங்களை யெல்லாம் அறவே விட்டொழித்து றப்போடு ஒன்று படக் கூடிய ஒரு செயலில் தரிபட்டு மனதை யடக்கி ஒருமை நிலையில் நிற்பது எந்த நாளோ!

* * *

[14] வஞ்சந்தனை யறுத்துவான் பொருளைக்
கண்டிறைஞ்சி
அஞ்சிலொன்றேடே இணங்கி யாளுவது
மெந் நாளோ.

[பொ—ரை] நப்ஸு அம்மாரு என்னும் குபாட மனதில் வந்து தோன்றக்கூடிய சகல கெட்ட எண்ணங்களையும் வேரோடே யறுத்து விட்டு வான் பொருளாகிய ஒளிவட்டத்தைப் பூரணமாகத் தரிசித்து நேசித்து வணங்கி ஐந்து பூதியங்களி லொன்ருகிய ஆகாயமென்னும் நாட்டத்தில் வையாளி போட்டுக் கொண்டு லோகத்தைப் பரிபாலிக்கின்ற நாள் எந்த நாளோ!

(15) மிஞ்சும் குபிரறவே மெஞ்ஞானத்தின்
ஒளிவாங்
கஞ்ச மலர்ப் பதத்தைக் காண்பதுவு
மெந்நாளோ.

(பொ—ரை) பெரிய குப்ரிய்யத் தாகிய அவன், இவன் என்னும் இருவினையறுந்து விடும்படியாய் உள்ளமை யென்னும் தெளிந்த அறிவின் தீபத்தை என் மதியில் பொருந்தும் படியாய்க் கொழுத்தி விட்ட வள்ளலாகிய ஒளிவாகிய தெளிவாகிய சற்குரு நாதனின் செந்தாமரை மலர் போன்ற இரு பாதங்களையும் என்னுடைய இரண்டு கண்ணின் நடுவே பிரகாசமாகக் கண்டு ஷுஹூது செய்வது எந்த நாளோ!

(16) பார்க்கப் பல விதமாய் பல வர்ணமாயச்
சமைந்த
மூர்க்கமா மொழிவதனை முத்தி செய்வ
தெந்நாளோ,

(பொ—ரை) பூலோகத்தளவில் எந்தெந்த கோணங்களை எட்டிப் பார்த்த போதைக்கும் பல வேறு வகைப்பட்ட சுரூபங்களாகவும் வர்ண பேதங்களாயும் தோன்றக்



கூடிய படை கோலங்கள் தோறும் உதயஞ் செய்து கஹ்ஹாறென்னும் பராக்கிரம கொலுவாசனத்தில் வீற்றிருந்து ஆலங்களை அரசாட்சி செய்து வருகின்ற றப்பென்னும் பேரொளியை ஷெய்கவர்கள் காட்டித் தந்த குறிப்பாகிய மகாமளவில் தரிசித்து மோட்சத்தைப் பெற்றுக் கொள்கின்ற நாள் எந்த நாளோ!

* * *

(17) நாற்றிசையு மொன்ருய் நடம்புரிந்து நன்ருக
மேற்றிசையில் வந்து வீற்றிருப்ப தெந்நாளோ.

(பொ—ரை) ஆலம் கபீரென்னும் இந்த மனித ஸ்தூலத்திற்கு ஏற்பட்ட மண், தண்ணீர், காற்று, நெருப்பு என்னும் நான்கு அனுஸிர் (அதாவது பூதியங்கள்) இவைகளின் நான்கு குணபாடுகளையும் கடந்து மேல் திசையாகிய ஆகாய மென்னும் நாட்டத்தில் பூரணமாய் ஒன்றுபட்டுத் தரிபடுவது எந்த நாளோ!

* * *

(19) செங் கமலத்துள்ளுறைந்த சித்திதனில்
பத்தியதாய்
வங்கம் போலே யுருகி வணங்குவது
மெந்நாளோ.

(பொ—ரை) சிவந்த தாமரை மலருக் கொப்பாகிய இரு தாரை யென்னும் விழி நடுவே வந்து நின்று சகல கண் காட்சிகளையும் பராசியமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சித்தியாகிய சிறு கன்னியை சற்குரு நாயகத்தின் அழகிய கோலமாகத் தரிசித்து உகப்பென்னும் நெருப்பினுல் என் மனதை காரீயம் போல் உருகி விடும்படியாய்க் கொழுக விட்டு அவர்களின் பாதத்தை சதாவும் வணங்கிக் கொண்டிருக்கின்ற நாளானது எந்த நாளோ!

* * *

[19] பங்கு பங்காய்க் காயமதைப் பல பிரிவாக்கி
வைத்து
எங்கும் நிரம்பும் பொருளை யேற்றிருப்ப
தெந் நாளோ.

[பொ—ரை] பல பல உறுப்பின் பிரிவுகளாகவும், பூட்டுகளாகவும், பேதா பேதங்களாகவும் ஜடலங்களை உற்பத்தி செய்து அவ்வுடம்புகள் தோறும் ஒளிவாகிய றூஹாய் அமைந்து பூரண ஸமதாய் நிரம்பிக் கொண்டிருக்கும் தஜல்லியாகிய வல்லமைக் கடவுளை என்னில் தெளிந்து அதில் சேர்மானமாகின்ற நாளானது எந்த நாளோ!

* * *

[20] ஊனிலொளிவாய்த் தெளிவாய் உட்கலந்த
சோதியது
வானில் நிரம்பும் பொருளை வழுத்துவது
மெந் நாளோ.

[பொ—ரை] ஜடலம் ஆதிக்கமும் கலந்து வியாபித்து இருக்கின்ற ஜீவாக்கினியில் நின்றும் தெளிந்து ஜோதி மயமாகிய சரீரத்தினுள்ளே பிரகாசித்துக் கபால மென்னும் அற்ஷளவில் நிறை பூரணமாய் பொருந்தியிருக்கின்ற ஒரு வஸ்தாகிய வல்லமைப் பொருளை றப்பென்று உணர்ந்து அதைப் புகழக்கூடிய நாள் எந்த நாளோ!

* * *

(21) தேனிவின்பம் போற் கலந்து தித்திக்கும்
வஸ்துவதை
கானில் மானுங் கலை போல் கலந்திருப்ப
தெந் நாளோ.



(பொ—ரை) கலப்பற்ற தேனமிர்தத்தின் கண்ணே ருசிகரமாகிய இன்பமானது எப்படிக் கலந்திருக்கின்றதோ அப்படி அதை அறிவினுள்ளே தெளிந்து உணர்ந்த மகானிடத்து பேரின்பமாய்த் தித்திக்கும் மதிப்பிட முடியாத றப்புவைக் கானகத்தின் கண்ணே மானுங்கலையும் ஒரு மனதுபட்டு இணைப்பிரியா வண்ணம் நேசித்திருப்பது போல் நேசித்து நித்தியமாயிருக்கும் நாள் எந்த நாளோ.

* * *

[22] பஞ்சரி போல் பதறி நித்தம் பயந்துளத்தில்
மெலியாமல்
பஞ்ச வர்ணமாம் ஒளிப் பார்த்திருப்ப
தெந்நாளோ.

(பொ—ரை) திடுக்குற்று மருண்டு வெருள்கின்ற மிருகத்தைப்போல் நப்ஸானிய்யத் தென்னும் துற் குணத்தில் ஈடுபட்டு அச்சமென்னும் பலகீனத்தால் வாழ்நாளைத் தேய விடாமல் சற்குரு நாதனுடைய உபதேச உபகாரத்தினுல் திடப்பட்டு வெள்ளை, சிவப்பு, பச்சை, கறுப்பு, நீலம் ஆகிய ஐந்து வர்ணங்களும் ஒருமிக்கக் கலந்து இருக்கின்ற 'தஜல்லீ' என்னும் சுயப் பிரகாசத்தை 'ஐன்' என்னும் மகாமளவில் பார்த்து ஆனந்திக்கும் நாள் எந்த நாளோ!

* * *

[23] வஞ்சகத்தை நீக்கி வான் பொருளை யென்று
மொரு
தஞ்சமெனக் கண்டிறைஞ்சித் தழுவுவது
மெந்நாளோ.

(பொ—ரை) நப்ஸு அம்மாறத் தென்னும் வஞ்சகம், குபாடம், மேலெண்ணம், மும்மலென்ற காமியம், இச்சை, பொருளாசை முதலிய பல துற்குணங்களை

யெல்லாம் நீற வைத்து வான் பொருளாகிய மேல் பார்வையின் ஒளியை சதாகாலமும் ஒரு ஒப்பற்ற தாபரமான கருவியாகத் தரிசினை செய்து தவத்திலிருந்து வணங்கி அதில் சேர்மானமாகக் கூடிய நாள் எந்த நாளோ!

* * *

[24] ஆங்கார தத்துவத்தை யடக்கியுபாயமதாய்
தூங்காமற் றூங்கி சுகம் பெறுவ தெந்நாளோ.

[பொ—ரை] பல கரும பந்தமென்னும் வினையால் வந்து தொந்தித்த ஆங்காரக் குணமென்னும் பொல்லாநபுலை ஸ அறவொடுக்கி சற்குரு நாதன் திருத்தியமைத்த தந்திரத்தினுல் படியேறி நாட்டத்தில் ஒன்றுபடுதலென்னும் யோக நிஷ்டையால் தன்னை இல்லாமலாக்கிப் பரமானந்தச் சுக வாரியில் கிடந்து சொக்குவது எந்த நாளோ!

* * *

[25] ஓங்காரக் கம்பமதிலுள்ளிருந்து கை காட்டும்
பாங்கிதனைக் கைப் பிடித்து பலன் பெறுவ
தெந்நாளோ.

[பொ—ரை] 'காப கவ்ஸைன்' யென்னும் இரண்டு புருவ மத்தியினுள்ளே வீற்றிருந்து மிருதுவாகிய காந்தள மலர் போன்ற தனது இரண்டு கைகளையும் அசைத்துக் காட்டுகின்ற வாலை மஹ்பூபென்னும் தோழியுடங் கூடிக் கலந்து பேரின்பங்களான பலன்களைப் பெற்று ஆனந்திக்கும் நாள் எந்த நாளோ!

* * *

(26) ஆறாதாரங் கடந்து அப்புற மாந்தற் பரத்தில்
நூறுஞ் சொரூபமதை நோக்கி நிற்ப தெந்நாளோ.



[பொ—ரை] ஆதாரங்களான ஆறு மன்ஸில்களையும் கடந்து அந் நாளமென்னும் மணி வாசலுக்கு அப்புறத்திலுண்டான தற் பரமென்னும் கண் கமலத்தின் கண்ணே பேரொளிவாக நிற்கக்கூடிய தாத்துல் உஜூதை இரு கண்ணுலும் கண்டு தரிசிப்பது எந்த நாளோ!

* * *

(27) உன்ஸிபத்தை யெல்லா முற்றுணர்ந்து
கற்றறியா
வஞ்சகத்தை நீக்கி வாழ்வது மெந்நாளோ.

(பொ—ரை) வல்லமைப் பொருளாகிய ஆண்டவனே! உன்னுடைய ஸிபத்துகளான வர்ணனைகளை யெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பகுத்தறிந்து உணர்ந்து உன் இல்மென்னும் இரகசியத்தின் இன்பத்தால் நப்ஸானிய்யத்தின் துற் குணங்களான வஞ்சகத்தை நீக்கி சதா நித்திய வாழ்வில் தரிபடுகின்ற நாள் எந்த நாளோ!

* * *

(28) அஹதிய்யத்து முதலாய் ஆறுமகாமுங் கடந்து
ஜெக தலத்தில் சான் ஒளிவை ஜெயிப்பதுவு
மெந்நாளோ.

[பொ—ரை] அஹதிய்யத்து முதலாய ஆறு மகாம்களைக் கடந்து பதவியில் உயர்ந்து நின்று பூலோகத்தில் வைத்தே இன்ஸானிய்யாவில் அடங்கியிருக்கின்ற மகத்தான ஒளிவை தரிசனை செய்து ஜெயத்தை அடைகின்ற நாள் எந்த நாளோ!

* * *

(29) பார்வை கேள்வி வாசம் பற்றி நிற்குந்
தொட்டறிவும்
நேராஞ்சுவை யதனில் நிரம்பி நிற்ப
தெந்நாளோ.

(பொ—ரை) பார்த்தறிதல், கேட்டறிதல், சுவாசித்தறிதல், தொட்டறிதல், சுவைத்தறிதல் முதலிய பஞ்ச புலன்களையும் நேர்பாடாக ஓடிச் செல்லும் சுவாச வாசியில் நிரப்பிப் பூரணப்படும் படியாய்ச் சாதித்து நிற்கின்ற நாளானது எந்த நாளோ!

* * *

(30) பூதமைந்து புலன் பொறியும் போக்கிப்
பொருளதனை
வேத கருதியுடன் விளங்கி நிற்ப தெந்நாளோ,

(பொ—ரை) ஐந்து அணுஸிர்களும், ஐந்து அறிவுகளும், ஐந்து பொறிகளான குணு குணங்களும் அதனதன் அம்சங்களில் அமர்ந்து ஒடுங்கி விடும்படியாக யோகத்தில் தீரமாக சாதித்திருந்து பொருளாகிய றப்பின் ஒளிவை வேத அத்தாட்சியுடன் ஓரணுவளவும் பிசகாமல் நியாய முறையாகத் தரிசினை செய்து தெளிந்து கொள்கின்ற நந்நாளானது எந்த நாளோ!

* * *

(31) பாத முதல் சிரசளவும் பரிவாமுறுப்புகளைக்
காதலியாமற் கருவைக் காண்பதுவு
மெந்நாளோ.

(பொ—ரை) இந்த மாநிட லோகமாகிய ஸ்தூலத்தில் பாதந் தொடுத்துச் சிரசு பரியந்தம் கூடியிருக்கின்ற உறுப்புகளான அவயங்களை ஆசித்துப் பேணிக்காலம் போக்கி விடாமல் இந்த ஜடலம் உண்டானதற்குக் காரண வஸ்துவாய் நிற்கின்ற கருவாகிய ஒளிவை இன்னது தானென்று கண்டு ஆனந்திக்கும் நாளானது எந்த நாளோ!

* * *



(32) ஆதிய நாதியடங்கலு மொன்ரு யெழுந்த
சோதி வடிவைக் கண்டு தொழுவதுவு
மெந்நாளோ.

(பொ—ரை) ஆதியும் அநாதியும் இன்னும் மெஞ்ஞானவான்களால் சொல்லப்படுகின்ற பல தோரணைகளும் ஒன்றுபட்டு வெளியாகிய ஜோதியாகிய சூக்கும வடிவைத் தரிசனை செய்து அதையே சக்கற றப்பாக நிர்ணயித்து வணங்கி நிற்கும் நாள் எந்த நாளோ!

* * *

(33) ஈக்கம் பெட்டி தனிலென்று மேற்றி வைந்த
தீபம்போல்
நீக்கமற்று நின்றதனை நிசமாக்க லெந்நாளோ.

[பொ—ரை] பல இல்லித்துவாரங்கள் தெரியப்பட்ட ஈச்சவோலைப் பெட்டியில் கொளுத்திய விளக்கானது அத்துவாரக் கண்தோறும் வெளிச்சம் விழுந்து பல பல விளக்குகள் தெரிவதுபோல் ஆலத்தளவில் படையுண்டு வந்த பல ஜீவியக்கூடுகள் தோறும் கலந்திருந்து பிரகாசிக்கும் உஜூதாகிய பரம ஒளிவை உள்ளமையான றப்பென்று தெரிசிக்கின்ற நாள் எந்த நாளோ!

* * *

(34) வாக்கால் மனதால் வல்ல காயம்மதனுல்
நோக்கால் காணுச்சுடரை நோக்குவது
மெந்நாளோ.

[பொ—ரை] பெரிதாக வார்த்தையாடிக்கொண்டு திரிவதாலும், பலவேறு மாதிரியாக மனதில் எண்ணிக்கொண்டிருப்பதாலும், சரீரத்தின் அவயவங்களாலும், பலவித கீமியாவைச் செய்து பல இடங்களைப் பார்ப்பதாலும் கண்டு பிடிக்க முடியாத றப்புவின் பேரொளிவை,

இரண்டு தாரை என்ற மகாமளவில் வாலிபக்கதிர் போல் கண்டு கொள்கின்ற நாளானது எந்தநாளோ!

* * *

[35] ஏழுஸிபாத்தும் பொருளாமெழுஸிபத்து
மஉநவிய்யாம்
ஆளு மறுஸிபத்துள் அடங்குவது மெந்நாளோ.

(பொ-ரை) ஏழென்று சொல்லப்பட்ட ஸிபாத்தும், அதன் 'அர்த்தங்களான குணுகுணங்களும், ஆறுஸிபத்தான தத்துவத்தில் வந்து அடங்கி விடும்படியாக ஒருமை பூண்டு நிற்கின்ற நாளானது எந்த நாளோ!

* * *

[36] ஆறிரண்டு அங்குலமுமடங்கி யொடுங்குமுதல்
பேறுதந் துன்ஞெளிவில் பிலப்பதுவு
மெந்நாளோ.

[பொ—ரை] எட்டு அங்குலமுடைய அந்த கரணங்களெல்லாம் மனதின் லயத்தில் அடங்கிக் கொள்ளு முதலில் நாயனே! உன் தஜல்லிய்யத் தென்னும் நிராமயமான ஒளிவில் நான் பிலப்பிடியாக நின்று சாதிப்பது எந்த நாளோ!

* * *

[37] அறு நான்கு மோரெழுத்தை யகத்திற்
பரிவாக்கிப்
பெறுபேறு பெற்றவர்பால் பேணி நிற்ப
தெந்நாளோ!

[பொ—ரை] இருபத்து நான்கு அச்சரத்தினுலுண்டான கலிமாவில் ஓர் அட்சரமாக நிற்கும் ஹூவென்பதை



இருதய மென்னும் நாட்டத்தளவில் இரேசிக்கச் செய்து மஹா பெரிய பாக்கியங்களைப் பெற்றுக் கொண்ட ஒளலியாக்களின் சமுகத்தில் கலந்து உறவு செய்து நிற்கின்ற நன்ஞளானது எந்த நாளோ!

* * *

[38] உச்சிதனில் வைத்திருந்த வுட்பொருளை
மெய்ப்பாக
பச்சை முத்துப்பவள மதாய்ப்பரிவாக்கல்
எந்நாளோ.

[பொ—ரை] கபால அரையென்னும் அறுஷேறி அல்லாஹ்வின் கண்ணே உதயஞ் செய் தெழுந்து மகாமன் மஹ்மூதாவின் வில்லின் வழியாய் ஐன்பூதியக் கண்ணுடியில் ஐந்து பஞ்ச வர்ணமாகத் தோன்றுகின்ற தாத்திய்யா என்னும் பேரின்ப ஒளிவைக் கண்டு ஆனந்திக்கின்ற நாளானது எந்த நாளோ!

* * *

[39] உச்சிக்குங் கீழாயுலாவும் புருப்பட்சிதனை
நிச்சயக் கூட்டிலடைத்து நினைப்பதுவு
மெந்நாளோ!

[பொ—ரை] கபால மண்டலமாகிய அண்டத்தின் கீழேயுள்ள முண்டகம், கமலம், உந்தி என்ற பிண்டங்களில் சென்று உலாவக்கூடிய புருப்பட்சி, என்கிற சுவாசத்தை நிச்சயக்கூடாகிய நினைவில் பிடித்து அடைத்து, அதுடன் பொருந்தி நின்று வல்லபமாடக்கூடிய நாளானது எந்த நாளோ!

* * *

(40) தொண்ணூற்றாறு தத்துவமுந் தொடரறவே
யறுத்து நித்தம்
தன்னூறைக் கல்பதனில் தானுக்க
லெந்நாளோ.

(பொ—ரை) தொண்ணூற்ருறு தத்துவங்களால் உற்பன மாயிருக்கின்ற இந்த இன்ஸானிய்யா என்ற சரீரத்தின் ஊசாட்ட தேட்டங்களெல்லாம் அறவொடுங்கும்படியாக வேலை செய்து நித்தியமும் தன் வடிவாகிய பரஞ் சோதிமயத்தைக் கண்டு அதை நாட்டத்தில் தரிபடுத்தி வைக்கின்ற நாள் எந்த நாளோ!

(41) முன்நூற்றுப் பத்தாய் முழங்குமிஸ—மாய்ந்து
முந்நாருங்கடலதற்குள் மூழ்குவது
மெந்நாளோ.

(பொ—ரை) அப்ஜதுக்கணக்கில் முந்நூற்றுப்பத்து இலக்கத்தின் திரு நாமமாகிய உமறென்பதில் ஆதி எழுத்தாகிய ஐன் எழுபதும் மீம் நாற்பதும் றே இரு நூறும் பொருந்திய இஸ்மை தபோ பலனுலழித்து முன்னூறென்ற ஆதியொளிவான சமுத்திரத்தின் கண்ணே நான் முழுகி சொக்கி நிற்கின்ற நாள் எந்த நாளோ!

(42) எண்சாணுடம்பதனை யெரித்துவுனதருளை
இன்ஸான்குளிர இறைஞ்சுவது மெந்நாளோ.

(பொ—ரை) எட்டுச்சாண் திட்டமுடைய இந்த ஸ்தூல உடம்பை மறதி என்னும் அக்கினி வாயில் எரிய விட்டு பனுவென்னும் இல்லாமையாக்கிவிட்டு (இன்ஸானிய்யா) என்னும் சூக்கும ஜடலத்தின் உன் அருளாகிய நாட்டத்தை மூட்டி அதைக் குளிரச் செய்து நித்திய பாக்கிய வாழ்வைப் பெற்றுக் கொள்ளும் நாளானது எந்த நாளோ!

(43) தொண்ணூற்றி ரண்டாய்த் துலங்கு
மிஸ்மதுதான்
தன்னுள் மூன்றைம்பதனில் தரித்திருப்ப
தெந்நாளோ.



[பொ—ரை] தொண்ணூற்றிரண்டு இலக்கமுடைய முஹம்மது என்னும் இஸ்மானது ஐம்பத்து மூன்று இலக்கமுடைய அஹ்மது என்ற இஸ்மை தன்னுள்ளடக்கி தன்னை இல்லாமை யாக்கி, ஜம் இல் ஜம் ஆகி கமாலிய்யத்தில் எத்திக் கொள்கின்ற நாள் எந்த நாளோ!

[44] ஆறுபத்தாரட்சரத்தில் அடங்கு சூட்சம்மது
தான்
நூறிரண்டு பதினலில் நுண்மையாத
லெந்நாளோ.

[பொ—ரை] அறுபத்தாறு இலக்கமுடைய அல்லாஹு வென்னும் இஸ்மில் அடங்கியிருக்கும் ஹூ வென்னும் சூட்சமதனில் 214 இலக்கமுடைய றூஹு நுண்மையாதல் எந்த நாளோ!

[45] வேறுகொண்ட ஐவருந்தான் விளங்குந்
தூபதீபமது
வேறுப்பட்டுப்போகு முன்னே வெளிகாண்ப
தெந்நாளோ.

[பொ—ரை] வேற்றுமை விகார குணங்களைத் தருகின்ற மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம், என்னும் ஐந்து அணுஸிறுகளான பஞ்ச பூதியங்களும், அதனதன் கருவிகளென்னும் வாதம், பித்தம், சிலேற்பனமென்னும் இராஜ நாடிகளின் வாசனை வெளிச்சங்களை நாற்றுக் கொண்டு ஜடலமென்னும் மண் கோட்டையை இருளடையப்போட்டு விட்டு வேற்று ரூபிகளாய்ப் பயணம் புறப்படுவதற்கு முன்னதாக நான் பரவெளியான நூறுல் ஐன் ஒளிவைத் தெரிசனை செய்து வல்லமை பெற்றுக் கொள்ளும் நாளானது எந்த நாளோ!

[46] நாலும்ரண்டு நாற்பதுவும் நடுவில்
நாலிரண்டுமதில்
பாலும் நெய்யும் போலே பரிந்து நிற்ப
தெந்நாளோ.

(பொ—ரை) 92 இலக்கமுடைய முஹம்மது என்னும் உடலில் கலப்பற்றதான பாலினிடத்தில் நெய்யானது உட்கலந்த வண்ணமாக மேவிக்கலந்து கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

(47) நாலும் நாற்பதுதானும் நாலும்ரண்டு
ஒன்றுன
நாலும்ரண்டு நாலுமொன்றில் நன்ருக்கு
மெந்நர்ளோ.

(பொ—ரை) அப்ஜதுக் கணக்கில் ஐம்பத்தோ ரட்சரத்தின் வடிவாக நிற்கக்கூடிய நான் என்னும் அநாநியத்தை இல்லாமையாக்கி, பதினொன்ருகிய ஹுவிய்யத் தென்னும் அவன் என்பதில் சேர்மான மாக்கி விட்டு நன்ருகிய நல்லவனுகக்கூடிய நாள் எந்த நாளோ!

(48) அஞ்சானகாய மழிந்துபனுவாகி
துஞ்சாத சோதியடுள் துலங்குவது
மெந்நாளோ.

(பொ—ரை) பஞ்ச பூதியங்களாற் சமைந்த ஜடலத்தின் பொறி புலாதிகளென்னும் உபாதிகளெல்லாம் தத்தம் நிலைகளில் ஒடுங்கி பனுவாகின பின்னல் எக்காலமும் அழியாத றப்பானிய்யா வென்னும் பேரொளிவைக் கண்டு அத்துடன் ஒன்றுபட்டு ஆலமெல்லாம் பிரகாசிக்கும் நாளெந்த நாளோ!

(49) வாலசொரூபமதாய் வண்மையாய் வந்துதித்த
கோலமென் னுட்காட்டிக் குறிப்பாக்கு
மெந்நாளோ.

[பொரை] வாலிப ரூபத்தினையுடைய சௌந்தரிய கர மாக மகாமளவில் உதிப்பாய் வந்த வாலை மஹ்பூபுடைய வடிவானது எனக்குள்ளே வெளியாகி நிற்க அதை நான்



கண்காட்சியாகக் கண்டு குறிக்கும், அதாவது றூஹுல் குதுஸி என்று திட்டமான உறுதி கொள்ளும் நாள் எந்த நாளோ!

[50] நீலநிற வண்டு வந்து நீல மலரைச்சார்ந்த
சீலம்போ லென்னில் வந்து தேனருந்து
மெந்நாளோ.

[பொ—ரை] நீலரேங்குடைய கரும் வண்டுகளானது ஆடிவந்து நீலோற்பன தாமரையின் நடுவே துளிக்கின்ற மகரந்தத் தேனை யருந்தும் பான்மையாக, வாசி என்ற வண்டானது மகாமன் மஹ்மூதாவின் ஒளிவின் தேனை யருந்தி இன்பத்தில் சொக்கிக்கிடக்கும் நாளானது எந்த நாளோ.

[51] காலுதலை கைபிடித்து கட்டணையாம்
நடுவணைச்செங்
கோலமென் னுட்காட்டி குணமாக்கு
மெந்நாளோ.

(பொ—ரை) சுவாசமென்னும் வாசி பந்தத்தையும் ஒளிவின் பிரகாசத்தையும் சிர கெம்பீரமான தத்துவத்தையும் உறுதியாய்ப் பிடித்து மகாமன் மஹ்மூதாவின் நடுவணையாகிய ஜெகசோதி மண்டபத்தின் கண்ணே! செக்கச் சிவந்த கோலவடிவாகிய மனோன்மணி ரூபமானது என் உள்ளே காட்டி யருளைத்தந்து அதன் குணத்தில் என்னையாக்கிக் கொள்கின்ற நாளானது எந்தநாளோ!

(52) பாலுந் தேனும்போல் பரிந்திரண்டு
மொன்ருகி
மேலைத்தெரு வீதிதனில் வீற்றிருப்ப
தெந்நாளோ.

(பொ-ரை) இரண்டுபட்டு நிற்கின்ற காலிக்கு மக்லூக்கு என்பதில் கல்கென்னும் அடிமைத்தன மானது பனுவாகி றப்பில் சம்பந்தமாய்க் கலந்து பாலில் விட்டு வி ர வி ய தேனானது ருசிக்கும் இன்பத்தினைப்போல் மேலைத் தெருவாகிய காபகௌ ஸைனியில் நான் எக்காலும் பரமாநந்தங் கொண்டிருக்கும் நாள் எந்த நாளோ!

[53] நூலுபல கற்றுணர்ந் தந்நூலில் மயங்காமல்
நாலுமென் னுள்ளாக்கி நடத்துவது
மெந்நாளோ.

[பொ—ரை] இவ்வுலகத்தில் பல கோடிக் கணக்காய்ப் பெருகிப் போயிருக்கின்ற சாஸ்திரங்களைக் கற்று அதில் வாயாடிக்கொண்டு இறுமாந்துபோய் விடாமல் நான்கு பூதியங்களும் என்னுள்ளே ரஹித்து பலத்துப் போகும் படியாய் எக்காலமும் அழியாமல் நிற்பது எந்த நாளோ!

[54] ஏனும் பொழுத தனிலிறைஞ்சி யுனைக்கண்டு நித்தம்
பாலும் நீருங்கலந்த பரிசாக்கு மெந்நாளோ.

[பொ—ரை] சரீரத்தித்தில் தைரியமும் பலமும் இருக்கும் பொழுதே றப்பாகிய உன்னைக்கண்டு தரிசனை புரிந்து ஷுஹூது செய்து சுத்தமான பாலினிடத்தில் நீர் கலந்தவுடன் அந்நீரும் பாலைப்போல் ஆகிவிடுவதுபோலே அடிமைத் தனமற்று ஒருமையில் பூண்டு வல்லமை யடைந்து போகக்கூடிய நாளானது எந்த நாளோ!

[55] மேலையணை தத்தி யப்பால் வெட்டவெறும் பாழ்வெளியில்
சூலமா முச்சுடருஞ் சூழ்ந்து நிற்ப
தெந்நாளோ!

[பொ—ரை] மகாமன்மஹ்மூதாவில் நின்று ஒளிவிடக் கூடிய வஸ்தைக் குறிப்பாக்கிய பிறகு, வெட்ட வெளியாகிய நாட்டத்தில் முச்சுடருங் கூடி ஒன்றுபட்டு நிற்கக் கூடிய நாளானது எந்த நாளோ!

[56] மாலாகி யென்னுளத்தில் மயங்கி புத்தியற்று நித்தம்
மேலாம் பரவெளியை வேண்டுவது
மெந்நாளோ.



(பொ-ரை) உலகத்திலுள்ள பல செல்வ போகங்களின் மீது பற்று வைத்து மயங்கித் திரிகின்ற மதியானது அல்லாஹ்வின் றஹ்மத்தான சிர்றைத் தெளிந்ததின் பின்னல் மிகவும் மேலாம்பரமான நாட்டத்தில் ஒன்றுபட்டு மற்த்தபாவில் உயர்ந்து விடும் நாளானது எந்தநாளோ!

(57) சூலமாங் கருவதுதான் சுகமாமுடலாகிக்
காலு பன்னிரண்டில் நின்று காண்பதுவு
மெந்நாளோ.

(பொ-ரை) பன்னிரண்டு கால் என்ற பன்னிரண்டு சரங்களையுடைய கலையில் சூக்கும ஜடலமாகிய நாட்டமென்ற கருவானது பூரணித்து நின்று தன்னைக்கண்டு ஆநந்தங் கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

[58] நாலாம் வழியதனில் நலம் பெறு மஃரிபத்தில்
நாலுங் கழிந்தோடாமல் நல்குவது
மெந்நாளோ.

[பொ ரை] ஷரீஅத்து முதலிய மூன்றையுங் கடந்து நாலாவது வழியாகிய மஃரிபாவில் தெளிவடைந்து ஆரிபான பிறகு அந்த ஜடலத்தை நடத்துகின்ற நான்கு கருவிகளாகிய அனாசிறுகள் நிலைமை கெட்டு ஜடலத்தை விட்டும் விலகி விடாமல் எக்காலும் வாழக்கூடிய நித்திய சாதனத்தைப் பெறும்படியான நாள் எந்த நாளோ!

(59) தோலுந்துடுத்தியுமாய்த் தொல்லுலகி லாகாமல்
ஆலமறவாஹதனி லாக்குவது மெந்நாளோ.

[பொ—ரை[ வீண்காமிய விளையாட்டுகளால் ஜடலமிளைத்து தோலுந் துடுத்தியுமாய் பலஹீனப்பட்டு உலகத்தில் நற்கதியை இழந்து போகாமல் அற்வாஹுடைய ஆலத்தில் இந்த சூக்கும தேகத்தில் பெர்ருந்தி ஆநந்தியாக இருக்கின்ற நாளானது எந்த நாளோ.

(60) சாலவுடலது வாய்த் தலை தாடியும் நரைத்து
மாலாகும் பெண்ணசை மயக்கறுப்ப
தெந்நாளோ.

(பொ—ரை) பெண்ணசை என்ற பேயால் பீடிக்கப்பட்டு உடல் தளர்ந்து கெட்டு தலையுந் தாடியும் நரைத்துப் பழுத்து தள்ளாடக்கூடிய காம மயக்கத்தை அடியோடு அறுத்து வீரத்துடன் இருக்கின்ற நாளானது எந்த நாளோ!

(61) பொன்னசை மண்ணசை பெண்ணசை
மேவாமல்
தன்னசையா லுனைந்து சார்ந்திருப்ப
தெந்நாளோ.

(பொ—ரை) பொன்—மண்—பெண் என்ற மூவாசைப் பந்தங்களும் இருதயத்தில் வந்து கூடி அதை மயக்கத்தில் இழுத்து விடாமல் நாயனே! நான் உன் தன்னசை என்னும் இஷ்க்கில் கவலை கொண்டவனாக நின்று உன்னை யடுத்திருக்கும் நாளானது எந்த நாளோ!

(62) உன்னசை யென்னசை யொன்றோடொன்று
பிணங்காமல்
உன்னசையையுணர்த்தி யொடுங்குவது
மெந்நாளோ.

(பொ—ரை) நாயனே! உன் ஆசை ஒரு பக்கம், என் ஆசை என்னும் உலக மயக்கம் ஒரு பக்கம், என்னில் வந்து தொந்தித்து ஒரு பயனுமில்லாமல் வீண்காலம் கடந்து விடாமல் உன்னுடைய ஆசை யென்னும் பர வெளியாகிய நாட்டத்தில் குணங் கொள்கின்ற இஷ்க்கை கைவல்யமாகக் கொண்டு சேர்மானமாகிப் போகக்கூடிய நாளானது எந்த நாளோ.



(63) கன்னசுகலைப்பதனல் கலங்கியுளமெலியாமல்
பெண்ணசையை யகற்றிப் பேணுவது
மெந்நாளோ.

(பொ—ரை) கன்னஸ் என்று சொல்லப்பட்ட இபுலீஸானவன் கலவியில் அகப்பட்டு உலகத்தில் பல ஆசாபாசங்களென்னும் காமிய கிருத்தியங்களினல் இருதயமானது பெருத்த உளைச்சலெடுத்து க்ஷீணதிசையடைந்து போகாமல் இவ்வளவுக்குங் காரணமாகிய பெண்ணசையை விட்டும் விலகி தன்னைப் பேணுத லென்னும் வல்லமையில் குணங்கொண்டு நிற்கின்ற நாளானது எந்த நாளோ!

(64) வாணளொடுங்கு முதல் வல்லபதீதாறுதனைக்
காணதேபோகாமல் காட்சிதரு மெந்நாளோ.

(பொ—ரை) வாணள் என்ற ஆயுளின் காலந்தேய்ந்து அற்றுப் போகுவதற்கு முன்னதாக உன்னுடைய தீதாறு என்ற திரு ஒளியின் தரிசனையைக்கண்டு கொள்ளாது போகி விடாமல் உன் திருக்காட்சி தந்து விடுகின்ற நாளானது எந்த நாளோ!

[65] ஊணல் தடித்து நித்தம் உன்னடியைப்
பாராமல்
வீணயுழலாமல் வெளிகாண்ப தெந்நாளோ!

[பொ—ரை] நல்ல ருசிகர போசனங்களை உண்டு திரேகமானது பொலிவாகித் திரிந்து வீண் காலங்கழித்துத் திரியாமல் நாயனே! உன் திருவருளான தவ்ஹீதில் ஆசை கொண்டு நின்று தன்னைக்காண்கும் நாளானது எந்த நாளோ!

[66] காணுஞ் சொரூபமெல்லாங் கத்தன்
மஜுஹறென்று
பேணி ஷுஹூது செய்து பெலப்படும்
நாளெந்நளோ.

(பொ—ரை) நேத்திரங்களால் காணப்பட்டுத்தெரிகின்ற படை கோலங்களெல்லாம் கர்த்தனுகிய அல்லாஹு வின் மலுஹராகிய நூறின் வடிவென்று கண்டு பேணுத லுடன் மனதில் உறுதிகொண்டு ஷுஹூதென்னும் தவத்தில் இருந்து அதில் சம்பந்தப்பட்டு வல்லமை யடைந்து கொள்வது எந்தநாளோ!

[67] தானுயஹதிய்யத்தில் தன்வஹ்ததத்தில்
லமைந்த
மானுர் முஹம்மதொளிமடுவுவது
மெந்நாளோ!

(பொ—ரை) அஹதிய்யத்தென்னும் தான்தானுயிருந்த உன்னளவில் உதிப்பாயெளுந்த வஹ் த த் தெ ன் னு ம் ஆசையால் அலேமோதப்பட்டெழுந்த னூறுல் முஹம்ம திய்யாவென்னும் திருமணிப் பிரகாசத்தை நான் தீர்ச் சையாய்க் கண்டு அந்த ஒளிவுடன் ஒளிவாய்க் கலந்து கொள்ளும் நாளானது எந்த நாளோ!

[68] அம்மாறத் தெனும் நபுஸை
யடக்கியதிஞங்காரத்
துன்மார்க்கத்தைத் துரத்தி துலங்கு
நாளெந்நாளோ.

[பொ—ரை] அம்மாறத்தென்கின்ற குபாடம், வஞ்சனை பொறுமை, பேராசை, மேலெண்ணம், காமியம் முத லிய துற்குணங்களையுடைய பொல்லா நபுஸை அடக்கி ஒடுக்கி அதன் ஆங்காரக் குணத்தை அடியோடு துரத்தி விட்டு லோகமெல்லாம் ஒரேமயமாய் இலங்கக்கூடிய நாள் எந்த நாளோ!

(66) மிக்க லவ்வாமாவும் மிகைக்கு முல்ஹிமா
நபுஸும்
ஒக்கமுத்ம இன்னுவில் ஒடுங்கும் நாளெந்
நாளோ.



[பொ—ரை] மிகுதியான பற்றில் விஷயமாகின்ற லவ் வாமா என்பதையும் இன்னும் மிகைப்படுதலேயுடைய நபுஸு முல்ஹிமாவையும் இல்லாமையாக்கி சற்குணத் தில் உள்ள நபுஸு முத்மஇன்னுவில் குணம் பூண்டு நிற் கின்றதில் நிலேத்து நிற்கின்ற நாள் எந்த நாளோ!

[70] செக்குப் போலலேந்து திருக்காயெழு மூச்சை
சக்கின்றிகண்டு அதில் சாருநாளெந்நாளோ!

[பொ—ரை] செக்கானது சுழன்று வருவதுபோல் ஜட லத்தின் கண்ணே, உந்திக்கமலத்தில் நின்றும் எழுந்து வரக்கூடிய வாசிக்கலேயை இன்னதென்று கண்டு அதில் சார்ந்து நின்று வையாளி போடுகின்ற நாளாகிறது எந்தநாளோ!

[71] வாஜிபுல் உஜூதும் வகை மும்கின் மும்தனி
உம்
வாஜிபாம் ஸிபத்திலே வணங்கும்
நாளெந்நாளோ.

[பொ—ரை] மண், தண்ணீர் முதலிய பூதிய தத்துவங் களே உணர்ந்து அவ்வொன்றன் குணங்களேயும் வாஜிபு ஸிபத்தாகிய நாட்டத்தில் நிரப்பமாகும்படி தவஞ் செய்து வெற்றியடையக்கூடிய நாளானது எந்த நாளோ!

[72] ஆஷிக்குல் உஜூதாகி ஆரிபுல் உஜூததன்பின்
வாஜிபுல் உஜூதாக வடுந்து நாளெந்நாளோ,

[பொ—ரை] உஜூதாகிய பேரொளிவைக் கண்டு அதன் பேரில் ஆஷிக்காகி அப்பால் அந்த உஜூதில் சம்பந்தப் பட்ட அடக்கமுடைய ஆரிபாகிய பின்னுல் வாஜிபுல் உஜூதின் சொந்தமான குத்றத்தின் வல்லமையைப் பெறுகின்ற நாள் எந்த நாளோ!

(73) பித்தறுத்து ஈமான் பிசகாமல் சிர்றதிலே
முத்திபெற்ற முத்தலக்கதில்
முங்குநாளெந்நாளோ.

(பொ—ரை) பித்தில் நின்றும் உண்டாகின்ற ஆங்கார குணம், மருட்சி. வெருட்சி, முதலிய துர்விநியோகங் களை யெல்லாம் அறவொதுக்கி விட்டு உறுதியாக பல பிடியானது ஒரு சிறிதும் பிசகாமல் வைராக்யத்துடன் ஒறுத்து நின்று சிர்றிய்யாகிய ஹுவிய்யத்தில் வையாளி போட்டு நின்று அந்நாட்டத்தில் முங்கி அதாவது சேர் மானிக்கின்ற நாள் எந்த நாளோ!

(74) வித்துதிர்ந்து முளையெழுந்து விரிந்த கொப்பு
மூன்றுகி
சித்துதித்த தெளிவதனில் சேருநாளெந்
நாளோ.

(பொ—ரை) தானுயிருந்த நாட்டத்தில் நின்று எழுந்த ஆசை என்ற வித்தில் எழுந்த முளையானது நாதவிந்தில் விளைந்த ஜடலத்தை யெடுத்து புச்சுடரில் முடிந்து வந்த தின்பின் அது வந்த விதம் எப்படி? என்றறிந்து நல்லு ணர்ச்சி செய்து தெளிவடைந்து வல்லபமுடைய அந்த சித்தியில் சேர்ந்து போகக்கூடிய நாளானது எந்த நாளோ!

(75) தத்துவத்தைத் தானறுத்து தலமேழையுங்
கடந்து
குற்ற மற்ற தாத்ததனில் கூடு நாளெந்
நாளோ!

(பொ—ரை) தொண்ணூற்றாறு தத்துவங்களால் உண் டான பூதிய குணங்களான பொறி புலாதிகளின் தட மாட்டமான குணங்களை ஒதுக்கி அடக்கிவிட்டு ஏழு மகாம்களையுங் கடந்து மேன்பதவி கொண்டு நின்று கலப்பற்ற பரிசுத்த பரஞ்சோதியாகிய தாத்தினில் ஒன்று பட்டுக் கொள்கின்ற நாளானது எந்த நாளோ!



(76) வித்திலுண்டாமர முதலோ மேவும்
வித்துத்தான் முதலோ
புத்திகொண்டு தெளிந்திதனைப் புகலும்
நாளெந்நாளோ.

(பொரை) ஒரு விதையில் நின்றும் உற்பத்தியாகிய மர மானது முந்தியா? அல்லது அந்த வித்தானது முந்தியா? என்று விஜாரிக்கும் கேள்விகளில் புத்தியின் தெளிவிஞல் ஆராய்ந்து பார்த்து இவ்விரண்டுக்கு முந்தினது இன்னது என்று ஸூபிய்யாக்களின் இலட்சியத்தைச் சொல்கின்ற நாளானது எந்த நாளோ!

(77) பூவுங்காயுங்கனியும் பொதிந்த வித்து
தன்னில் நின்று
மேவுஞ்சித்து விளையாட்டை விளங்கு
நாளெந்நாளோ.

[பொ-ரை] அவ்விதமான வித்தில் நின்றும் பூக்களா யும், காய்கனிகளாயும் பொதியப்பட்டதாய் வெளியான சித்து விளையாட்டென்னும் சத்து அவனென்றறிகின்ற நாளானது எந்தநாளோ!

[78] பூவிலுறைவாசமது போல என்னுள்ளமதில்
ஹுவைக்குடியிருத்திக் கூடும்
நாளெந்நாளோ.

[பொ—ரை] புஷ்பத்தின் இடத்தில் வாசனையானது கலந்திருக்கின்ற பான்மையாக, என் இருதயமென்னும் நினைவில் கலந்திருந்து ஜடலத்தை நடத்தாட்டுகின்ற ஹுவிய்யத்தை நிலையாக்கி அதில் கூடிக்கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

[79] வேதந் தனக்கடங்காமெய்ப் பொருளை
யென்னுளத்தில்
நீதமுடனே நிறுத்தி நிலைப்படுநாளெந்
நாளோ.

(பொ—ரை) வேத சாஸ்திரங்களான சுருதிகளுக்குள் ஒரு முடிவு பெறாத உள்ளமைப் பொருளான ஸிர்றுல் லாவை நியாயமான வழியாகிய மஃரிபாவைக்கொண்டு உணர்ந்து அதில் நிலைத்துக் கொள்ளும் விதமானது எந்த நாளோ!

(80) ஆரணத்தையோதி யலையாமலே யுனது
பூரணத்தைக்கண்டு பொருந்து நாளெந்
நாளோ.

(பொ—ரை) ஆரணமென்று சொல்லப்பட்ட வேதசாஸ்திரங்களைக்கற்று அகம் பெருமையால் அலைந்து திரியாமல் நாயனே! நான் உன் பூரணமானஸிர்றின் பிரகாசத்தைக் கண்டு கலிதீரக்கூடிய நாளானது எந்த நாளோ!

(81) மந்திரமாய் வேதமுமாய் வாய்மையுமாய்
ஞானமுமாய்த்
தந்திரமாய் நின்றதனைத் தழுவுநாளெந்
நாளோ.

(பொ—ரை) மந்திர உற்சாடனங்களாகவும், வேத சாஸ்திர ஆசாரங்களாகவும், வாக்ய உபாக்கியானங்களாகவும், மெஞ்ஞான உதயங்களாகவும், பல தந்திர சாமர்த்திய சாதுரிய யூகங்களாகவும், நிறம்பி உலகமாய் நின்ற பரமதத்துவத்தைக் கண்டு தெளிந்து அதில் சம்பந்தமாகிப் போகக்கூடிய நாளானது எந்த நாளோ!

(82) புந்திதனில் நின்றிலங்கிப் பூவுலகும்
வானுலகும்
விந்தையாடுமதை மேவு நாளெந்நாளோ.

(பொ—ரை) அறிவில் வந்து ஒளிவாய்க் கலந்து நின்று பலஜீவராசிகளான பூலோகத்திலும், வானலோகத்திலும் திருவிளையாட்டு செய்கின்ற வஸ்துவாகிய றப்பில் சேர்மானமாகி விடக்கூடிய நாளானது எந்த நாளோ!



(83) ஷரீஅத்தும் ஹக்கீகத்தும் தன் சரீரமுயிரும்
போல்
தரீக்கத்தாம் பஹ்றுதனைத் தாண்டு
நாளெந்நாளோ!

(பொ—ரை) ஷரீஅத்தானது சரீரமாகவும், ஹக்கீகத்தானது உயிராகவும், அறியக்கூடிய தரீக்கத்தான நேர்வழியைக்கொண்டு காமிலான ஷெய்கு அறிவித்துத்தந்த இல்மின் கடலில் நீந்தி அக்கரை காணக்கூடிய நாள் எந்த நாளோ!

(84) எந்தப்பொழுது மிதமாக என்னுளத்தில்
விந்தையாம் சிர்றதனை விளங்கு நாளெந்
நாளோ.

(பொ-ரை) எந்த சமையமான தருணத்திலும் உள்ள படியே அதன் உகப்பு உண்டாகி நின்று என் கல்பில் பாரதூரமான குத்றத்தையுடைய சிர்றுல்லாஹ்வை விளங்கித் தெளியக்கூடிய நாளானது எந்த நாளோ!

(85) பன்னிரண்டெழுத்தில் பதிவாகு
மூன்றெழுத்தை
உன்னியுளத்தி லொடுக்கு நாளெந்நாளோ.

(பொ—ரை) பன்னிரண்டு அட்சரமாகிய லா இலா ஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவில் உள்ள மூன்றெழுத்தாகிய இலாஹ்வை மனதில் உன்னுதல் செய்து நாட்டத்தில் ஒடுக்கி விடக்கூடிய நாளானது எந்த நாளோ!

[86] முங்கவறியாமூடன் முத்தெடுக்கப் போய்க்
கடலில்
தங்கிஹலாக்காகு முன்னே தற்காத்தலெந்
நாளோ.

[பொ—ரை] சிலாபக்கடலின் இடத்தில் குளியோட்டத் தெரியாத மௌட்டீகன் ஒருவன் ஆழிய கங்கையில் குளி

யோடிச் சென்று முத்துகளை யடைவதற்குள்ளாக தன் மூச்சுப் போகவிட்டு மரணமடைந்த தன்மைபோல் துன்யாவில் வந்து நேரத்தோடும் தான் வந்த சொந்த வேலையாகிய தன்னைத்தான் அறிவதைவிட்டு வீண்வேலையில் காலங்கழித்து மடிந்து போவதற்குள்ளாக என்னை தற்காக்கும் நாள் எந்த நாளோ!

(87) அஹததாயிருந்து அஹ்மதாய் வந்தவுனை
அகத்தில்பரிவா யடக்கு நாளெந்நாளோ.

(பொ ரை) அஹதிய்யத்தென்னும் ஒரு கோலங் குறிப் பற்றதா யிருந்து அப்பால் ஆசை, ஓசையாகி, ஒளிவாகி அஹ்மதில் ரூபங் கொண்ட றப்பாகிய உன்னை அகமாகிய நினைவில் பொதிய வைத்து உன்னில் நான் அடங்கிப் போகக்கூடிய நாளானது எந்த நாளோ!

(88) ஏகாந்தப் பொருளதனை யெல்லாப்
பொழுதுங்கண்டு
அகங்குளிர என்னுள் அடக்குவது
மெந்நாளோ.

(பொ-ரை) ஆலத்திலுண்டான சகல வஸ்துகள்தோறும் ஏகமாய்ப் பொருந்தி நிற்கின்ற அகமியப் பொருளதனை இன்னதென்று கண்டு கொண்டு எல்லாச் சமயங்களிலும் அதனை நினைவில் வைத்து ஜெபஞ் செய்து மனமகிழ்ந்து பரமானந்தங் கொள்ளும்படியாக இருதயத்தில் ஒன்றுபடச் செய்கின்ற நாளானது எந்த நாளோ!

[89] மெய்யறுத்து மெய்தனை வெளியாக்கி
யெந்தனகத்
தையமெல்லாம் போக்கியெனை யாளாக்க
லெந்நாளோ.

[பொ-ரை] ஜடலத்தின் உல்லாச சிங்காரங்களை யெல்லாம் வென்று உணர்ச்சி பூட்டி மெய்யுடலாகிய சூக்கும



தேகத்தின் சூட்சியமான உள்ளமையை இதுதான் என்று சுட்டிக்காட்டி சற்குருநாயகம் என்ற வழிகாட்டியான வர்கள் என்மனதில் உண்டாயிருந்த சந்தேகங்கள் அனைத்தையும் நற்போதனையால் போக்கினதின் பின்னுல் ஆளாக்கி விடுகின்ற நாளானது எந்த நாளோ!

(90) மானுர்மயக்கவலை வந்தணுகாமற்காத்து
தானுகநின்று தவம்பெறும் நாளெந்நாளோ.

(பொ—ரை) மாயாவினோதமென்னும் இந்த உலகத்தி லுண்டான ஸ்திரீ ஜனுதிகளால் வீசி இழுக்கப்பட்ட மாயவலைகளான பலதொல்லைகளிலும் மனது அகப்பட்டு மயங்க விடாமல் ரட்சித்து நாயனே! உன் சிர்றுல்லாஹ்வைத் தெளிந்து படியேறி யோக நிஷ்டையிலமர்ந்து தவத்தில் சாதித்திருந்து உன்னோடும் விரவிக் கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

(91) அஞ்செழுத்தலிபுலாம் ஹாமீம் தாலானதிலே
பிஞ்செழுத்தைக் கல்பு கொண்டு பிலக்கும்
நாள் எந்த நாளோ.

[பொ—ரை] அலிபுலாம் ஹாமீம் தால் என்ற ஐந்து அச்சரங்களில் பிஞ்செழுத்தாகிய அலிபை மனதிற் கொண்டு எந்நாளும் அழியாத நித்தியமாயிருக்கின்ற நாளானது எந்த நாளோ!

[92] அஞ்செழுத்து பஞ்சபூதம் அஞ்செழுத்து
அல்லாஹு
நஞ்செழுத்தைக் கமலமதில் நாட்டு
நாளெந்நாளோ.

[பொ—ரை] ஐந்து அச்சரமென்றது ஐந்து அனுஸிறுகளாகவும் இன்னும் அந்த ஐந்தும் அல்லாஹு என்னும் பஞ்சாட்சரமாகவும் இருக்கும். இதில் இருக்கப்பட்ட விஷமுடைய மகா அட்சரமாகிய ஹுவை மனம் என்னும் கமலத்தில் வைத்து நாட்டி விடக்கூடிய நாளானது எந்த நாளோ!

(93) ஹாமீம் ஐன்ஸீன்காபும் காபுஹாயா
ஐன்ஸாதும்
காமில் முகம்மில்குரு காட்டும்
நாளெந்நாளோ.

(பொ—ரை) ஹாமீம், ஐன்ஸீன், காபு, என்ற திவ்ய அட்சரங்களின் ஸிர்றையும் காபு, ஹா யா, ஐன், ஸாது என்கிற அட்சரங்களின் ஸிர்றுகளையும் பரிசுத்த காமிலான குருவாகிய ஷெய்கவர்கள் சமுகத்தில் காட்டித் தரப்படுகின்ற நாளானது எந்த நாளோ!

(94) வாசிபன்னிரண்டடிதிலே வருகிறதும்
போகிறதும்
ஊசிமுனைச்சுழியதிலே உதிக்கும்
நாளெந்நாளோ.

(பொ—ரை) வடகலைவாசியாகிய பன்னிரண்டு சரத்தில் ஏற்றம் இறக்கமாகிய எல்லா உபாதிகளும் ஊசியின் நுனிபோன்ற சுழிமுனையின் கண்ணே உதித்து நிற்கின்ற நாளானது எந்த நாளோ!

(95) ராசிமயமாய் முன்னுளில் நானென்ற
அட்சரந்தான்
தேசிபோல் திரும்பி வந்து தெளியும் நாள்
எந்நாளோ.

பொ—ரை) ஒரு குறிப்பும் இல்லாத காலத்தில் மகா இரகசியமாக நான் என்று உதித்து வந்த எழுத்தானது, பின்னுல் ரூபமெடுத்த இப்போதும் அதைத் தெளிந்து அதில் பொருந்தக்கூடிய நாளானது எந்த நாளோ!

(96) கூசாமல் கலிமா குதாவோதும் அம்மொழியை
பேசாமற் பேசிபிதற்று நாளெந்நாளோ.



[பொ—ரை] ஹக்கு ஸுப்ஹானஹு வதஆலா தன் சொந்த திக்ருக ஓதிக்கொண்டிருப்பதான திக்றுஸிர்றிய்யாகிய ஹூவை வாயால் மொழியாமல் தொனிக்கக்கூடிய வலம் புரியில் வைத்து தொனிக்கச் செய்து அந்த லாகிரியான மஸ்திஞல் வாயால் அருட்கவிகள் பொழியக்கூடிய நாளானது எந்த நாளோ!

[97] நேசமாய் லாஅன இல்லாஹூவெனு
மொழியைப்
பேசாமலே பிரட்டிப்பிலக்கும்
நாளெந்நாளோ.

[பொ—ரை] அவ்விதம் இஷ்க்கை மீறவைத்து தன்னை இல்லாமையாக்கலென்னும் லாஅன என்றதை மாற்றி ஹூ என்னும் அவன் என்னும் நாட்டத்தில் பொருத்தி ஒன்றுபட்டுக்கொண்டு நித்திய வாழ்வில் ஆகிவிடக்கூடிய நாளானது எந்த நாளோ!

[98] நேசந்தனில் நின்றிலங்கும் நிட்சயமாங்
கலிமாவை
வாசிதனில் பழக்கி வளர்க்கும்
நாளெந்நாளோ.

[பொ—ரை] மீறிய மஹப்பத்தென்னும் உகப்பிலே நிரம்பி நிற்கப்பட்ட நித்திய வஸ்தாகிய ஹூ என்னும் கலிமாவின் இன்பக்கனியை வாசி என்னும் சுவாச மயமாய் நிற்கும்படியாக பழக்கியதை நாளா வட்டமாய் வளரச்செய்து வல்லமையடையக் கூடிய நாளானது எந்த நாளோ!

[99] லாஅன இல்லா அந்த நன்றிதரும் கலிமாவில்
லாஇல்லாதனை நீக்கி நாடும் நாளெந்நாளோ.

[பொ—ரை] லாஅன என்னும் நான் என்பது இல்லை எல்லாம் நீ என்னும் கலிமாவில் லாஇல்லா என்னும்

ஷிர்க்கை விலக்கி நீ என்பதில் நாட்டம் பூண்டு வாழ்கின்ற நாளானது எந்த நாளோ!

[100] லாபாஇல இல்லல்லாஹு வெனுமொழியில்
லாமவ்ஜூத இல்லல்லாஹ்வை
நாடுநாளெந் நாளோ.

[பொ-ரை] லாபாஇல இல்லல்லாஹ் வென்று செய்கின்ற திக்றில் லாமவ்ஜூத இல்லல்லாஹ் வென்று நாட்டத்தில் வைத்து திக்று செய்கின்ற நாளானது எந்த நாளோ!

[101] லாஇலாஹ இல்லல்லாஹு லாமலிபு
ஹாவுமல்லால்
லாஹற்பபீஹாவில் லாகிரியா மெந்நாளோ.

[பொ-ரை) லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவில் குபிடும் நபிய்யும் இதுபாத்தும் இருப்பதால் ஷெய்கின் சமுகத்தில் அக்குபிரைத்தள்ளி நபிய்யும் இதுபாத்தும் செய்து கடைத் தேறவேண்டிய விதம்போல் செய்து கொள்ளும் நாள் எந்த நாளோ!

[102] இஷாறத் தலிபுஇலா,
அஹதிய்யத்ததுவுமாய்
நிஷானியாம் லாம்தான் நிரம்பும்
கமாலளவில்.

[பொ-ரை] இலா அஹதிய்யத்து என்பதில் இஷாறத் என்னும் சயிக்கினை அலிபைச் சுட்டிக்காட்டி யிருக்கின்றது. அதற்குக் குறிப்பாக லாம் தான் கமாலிய்யத்தளவில் நிரம்பி யிருக்கின்றது.

[103] பிஷாறத்து ஹாஹறுபு ஹுவிய்யத்திலே
தாஞகி
உஷாறற்று நின்று ஒடுங்கும் நாளெந்நாளோ



(பொ-ரை) ஹாஎன்னும் ஹறுபு ஹுவிய்யத்திற் சேர்ந்து போகும்படி ஸ்மரணையற்று நின்று அந்த ஹுவில் ஒடுங்கிப் போகக்கூடிய நாள் எந்த நாளோ!

(104) மந்திரமாங் கலிமாவை மறவாமலே யெனது
சிந்தைதனில் வைக்கவருள் செய்யும்
நாளெந்நாளோ.

(பொ-ரை) மூலமந்திரப் பொருளாகிய ஹு என்னும் கலிமாவின் தத்துவத்தை என்னுடைய சிந்தையாகிய நாட்டத்தில் வைத்துப் பொதியும்படியாக, றப்பே உன் திருவருளைச் செய்கின்ற நாள் எந்த நாளோ!

(105) தன்ஸீஹும் தஷ்பீஹும் தன்ஸீஹு
மஹ்லதுவும்
இன்ஸானில் நின்று இலங்கும்
நாளெந்நாளோ.

(பொ-ரை) தன்ஸீஹ் என்னும் தூய்மையும் தஷ்பீஹ் என்னும் உவமையும் தன்ஸீஹ் மஹ்லென்னும் கலப்பற்ற தூய்மையும் இன்ஸானில் அதாவது சூக்கும ஜடலமாகிய நினைவளவில் நின்று இலங்கக்கூடிய நாள் எந்த நாளோ!

(106) லைஸக்க மிதுலிஹி ஷைஉன்னென்ற
சொல்லதினில்
லாசக்க ரெண்டுமொன்றாய் நாடும்
நாளெந்நாளோ.

(பொ-ரை) வஸ்தடங்கலும் எது? என்றதில் எழுந்த நாட்டமானது சர்வமும் நான் என்று நிரம்பி நின்ற ஹு வென்னும் தொனியில் சக்கில்லாமல் அவ்விரண்டும் ஒன்றுபட்டுக்கொண்டு நின்று நாடும் நாளானது எந்த நாளோ!

(107) மின்னொளிரும் காபதற்கு மிதுலின்
மஉனுவெடுத்து
தன்னொளிவில் தஷ்பீஹைத் தரிக்கு
நாளெந்நாளோ.

[பொ—ரை] மின்னின் பிரகாசம்போல் வெட்டி மறையக்கூடிய ஜெகஜோதியான காபுக்கு மிதுலின் மஉனுவாகிய றப்பின் உவமையை வைத்து அதைத் தன்னொளிவாகிய வஹ்தானிய்யத்தில் நிலைக்கும்படியாக தஷ்பீஹ் என்னும் தரிபாட்டில் தரிபடுத்துகின்ற நாள் எந்த நாளோ!

(108) காபுதான் ஸாயிதாய் கலந்திருக்கும்
வேளைதனில்
மாபீஹி தஷ்பீஹாய் வணங்கு
நாளெந்நாளோ.

[பொ-ரை] காப் என்னும் ஒளிவில் நாட்டமானது கலந்திருக்கும் ஐம்ஆகிய சமயம் சர்வமும் அவன் என்று தஷ்பீஹில் ஷுஹூது செய்கின்ற நாளானது எந்த நாளோ!

[109] ஒஹுவஸ்ஸமீ உல்பஸீ றென்றோது
முண்மைதனில்
பஹுமாய்த் தஹ்லீலைப் பகரும்
நாளெந் நாளோ.

[பொ—ரை] பார்வை, கேள்வி அடங்கலும் அவனில் நின்றும் நடைபெறுகிறது என்ற உள்ளமையின்படி தன்னை இல்லாமையாக்கி தஹ்லீல் என்னும் கலிமாவை விளக்கமாக ஓதும் நாளானது எந்த நாளோ!

[110] ஒஹுவஸ்ஸமீ உல்பஸீ றென்றொளிரும்
பார்வை கேள்வி
லகுவாக வந்து ஒன்றாய் லபிக்கும்
நாளெந்நாளோ.

(பொ—ரை) ஜடலத்தின் ஊசாட்டக் கருவிகள் முற்றும் அவனில் நின்றும் அசைவு பெறுகிறது என்பதன் கருத்தில்



கொழுவப்பட்டிருக்கும் பார்வை கேள்வி என்னும் புலன் பொறிகளெல்லாம் இலேசான பாதையில் ஒன்றுபட்டு ஒடுங்கக்கூடிய நாளானது எந்த நாளோ!

(111) ஒருபாகம் தன்ஸீஹும் ஒருபாகம்
தஷ்பீஹும்
இருபாகம் ரண்டுமொன்றா யிருக்கும்
நாளெந்நாளோ.

(பொ—ரை) தன்ஸீஹ் தஷ்பீஹ் என்ற இரண்டு பாகங்களையும் ஒரே பாகத்தில் தரிபடுத்தி ஹுவிய்யத்தில் நாட்டம் ஒன்றுபட விட்டுப் பொருந்திக் கொள்கின்ற நாள் எந்த நாளா!

(112) குல்லுன் லஹுகானித் தூனென்ற
சொல்லதனில்
அல்லும்பகலு மமையு நாளெந்நாளோ.

(பொ--ரை) வஸ்தடங்கலும் அவனுக்கு வழிபடுகின்றது என்ற ஆயத்தின் பொருளின்படி நான் என்றதை பஞு செய்து அவனில் ஒன்றுபட்ட குணத்தில் குடிகொண்டு சதா காலமும் தரிபடுகின்ற நாள் எந்த நாளோ!

(113) வாசி பன்னிரண்டும் வகையா
யொடுங்குமுதல்
நேசமதிலே யடுவை நிறுத்து
நாளெந்நாளோ.

(பொ—ரை) பன்னிரண்டு சரங்களாய் பிரிந்தோடி வரக்கூடிய சுவாச கலைகளை அதன் பக்குவப் பிரயோகம்போல் ஒடுங்கி விடுவதற்கு முந்தியே மஹப்பத்தென்னும் திருவடுவை நிலை நிறுத்தி விடக்கூடிய நாளானது எந்த நாளோ.

(114) நான் என்பதைப் பார்க்கில் நான்
என்பதைக் காணேன்
தானென்பதிற் கூடித் ததும்பி நிற்ப
தெந்நாளோ·

(பொ—ரை) நான் என்ற இருவினை மொழியைக் கூர்ந்து நோக்கும்போது இந்த ஜடலத்தில் நான் என்பதற்குச் சொந்தமான ஒன்றையும் காணவில்லை· எல்லாம் அவனுடைய ஊசாட்டமாகவே இருப்பதினாலே அவன்தான் என்னும் உஜூதில் ஒன்றுபட்டு விரவிநின்று சதா ஆநந்த வெள்ளத்தில் நிரம்பிநின்று ததும்புகின்ற நாள எந்த நாளோ!

(115( கோனுங் குடிபதியுங் குல்லுமவன் தானான
தேன் இன்பத்தை யருந்தி தெவிட்டு
நாளெந்நாளோ.

(பொ-ரை) ஆலத்தின் எக்கோணங்களிலும் அரசனுங் குடிபடைகளாயும் இருக்கப்பட்ட சகல ஜீவகோடி யண்டங்களும் அவனில்தான் இருக்கின்றது, என்ற ஹூவாகிய தேனையுண்டு பேரின்பத்தில் தெவிட்டுகின்ற போகத்தின் நாளானது எந்த நாளோ!

—முற்று—

# காரணமாலை

இஃது

காயல்பட்டணம் காமில் வொலி ஹஸ்ரத் உமறொலிய்யுல்லாஹ் நாயகத்தின் கனிஷ்ட புதல்வர் அல்-ஆரிபு பில்லாஹ் முஹ்யித்தீன் லெப்பை ஆலிம் வொலிய்யுல்லாஹ் அவர்களால் தொகுக்கப்பட்டது.

அல்லாஹ்வைப் போற்றி அஹ்மதிரஸூல் நபி மேல் நல்ல ஸலவாத்தை நடத்தியே சொல்ல நினைத்தேன் உமறொலியின் நிச்சயமதில் சிலதை மனத் தாமரை மலரவே.

## கலித்துறை

ஆரணம் தன்னை இறக்கிவித்தோனை, அலர்ந்தசசி பூரணந்தன்னை அழைத்தே சுவனம் புரக்க வெள்ளை வாரணம் தன்னில் வருவோரைப் பார்த்து வளர் உமறு காரணம் தன்னில் புகல்வேன் சிலதை கருத்துறவே. ஓரெழுத்தாம் ஹூவில் உபாயமாய் தரந்தே பேரெழுத்தால் ஞான பரவெளியிலானோனே கூரெழுத்தினுள்ளே குறைந்தெழுதும் பிஞ்செழுத்தில் ஈரெழுத்தூர் காரணம் இசைத்திட நீ காப்பாய்!

## வேறு

ஆதிரப் பொருவனை அவன்றந்தூதரை தீதரயார் ஹஸன் ஹுஸைன் செஷ்கு அப்துல் காதிரை புகாரீயை கருத்திருத்தியே கோதரக் காரணமாலை கூறுவாம்.

காரணமாய் வந்த பீரே, செய்கொலி
ஹாஜி உமறெங்கள் ஸாஹிபும் நீரே,
காரணமாய் வந்த பீரே, ஃ

தாரணி புகழும் புகாரீ, வொலியுல்லாஹ்
தன்னுரைத்தழைத்திடும் நன்னவத்தோரே,
ஆரணம் நாவில் மருமல், ஓதும்
ஆரிபே அடியேனுக்கருள் புரிவீரே. ஃ

(காரண)

புலி அரி மிகுந்த கான, கத்தில் பகல்
பொழுதடைந்திறை தன்னை தொழுதிடும் வக்த்தில்,
மலிவாக அரியுடன் அரசும் பதம்,
வருடிப் பூந்திடச் செய்த குருபீடம் நீரே. ஃ

(காரண)

சிவிகை மேலுமைச் சுமந்திடவே, காபிர்
திரண்டடுத்திடச் சீஷர் வெருண்டோட-வின்மேல்,
செவிதாக நிறுத்தியே நடத்தச் செய்த,
தேவரீரே எந்தன் பாவம் தீர்ப்பீரே. ஃ

(காரண)

இரவினில் தனித்தேகும் கானல், தேவு
இடியென முழங்கக் கண்டிடவென அடுத்தே,
வருவதைக் குறித்தெதிர் நோக்க அஞ்சி,
வாய்விட்டுடன் ஓடிப்போய் விட்டதாமே, ஃ

(காரண)

பரந்த பேராற்றினில் நடக்க, தண்ணீர்
பரண்டை மட்டளவான தறிந்தோரய்யன் வந்,
திரந்தொரு சுதன் தனைக் கேட்க,
தாம்பூல் எச்சி ஈந்திடச்சுதன் பெறச் செய்தமேரே. ஃ

(காரண)



தக்காரம் ஈரூரிலோர் நாள், இரு
தலைவர்கள் அழைத்திட நலதென உரைத்தே,
அக்கணம் ஒரு நேரம் இருவீட்டன்னம்,
அருந்திடும் வொலியென இருந்தவர் நீரே, ஃ

(காரண)

உயிரிழந்திறந்திடும் பூனை, ஐதுபு,
வக்த்தினிலு மதுடலதின் மீதிலுறவே,
தைரியத்துடனெழுந்தோடச் செய்த,
தையாளர்பையலை உய்ய கொள்வீரே, ஃ

(காரண)

ஸெய்யிதபூபக்ருபம்மோ, டெதிர்ச்
செய்தே முனிந்திட ஏதும் அந்நேரம்,
கையை நிறுத்தி எவர்க்கும் நலம்,
காட்டி தலாகினைக் கேட்டு விட்டோரே, ஃ

(காரண)

அனைவரும் மழைதேடிவரவே, உங்கள்
அருமை மைத்துனர் தம்மையுருமையோடழைத்தே,
மனையில் செங்கலை எடுத்தடுக்கச் சொல்லி,
வைக்கவே திக்கெங்கும் மழை பெய்வித்தோரே, ஃ

(காரண)

மகவெல்லாம் உயிர் போக மயங்க, உங்கள்
மைத்துனராளினி பெற்றிடு மகள் என்,
மகவுக்காமென உரை வழங்கி அந்த,
வகைப்படிகல்யாணம் நடப்பிவித்தோரே. ஃ

(காரண)

நாகூரிலுமது ஹாலறிய, ஒரு
நரர் வெள்ளி இரவினில் நடுச்சாமம் வரவே,
தேகம் துண்டாய்க்கிடந்திடக் கண்டகம்,
திறக்க நஸீஹத்துப் பெறக் கொடுத்தோரே. ஃ

(காரண)

பூரணமதி தர சுண்ணுன், வெள்ள
புதியகரண்டகமதிலழைத் தோரே,
வாரணம் வழிகாட்டப் பாதைபோந்த,
வள்ளலே பிள்ளை மேலுள்ளம் வைப்பீரே. ஃ
(காரண)

ஸாலிஹு மலைக்கேகும் கானில், மாதர்
தடுக்க அண்டுரையாமல் நடக்க அங்கிருபேர்,
ஸாலிஹு உமறே இங்குமக்கு புகாரீயுத்,
தரவில்லை தரிக்கவென்றுரைக்க மீண்டோரே. ஃ
(காரண)

அழியாத நாயன்லிகாவுக், கும்மை
அருமையோடழைக்குமுன் ஒரு மூன்று நாளாய்,
மொழியெல்லாம் அரபால் முரீதோர் நாட்டம்,
மொழியவே அவர் மனம் தெளியச் செய்தோரே. ஃ
(காரண)

ஆவென்ற சொல்லாலமைத்தே, ஆளும்
அல்லாஹ் ஐனுபினில் சொல்லும் அந்நேரம்,
ஹூ வென்ற சொல்லுடன் தக்பீர் கட்டி,
கூடும் ஹள்ரத்தில் நாடிச் சென்றோரே. ஃ
(காரண)

குதுல்கஃதாபதினுங்கில், இஷா
தொழும் நேரம் தெளிவானவெள்ளியில் ஹிஜ்ர,
த்துல்குமோராயிரத்திருனூற்றீ ரெட்டில்,
சேர்ந்தேலிகா இடஞ்சார்ந்திருந்தோரே. ஃ
(காரண)

என்ணிலடங்காப்புதுமை, ஹால்
ஹயாத்தில் நடாத்தி வபாத்தின்பின் அது போல்,
கண்ணில் அடங்காத கஷ்பு கராமாத்து,
காட்டியகீன் எல்கை நாட்டிய பீரே. ஃ
(காரண)



பூமணமேவும் தைக்காவில், வேத
புர்கானை கரந்தோனை உறுக்கிடக் கனவில்,
தாமதியாதுடன் வரவே செய்த,
தாதாவே தமியெனுக்காதாரம் நீரே. ஃ
(காரண)

வெள்ளி இரா ராத்திபோதும், அந்த
வேளையில் பைத்தொன்று மறக்கவும் பீர்பேர்,
உள்ள பிள்ளைய தர்காவுள்ளிருந்,
தொருசத்தம் விழித்தழைத்துரைத்தவர் நீரே. ஃ
(காரண)

காபிர் வதைத்த கறுப்புக், குயிர்
காட்டென புத்திடம் கேட்டும் வராமல்,
தாபத்துடன் உம்மைக்கேட்க சீவன்,
தானெடுத்தோட ஈமான் கொடுத்தோரே. ஃ
(காரண)

மரக்கலம் இழந்துங்கள் இளைய, மகன்
மயங்கி கங்கையில் விழுந்தியங்கிடும் பொழுதில்,
உடுக்கமாய் சடுதியிலெடுத்தே ஓடும்,
உடுவின்லேற்றிய குருவானோர் நீரே. ஃ
(காரண)

கரி பெருத்திடும் கானிலோர்நாள், மத
களிருமதிளைய சேயினை கடுந்தடுத்தே,
வர உமதடி பரவுடன் வந்ததை,
வருத்தம் செய்தெடுத்தோட துரத்தி விட்டோரே. ஃ
(காரண)

இருநூறும் எழுபதும் இடையில், நாற்ப
திலங்கும் திருநாமம் துலங்க வந்தோரே,
ஒரு நூறும் அறுபத்திமூன்றின் இஸ்ம்,
உடையோனை ஆள்வது கடனுமக்காமே. ஃ
[காரண]

மஹ்மூது சுதன் அப்துல் காதிர், மக
வாக என் தந்தையாக வந்தோரே,
முஹ்யித்தீ னெனும் நாமமுடைய நிறு,
மூடனை நாளை மன்றுடிக் கொள்வீரே. ஃ

[காரண]

ஆதி திருப்புகழ் கொண்டும், எங்கள்
ஆல நபிமேல் ஸலவாத்து கொண்டும்,
ஓதி இம்மாலை முகித்தேன் ஹுப்பாய்,
உரைப்பவர் இறையவன் உவப்புறுவாரே. ஃ

[காரண]

ஓதுவர் கேட்பவர் வாழீ, இதை
உரைத்தோன் சகோதரர் உகுத்துடன் வாழீ,
மாதா பிதா வாழீ இரு,
மரபுகள் சம்பத்துப் பெருகிட வாழீ. ஃ

[காரண]

ஆமீன் அல்லாஹும்ம ஆமீன் எனக்,
கருள் செய்வாய் யாறப்பல் ஆலமீன்,
முஃமின் நபி பொருட்டாலே சொர்க்கம்,
முந்த உதவி செய் எந்தன் இலாஹீ. ஃ

[காரண]

''கல்லைக் கழுகினுலே'' என்னும் பதம் இது.

இதுவும் ஹஸ்ரத் உமறுலி நாயகம்
அவர்களால் இயற்றப்பட்டதே.

* * *

கல்லைக் கழுகினுலே
கையைக் கழுகினதால்
கல்பதிலே யொரு
ஹக்கன் திருநோக்குண்

கரை சேரலாம்
கறை போமோ
நாளைக்கறுபது
டாகுமென்றுர் நபி.

ஃ

அல்லாஹ் வடிமைதன்
அவன் தன் முதலையும்
எல்லாப் பொழுதிலுங்

ஸூறத்தளவிலும்
அமலையும் பாரான்
கல்லைப் பார்ப்பா
னென்றும்

ஏகன் நபியோதின

தறியாயோ.

ஃ—கல்லை—

மல்லான போரும்
மாற்றுலுண்டாக்கு
இல்லாமலாக்கியே
எப்பொழுதுந்
தௌஹீதால்

கிபுரும் ஹஸதையு
மோகவாசடங்கலும்
ஏகன் கிருபையால்

துப்பரவாகவே.

ஃ—கல்லை—

பொல்லாப் பொறியும்
போக்கி ஜமாலை

எல்லாக்கிதாபு
மெரிநரகிற் சென்று

புலனுங் கரணமும்
ஷுஹூது
செய்யாதவர்
மெழுத்தறவோதினு
வீழ்வாரது நிசம்.

∴—கல்லை—

மஹ்மூது சுதன் அப்துல் காதிர், மக
வாக என் தந்தையாக வந்தோரே,
முஹ்யித்தீ னெனும் நாமமுடைய நிறு,
மூடனை நாளை மன்றுடிக் கொள்வீரே. ஃ

[காரண]

ஆதி திருப்புகழ் கொண்டும், எங்கள்
ஆல நபிமேல் ஸலவாத்து கொண்டும்,
ஓதி இம்மாலை முகித்தேன் ஹூப்பாய்,
உரைப்பவர் இறையவன் உவப்புறுவாரே. ஃ

[காரண]

ஓதுவர் கேட்பவர் வாழீ, இதை
உரைத்தோன் சகோதரர் உகுத்துடன் வாழீ,
மாதா பிதா வாழீ இரு,
மரபுகள் சம்பத்துப் பெருகிட வாழீ. ஃ

[காரண]

ஆமீன் அல்லாஹூம்ம ஆமீன் எனக்,
கருள் செய்வாய் யாறப்பல் ஆலமீன்,
முஃமின் நபி பொருட்டாலே சொர்க்கம்,
முந்த உதவி செய் எந்தன் இலாஹீ. ஃ

[காரண]

''கல்பைக் கழுகினுலே'' என்னும் பதம் இது.

இதுவும் ஹஸ்ரத் உமறொலி நாயகம்
அவர்களால் இயற்றப்பட்டதே.

* * *

கல்பைக் கழுகினுலே
கையைக் கழுகினதால்
கல்பதிலே யொரு
ஹக்கன் திருநோக்குண்

கரை சேரலாம்
கறை போமோ
நாளைக்கறுபது
டாகுமென்றார் நபி.

ஃ

அல்லாஹ் வடிமைதன்
அவன் தன் முதலையும்
எல்லாப் பொழுதிலுங்
ஏகன் நபியோதின

ஸூறத்தளவிலும்
அமலையும் பாரான்
கல்பைப் பார்ப்பா
னென்றும்
தறியாயோ.

ஃ—கல்பை—

மல்லான போடும்
மாற்றுலுண்டாக்கு
இல்லாமலாக்கியே
எப்பொழுதுந்
தௌஹீதால்

கிபுரும் ஹஸதையு
மோகவாசடங்கலும்
ஏகன் கிருபையால்
துப்பரவாகவே.

ஃ—கல்பை—

பொல்லாப் பொறியும்
போக்கி ஜமாலை
எல்லாக்கிதாபு
மெரிநரகிற் சென்று

புலனுங் கரணமும்
ஷுஹூது
செய்யாதவர்
மெழுத்தற வோதினு
வீழ்வாரது நிசம்.

.˙.—கல்பை—

அம்மாறத் தென்னும் நபுஸானதின் குண
மமலுந்தம உங் கலபுஞ் ஷஹுவத்தும்
எம்மாத்திரமாகி லும்மிருந்தாகிலும்
ஏகன் ஜனுபினில் சேரவொட்டாது காண்.
ஃ—கல்பை—

பொய்யுங் களவும் பொருந்தியிருக்கிற
புந்தியை நந்தி பொருட்டதினலே
மெய்யாய் விளக்கியே வேதப் பொருளதை
விஸ்தாரமாகவே உஸ்தாது கிருபையால்
ஃ—கல்பை—

அல்லும் பகலுந்தா னன்பத்தோரட்சர
மானபொருளதை நேமத்திலாக்கியே
சொல்லுஞ் செயலு மறவுமொன்ருகவே
தோத்திரஞ் செய்ததைப் பார்த்திருந்தே கொண்டு.
ஃ—கல்பை—

வாசி பனிரெண்டு காலா லெழுந்திடும்
வஸ்துவை நன்ருய் தெளிந்து கொண்டாடியே
நாசியினுலாறு கல்பானதி லொன்றை
நாட்டமாய் மூச்சுடன் கூட்டியொன்ருக்கியே.
ஃ—கல்பை—

இருளிலிருந்த பொருளை வெளியாக்க
எண்ணெயுந் திரியு மெரியும் விளக்குமாய்
குருதரும் பொருளு முடலு முயிருங்
கூட்டியே மூச்சுடன் நாட்டியே தீபத்தால்.
ஃ—கல்பை—

நாட்டந்தருமின்ஸான் காமில் முகம்மிலாம்
நந்தியாம் ஸெய்யித் முஹம்மது புகாரியைத்
தேட்டமா யெப்போதும் புந்தியில் நாட்டியே
சிந்தை செய்தவுடன் வந்தருள செய்குவார்.
ஃ—கல்பை—

அச்சிடப்பட்டது, த ரூபி பிரிண்டர்ஸ்
115, புதிய சோனகத் தெரு
கொழும்பு—12